தமிழ்நாடு
பொறியியல்
சங்கம்
போதுப்பணித்துறை

1985

பவழ விழா

1910

மலர்

उप राष्ट्रपति, भारत
नई दिल्ली

VICE-PRESIDENT
INDIA
NEW DELHI

May 21, 1985.

I am glad to learn that the Tamil Nadu Engineering Association, P.W.D., Madras is celebrating its Platinum Jubilee on the 1st and 2nd June, 1985. I send my best wishes for the success of the Celebrations and wish the Association continued success.

R. Venkataraman

(R. Venkataraman)

Smt. Rajeshwari Tandon
Social Secretary to PM

प्रधान मंत्री कार्यालय
नई दिल्ली - 110011
PRIME MINISTER'S OFFICE
NEW DELHI - 110011

May 23, 1985

Dear Shri Sriraman,

The Prime Minister Shri Rajiv Gandhi sends his good wishes to the Tamil Nadu Engineering Association, P.W.D. on the occasion of its Platinum Jubilee being celebrated at Madras from 1st-2nd June, 1985.

Yours sincerely,

(Rajeshwari Tandon)



Gopalkrishna Gandhi
SECRETARY TO THE GOVERNOR

RAJ BHAVAN
MADRAS-600 022

Dated 22-5-1985

Dear Thiru Chandrasekharan,

The Governor has directed me to thank you for your letter dt 17 May, inviting him to participate in the Platinum Jubilee of the Tamil Nadu EngineeringAssociation on the 1st and 2nd June.

The Governor regrets that owing to his being out of station on the dates in question, it will not be possible for him to accept your kind invitation. He extends his best wishes for the success of the function.

Regards

Yours sincerely,

(Gopalkrishna Gandhi)

HON'BLE MINISTER
MRS.MARAGATHAM CHANDRASEKAR
MINISTER FOR SOCIAL WELFARE
GOVT OF INIDA.



HON'BLE CHIEF MINISTER
DR. M.G. RAMACHANDRAN
GOVT OF TAMIL NADU.

டாக்டர் இரா. நெடுஞ்செழியன்,
எம்.ஏ., டி. லிட்.
நிதி அமைச்சர்,

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள் 23.5.1985

தமிழ் நாடு பொறியாளர் சங்கத்தின் பிளாட்டினம் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான பெருமுயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்ற செய்தி அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

தமிழ் நாடு பொறியாளர் சங்கம் ஆற்றி வருகின்ற பணிகள் பல்லோராலும் சிறப்பாகப் பாராட்டப் பெற்று புகழப்படுபவைகளாகும்.

இந்தச் சங்கம் மேலும் மேலும் வளர்ந்து, அரும் பணிகள் பலவற்றையும் சிறப்பாக ஆற்ற என் உளங்கனிந்த வாழ்த்துக்கள் பலவும் உரியவாக!

இரா. நெடுஞ்செழியன்

HON'BLE

DR. M.P. SIVAGNANAM.

CHAIRMAN

LEGISLATIVE COUNCIL

TAMIL NADU.

இராம. வீரப்பன்
செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

நாள் 23.5.85

தமிழக பொறியாளர்கள் சங்கம் பவள விழா கொண்டாடுவதறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இக்கழகம் பிற அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டு ஒற்றுமையுணர்வும் தோழமையுணர்வும் வளர பாடுபட்டு வருவது பாராட்டுவதற்குரியதாகும். பொதுநல வளர்ச்சியிலும் இந்த அமைப்பு தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, ஆர்வத்துடன் செயல்பட்டு மென்மேலும் வளர்ச்சியுற வேண்டும் என்பது எனது பெருவிருப்பமாகும். தமிழக பொறியாளர் கழகத்தின் பவள விழா வெற்றி பெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. வீரப்பன்

யா. சை. மு. யூசுப்
பொதுப்பணித்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009.
நாள் 29.5.85

வாழ்த்துச் செய்தி

1910-ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, பொதுப்பணித்துறையில் முக்கிய சங்கமாகத் திகழும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் 75-ஆம் ஆண்டு நிறைவு விழா, பவள விழா கொண்டாடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டின் ஆக்கப்பணிகளில் பொறியாளர்களின் பங்கு மிகப் பெரியது; பெரிதும் பாராட்டுக்குரியது.

பவள விழா நன்னாளில் பொறியாளர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்து, விழா இனிதே நடைபெற இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

29/5/85

S. RAMACHANDRAN
MINISTER FOR ELECTRICITY

FORT ST. GEORGE
MADRAS-600 009

Dated 25-5-85

MESSAGE

It is a matter of immense pleasure to learn that the Tamil Nadu Engineering Assciation will be celeberating the Platinum Jubillee on the First and Second of June this year. I hope that the occasion will infuse a sense of unity and comraderie among the members. Further, I congratulate the association for its role in spearheading the cause of the people for the betterment of the society.

I wish the Platinum Jubilee all success.

(S. RAMACHANDRAN)

DR. H. V. HANDE
MINISTER FOR HEALTH

FORT ST. GEORGE
MADRAS-600 009

Dated 23-5-1985

MESSAGE

I am very happy to learn that the Tamilnadu Engineering Association is celebrating the Platinum Jubilee shortly. I commend the dedicated services rendered by the association in bringing the like-minded people under one banner and solving the problem through discussion and mutual understanding. I congratulate the members on the occasion.

I am very glad to send my good wishes for the sucess of the Platinum Jubilee celebrations.

(H.V.HANDE)

To
The General Secretary,
Tamilnadu Engineering Association,
Chepauk, Madras-5.

ந. நல்லுசாமி, பி.ஏ., பி.எல்.
மீன் வளத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை--600 009

நாள் 25.5.85

அன்புடையீர்,

வணக்கம்.

பொதுப்பணித்துறை தமிழ்நாடு பொறியியல் சங்கம் பவள விழாவினை வரும் 1.6.85, 2.6.85 ல் நடத்த விருப்பது அறிந்து மகிழ்ச்சி.

பொதுப்பணித்துறையில் பொறியாளர்களின் பணி மிக சிறப்பு வாய்ந்தது. சிறப்புமிக்க தங்களது பணியை போற்றும் வகையில் பாரத குடியரசின் முதன்மைத்தலைவர் கலந்து கொண்டு சிறப்பிக்கும் இவ்விழா சிறப்பான முறையில் நடைபெற எனது வாழ்த்துக்கள்.

தங்கள் அன்புள்ள,
(ந. நல்லுசாமி)

பெறுநர்:
திரு. சி.ப. சண்முகம்,
தலைவர்,
தமிழ் நாடு பொறியாளர் சங்கம்,
பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம்,
சென்னை. 5

Message received from **Thiru H.B.N. Shetty, I.A.S.** Commissioner and Secretary to Government, Public Works Department, Madras-600 009.

It gives me great pleasure to know that the Tamil Nadu Engineering Association, Public Works Department, will be celebrating its Platinum Jubilee on Ist and 2nd June, 1985 at Madras and I offer my warmest greetings and good wishes on this occasion.

The contribution made by the Engineering personnel in their sphere of activity for the welfare of the people of Tamil Nadu and for its development has been significant and impressive. I am sure that this tradition will be kept up in the future also. The Platinum Jubliee Celebration offers you an opportunity to recount your past achievement and to rededicate yourselves to the cause of the people of Tamil Nadu in particular and to the Nation in general.

I wish the celebrations all success.

(Sd.) H. B. M. Shetty

Message received from Thirumathi **J. ANJANI DAYANAND,** I.A.S. Special Commissioner & Secretary to Government and Agricultural Production Commissioner. Madras-600 009.

I am happy to know that the TamilNadu Engineering Association, Public Works Department is celebrating its Platinum Jubilee on 1st and 2nd June. I convey my warmest greetings and good wishes to the members of the Association.

(Sd.) J. Anjani Dayanand

16-5-85

A 'DIPLOMA'TIC ENGINEER
WITH NO CRAZY FOR DEGREES !

"BHARATHA RATHNA"

Dr. M. VISWESWARAYA

WE SALUTE YOUR SERVICES &
CALIBRE WITH GRATITUDE

டிப்ளமா பொறியாளரின் குலவிளக்கே !
இப்பொன்னாளில் உன்னை நினைவு கூர்வதில்
பெருமைப்படுகிறோம்



Aushutosh Kaushik

who sacrificed his life for the cause of
Diploma Engineers
on 15th January 1980

வீரமறவனின் தாலாட்டுக் கவிதை உள்ளே .....

BRANCH OFFICE

Name of Branch	Chairman	Vice-Chairman	Secretary
Madras	G. Subramani	M. Deenadayalan	J. Sundara-moorthy
North Zone			
Chengleput	G. Annamalai	K. G. Radha krishnan	D. Alaganandam
Cuddalore	G. Viswanathan	K. B. Appandai-rajan	V. Amaranathan
Vellore	S. Subbusamy	K. Arumugam	N. Sundara-moorthy
South Zone			
Madurai	M. Lakshmanan	R. Jayaraj	G. Subramanian
Periyakulam	K. Rajangam	A. Srinivasan	V. Rajaraman
Paramakudi	S. Sundaresan	R. Gnanpandi-than	T. R. Sachida-nantham
Tirunelveli	M. A. Goldwin-Immanuel	K. P. Damodaran Nair	C. Dasaian
Kanyakumari	V. Garudappan	Shanmuga-sudaram	D. Veeraraj
Virudhunagar	A. Dhanapal	L. Ramadu	S. Rajaji
East Zone			
Tiruchi	T. N. Kalyana-sundaram	V. Sivanandam	S. Rathinam
Pudukcttai	J. Thomas	C. Murugesan	V. Jayaraman
East Tanjore	S. Balasubra-manian	K. Selvaraj	S. Manickam
West Tanjore	A. Shanmuga-nathan	M. Thanicka-chalam	S. Kulandaivel
Karaikudi	B. H. Subra-manian	Y. Meenakshi-sundaram	K. Arumugam
West Zone			
Salem	S. Anandan	K. Srinivasan	R. Pattayan
Dharmapuri	A. M. Babu	T. Thiagarajan	Y. Sivaraman
Coimbatore	P. Jayababu	B. R. Beeman	A. Rajagopal
Pollachi	C. Somasundaram	M. Chand-mohammed	A. Jayaraju
Periyar	D. D. Samuel	V. Ramanathan	A. Chinnappa-Padayachi

AWAKE ! ARISE !! AND STOP

BEARERS FOR 1984-85

Joint Secretaries		Treasurer cum C. E. C.
S. Vaidhilingam	T. Ramachandran	A. Muniappan
R. Rajasekaran	M. V. Sukumar	M. Ekanathan
K. Sundaram	C. N. Viswanathan	M. Bhoopalan
P. Periasamy	G. S. Venkatraman	K. A. Pachiappan
C. Muthulingam	G. Balakrishnan	M. Oorkavalan
S. Gururajan	G. Jagadeesan	T. Nagarajan
S. Sigamani	P. Sivasamy	P. Natarajan
A. Subramanian	P. Rengeswaran	K. Subramania Pillai
M. Singaravelu	A. Veluchamy	N. Sampath
S. Sivasubramanian	M. K. V. Palaniappan	K. Shivaji Rao
R.S. Venkatasubramanian	A. V. Lawrence	N. Parthasarathy
C. Chellaiah	K. M. Veeramalai	A. Kaliaperumal
B. Muthuperumal	B. Selvaraju	S. Kaliappan
L. Gnanamani	K. Jayaraman	K. V. Raj
N. Pitchaimoorthi	S. Ramakrishnan	R. Gurumoorthy
P. C. Periathambi	R. Ramanathan	N. Sundar
N. Jagadeesan	C. Sundar	S. Kuppusamy
A. Velautham	T. Palanisamy	S. Venkataramani
G. Suresh Babu	C. Pakkiam	T. P. S. Vairava-sundaram
R. Palaniappan	V. Rengarajan	P. Thirunavukkarasu

NOT TILL THE GOAL IS REACHED !

CENTRAL OFFICE

	President	Vice-President	Gen. Secretary	Secretary-Organisation
·82	S. Muruganandam	C. Shanmugaperumal	A. S. Ramasamy	A. Balasubramanian
·83	S. Muruganandam	C. Shanmugaperumal	A. S. Ramasamy	A. Balasubramanian

1982-83 Ponkum Nidhi

(Ex-Officio) Chairman S. Muruganandam **Secretary** : S. Santhanakrishnan

	President	Vice-President	Gen. Secretary	Secretary-Organisation
84	C. Shanmugaperumal	C. P. Shanmugam	A. S. Ramasamy	D. Chandrasekaran
85	C. P. Shanmugam	R. Venkatasubbu	R. Sriraman	T. Parthiban

Zonal

Year	North	South
1983-84	T. Periasamy	R. Venkatasubbu
1984-85	D. Rajkumar	A. R. Ramamoorthy

All India Federation of Diploma Engineers

dent	:	Er. Sita Ram Sharma	*Secretary General*	:	Er. R.T. Kulkarani
ice-President			*Addl. General Secretary*	:	Er. F.C. Jain
f Advisor	:	Er. R.K. Dutt	*Secretaries*	:	
Prestdents	:		*(a) Central*	:	Er. Chhawan Singh, JE
) Central	:	Er. Braham Dutt	*(b) State*	:	Er. V.K. Thakur
) State	:	Er. Kaliram	*(c) E. Boards*	:	Er. H.B. Chanda
E. Boards	:	Er. S.C. Dikshit	*(d) Autonomous Bodies*	:	Er. M.P. Ranganathan
) Autonomous Bodies	:	Er. D. Kumarasamy			

BEARERS—Cont.

Secretary-Publication	Secretary-Finance	Zonal Secretaries North	West	East	South
T. P. Balasubramanian	V. Parthiban	V. S. Janikiraman	A. M. Babu	S. Muthukamatchi	M. A Goldwin Immanuel
T. P. Balasubramanian	R. Ramaiyan	G. Subramani	D. D. Samuel	N. Marimuthu	Y. Thasnavis

Committee

Treasurer : E. Ramachandran **Members :** R.K. Sundaram & A.R. Ramamoorthy

Secretary-Headquarters	Secretary-Publication	Secretary-Finance	Secretary Legal	Secretary Ponkum Nidhi
A. Balasubramaniyan	R. Ayyasamy	K. Anbumani	V. Krishnamoorthy	S. Sethuraman
V. Kothandaraman	A. Subramaniam	A.E. S. Mariadoss	P. S. Ramamoorthy & V. S. Janakiraman (from 8/84)	R. Ayyasamy

Secretaries

East	West
S. Sambandamoorthy	D. D. Samuel
K. Pattabiraman	M. Arumugam

1984-85 - Office Beares

Zonal Secretaries	Er. Kuldim Rai	*South Centre*	: Er. Kuppuswemy
North	: Ahluwalia	*South*	: Er. M. Swaminathan
West	: Er. N.K. Mandal, AAE	*Delhi*	: Er. M.L. Mittal
Centre	: Er. Pawan Tiwari, S/E	*Finance Secretary*	: Er. Ajit Singh
East	: Er. Baruna, P. Ganguli	*Editor*	: Er. A.P. Singh
North East	: Er. J.M. Baruna, AE	*Associate Editor*	: Er. D.N. Das, JE
		Associate Editor	: Er. Viswakarma
		Auditor	: Er. S.N. Sharma

Central Office Bearers of D.E.C.T. 1985-86

	Office Address	Residential Address
1. *President*	Er. M. Raghavan Executive Engineer TWAD Board	12A, Station Road, Korattur, Madras-600 680
2. *Vice-President*	Er. I Abbas Manthiri	B6, Kambar Street, Thirunagar Madurai-625 005
3. *General Secretary*	Er. T. V. Gomathinayagam, Junior Engineer/Dn. No. 99 Corporation of Madras 347, Avvai Shanmugam Salai, Madras-600 005	9/22, Ponniamman Koil St., Kottur, Madras-600 085
4. *Secretary Organisation*	Er. K. Singaravelu, Assistant Engineer/MES South 12A, First Main Road, Gandhi Nagar, Adyar, Madras-600 020	2, 3rd Main Road, Gandhi Nagar, Adyar, Madras-600 020
5. *Secretary Publication*	Er. R. Sampathkumar, Assistant Engineer, Panchayat Union Sholingur P.O., N.A. Dt.	Block 'K', No. 75 Anna Nagar, Madras-600 102
6. *Secretary Propaganda*	Er. V.S. Ganesan, Zonal Secretary, CPWD J. Es. Association Shastri Bhavan, Madras-600 006	20/207, CPWD Quarters Indira Nagar, Madras-600 020 Phone : 412812
7. *Treasurer*	Er. K. Nageswara Singh, Supervisor Grade II Chief Engineers Department Madras Port Trust, Madras-600 001	31, Bashyam Reddy II Street, Ottery, Madras-600 012

DUE RECOGNITION FOR 'DIPLOMA' ENGINEERS IN THE SOCIETY IS A MUST' FOR A DEVELOPING NATION !

இந்த மலரை மாலையாக்கியவர்கள்

ஏ. சுப்பிரமணியம்,
தலைவர்

எஸ். ஞானசேகரன்,
உறுப்பினர்

டி. பி பாலசுப்பிரமணியன்,
உறுப்பினர்

ஆர். நாகன் பிள்ளை,
உறுப்பினர்

ஆர். கே. சுந்தரம்,
உறுப்பினர்

சி. வைத்தியலிங்கம்,
உறுப்பினர்

Members of Sub Committees

I. RECEPTION COMMITTEE

1)	Er. V. S. Janakiraman	*Chairmam*
2)	Er. V. Thanigavel	*Member*
3)	Er. M. Deenadayalan	*Member*
4)	Er. B. Veeraraghavan	*Member*

II. HOSPITALITY COMMITTEE

1)	Er. A. S. Ramasamy	*Chairman*
2)	Er. Jayakumar	*Member*
3)	Er. J. Sundaramoorthy	*Member*
4)	Er. R. Selvaraj	*Member*

III. PROPAGANDA COMMITTEE

1)	Er. D. Chandrasekaran	*Chairman*
2)	Er. K. K. Subramanian	*Member*
3)	Er. T. Ramachandran	*Member*
4)	Er. S. Sundaresan	*Member*

IV. PROCESSION COMMITTEE

1)	Er. V. Parthiban	*Chairman*
2)	Er. A. Rangarajan	*Member*
3)	Er. G. Subramani	*Member*
4)	Er. V. Muthukrishnan	*Member*

V. STAGE ARRANGEMENT COMMITTEE

1)	Er. R. Nagan Pillai	*Chairman*
2)	Er. S. Periyasami	*Member*
3)	Er. D. Chandrasekaran	*Member*

செயற்குழு உறுப்பினர்கள்..... தொடர்ச்சி

Er. D. சந்திரசேகரன்,
L.C.E., B.E.

Er. K. அன்புமணி,
L.C.E.B.E.,

Er. S. சேதுராமன்,
L.C.E., B.E.,

Er. V. கிருஷ்ணமூர்த்தி,
L.C.E.

கிளைப் பொறுப்பாளர்கள்



Er. D. D. சாமுவேல், L.C.E.,
CEC மற்றும் தலைவர்
பெரியார் கிளை

Er. P. S. ராமமூர்த்தி
செயற்குழு உறுப்பினர்

Er. M. தினதயாளன்,
உப-தலைவர்
சென்னை கிளை

Er. J. சுந்தரமூர்த்தி,
செயலர்
சென்னை கிளை

கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள்....தொடர்ச்சி

Er. S. சுந்தரேசன்,
தலைவர் பாமக்குடிகிளை

Er. R. ஞானபண்டிதன்,
உப தலைவர் பரமக்குடிகிளை

Er. T. K. சச்சித்தானந்தம்,
செயலர் பரமக்குடிகிளை

Er. K. சுப்ரமணியபிள்ளை
C. E. C. திருநெல்வேலிகிளை

Er. V. கருடப்பன்,
தலைவர் கன்னியாகுமரி கிளை

Er. D. வீரராஜ்,
செயலர் கன்னியாகுமரிகிளை

Er. M. சங்காரவேலு,
இணைசெயலர் க. குமரி கிளை

Er. N. சம்பத்,
C.E.C. கன்னியாகுமரி கிளை

கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள் ...தொடர்ச்சி

Er. S. ஆறுமுகசுந்தரம்,
உப தலைவர்
கன்னியாகுமரி கிளை

Er. A. தனபால்,
தலைவர்
விருதுநகர் கிளை

Er. L. ராமுடு,
உபதலைவர்
விருதுநகர் கிளை

Er. S. இராசாசி,
செயலர்
விருதுநகர் கிளை

Er. S. சிவசுப்ரமணியன்,
இணை செயலர்
விருதுநகர் கிளை

Er. T. N. கல்யாணசுந்தரம்,
தலைவர்
திருச்சி கிளை

Er. S. ரத்தினம்,
செயலர்
திருச்சி கிளை

Er. S. மாணிக்கம்,
செயலர்
கிழக்கு தஞ்சை கிளை

கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள்.... தொடர்ச்சி

Er. B. செல்வராஜ்,
இணை செயலர்
கிழக்குதஞ்சை கிளை

Er. S. குழந்தைவேலு,
செயலர்
மேற்குதஞ்சை கிளை

Er. K. ஜெயராமன்,
இணைசெயலர்
மேற்குதஞ்சை கிளை

Er. K. V. ராஜ்,
C.E.C. மேற்குதஞ்சை கிளை

Er. B. H. சுப்பிரமணியன்,
தலைவர் காரைக்குடி கிளை

Er. Y. மீனாட்சிசுந்தரம்,
உபதலைவர் காரைக்குடிகிளை

Er. K. ஆறுமுகம்,
செயலர் காரைக்குடி கிளை

Er. N. பிச்சைமூர்த்தி,
இணைசெயலர் காரைக்குடி கிளை

கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள்.... தொடர்ச்சி

Er. T. தியாகராசன்,
உபதலைவர் தர்மபுரி கிளை

Er. Y. சிவராமன்
செயலர் தர்மபுரி கிளை

Er. C. சுந்தர்,
இணை செயலர் தர்மபுரி கிளை

Er. S. குப்புசாமி,
C. E. C. தர்மபுரி கிளை

Er. P. ஜெயபாலு,
தலைவர்
கோயமுத்தூர் கிளை

Er. A. ராஜகோபால்
செயலர்
கோயமுத்தூர் கிளை

Er. S. வெங்கடரமணி
C. E. C. கோயமுத்தூர் கிளை

Er. C. சோமசுந்தரம்,
தலைவர்
பொள்ளாச்சி கிளை

'தமிழ்நாடு பொறியியல் சங்கம்'

பொதுப்பணித்துறை பவழ விழாவிலே

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு பணிந்தளித்த விண்ணப்பம்

கோரிக்கைகள்

1. பொதுப்பணித்துறையில் பிரிவு நிலையில் மத்திய பொதுப் பணித்துறையில் உள்ளது போன்ற பணி நிலைமைகளை உண்டாக்குதல் (ஒரு வேலைக்கு ஒரே பெயர், சம வேலைக்கு சம ஊதியம்)

2. பொதுப்பணித்துறையில் பொறியாளர்கள், துறையில் சேர்ந்த நாள் முதல் 25 ஆண்டு காலம் வரை கூட எந்தவித பதவி உயர்வும் இன்றி, அதே பதவியில் மனத் தளர்ச்சியோடும், உற்சாகமின்றியும் செயலாற்றும் நிலை உள்ள காரணத்தாலும் வேறு எந்தத் துறையிலும் இந்த நிலை இல்லாத நிலைகளையும் கருத்தீற் கொண்டு பொறியாளர்களுக்கு மத்திய அரசு நிறுவனங்களில் உள்ளது போன்று "கால வரையறைப்பதவி உயர்வு" (Time Bound Promotion) வழங்க வேண்டுதல்.

3. பொறியில் தொழில் நுட்பக் கல்லூரிகளை பல்களைக்கழக ஆளுகையின் கீழ்க் கொணர்ந்து, பல்கலைக்கழகங்கள் மூலமாக புலவர் பட்டத்தை; இலக்கிய இளங் கலைஞர் (பி. லிட்) என்று மாற்றி வழங்கியதைப் போன்று, டிப்ளமாவை ஒரு டிகிரியாக மாற்றி வழங்கக் கோருதல்.

4. பொதுப்பணித்துறையில் பொறியாளர்களை குற்றப்பரம்பரையினர் போன்று கருத இடமளித்து, சொந்த மாவட்டங்களில் பணியாற்ற தடை விதிக்கும் அரசாணை 955 பொ. ப. நு. நாள் 4-8-78ஐ நீக்கல் வேண்டுதல்.

தமிழகப் பொதுப்பணித்துறையில் செயற்பொறியாளர், உதவிசெயற்பொறியாளர்/ உதவிப்பொறியாளர், இளம் பொறியாளர், வரைவாளர், மேற்கணியர், தொழில் நுட்ப உதவியாளர் ஆகிய பல்வேறு நிலைகளில் பணியாற்றும் ஊழியர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அவர்களது குறைகளைக் களைய தொடர்ந்து இச்சங்கம் பாடுபட்டு வருகின்றது. பொதுப்பணித்துறை மேம்பாடடையவும், பொறியாளர்கள் நலன்கள் காக்கப்படவும், அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் மூலமும், அம்முயற்சி கடைசி வரை பலனளிக்க முடியாமற்போகும் தருணத்தில் அறப்போராட்டத்தின் மூலமாகவும் பல்வேறு நடவடிக் கைகள், மேற்கொள்ளத் தயங்கியதேயில்லை. அரசும், அறப் போராட்டத்தின் உண்மை நிலையை அறிந்து கோரிக்கைகளை ஏற்று வாழ்வளித்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

சில சமயங்களில், பேசுவதைவிட மௌனமே மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படும்.

—மாப்பஸாஸ்

தமிழ்நாடு பொறியியல் சங்கம் 1960-ல் பொன்விழாவையும் 1973-ல் மணி விழாவையும் சிறப்புடன் கொண்டாடியது. 1985-ல் சங்கத்தின் பவழவிழா கொண்டாட எண்ணியுள்ள இந்நேரத்தில் மேற்சொன்ன சில பிரச்சனைகளைத் தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருவதைக் கடமையாகக் கருதுவதுடன், அதற்கான நல்ல 'தீர்ப்புகள் மாண்புமிகு முதலமைச்சரிடமிருந்து கிடைக்கும் என உறுதியாக நம்புகின்றோம்.

மேற்சொன்ன கோரிக்கைகளின் விளக்கங்கள் தங்களின் கனிவான பார்வைக்கு வைக்கின்றோம்.

1) பொதுப்பணித்துறையில் பிரிவு நிலைகளில் மத்திய பொதுப்பணித் துறையில் உள்ளது போன்ற பணி நிலைகளை உண்டாக்குதல்.

தமிழ்நாடு பொதுப்பணித்துறை, மத்திய பொதுப்பணித்துறை மாதிரியே பிரிவு, உட்கோட்டம், கோட்டம், வட்டம் முதலிய அமைப்புகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

மத்திய பொதுப்பணித்துறையில் பிரிவுப் பொறுப்புகளில் பணிபுரிபவர்கள் எல்லோரும் ஒரே பெயரான இளநிலை பொறியாளர் என்ற பதவி பெயருடன் பணியாற்றுகின்றனர். அவர்கள் பலவிதமான கல்வித் தகுதியான டிப்ளமா, டிகிரி பெற்றிருப்பினும் ஒரே பதவிப் பெயருடன் ஒரே விதமான சம்பள விகிதத்துடன் பணியாற்றி வருகின்றனர். தமிழகப் பொதுப்பணித்துறையில் பிரிவு பொறுப்புகளில் பொறியியல் டிப்ளமா கல்வித் தகுதி பெற்றவர் இளநிலைப் பொறியாளர் என்றும் டிகிரி பெற்றோர் உதவிப் பொறியாளர் என்றும் பதவிப் பெயர்களுடன் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஒரே வேலையைச் செய்து கொண்டு ஒருவருக்கொருவர் பணி மாற்றும் இயல்புடைய பணிகளைச் செய்து வருகின்றனர்.

மத்திய பொதுப்பணித்துறையில் தற்காலிக நியமனம் இல்லாதது மட்டுமல்லாமல், அங்கு பணிக்கு எடுக்கும் பொழுது, டிகிரி மற்றும் டிப்ளமா பொறியாளர்களுக்கு ஒரு பொதுத் தேர்வு நடத்தப்படுகின்றது. பணிக்கு எடுத்த பின்னரும் அவர்களிடம் எத்தவித வேறுபாடும் இன்றி ஒரே சம்பளப் பிரிவால் சமமான பொறுப்புகளுடன் பணி செய்து வருகின்றனர்.

நம் மாநிலத்தில் பிரிவு பொறுப்புகளுக்கு நியமனம் செய்யும்பொழுது கடைப் பிடிக்கப்படும் விகிதாசாரம், ஒதுக்கீடு முதலிய காரணங்களால் பல டிப்ளமா பொறியாளர்கள் பணி உறுதிபெறாத நிலையிலேயே தங்களது உழைப்பின் பெரும் பகுதியை கழித்துக் கொண்டிருக்கின்றனர்.

இப்பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் முகத்தான் இச்சங்கம் தமிழகத்திலும் மத்திய பொதுப்பணித்துறையில் உள்ளது போன்று. பிரிவு நிலை, பணி நியமனம் சம்பள ஒற்றுமை முதலிய நிலைமைகள் உண்டாக்கித் தரவேண்டும் என வேண்டி நிற்கின்றது.

மேலும் இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதனால் இதுநாள் வரை இம்மாநிலத்தில் டிப்ளமா மற்றும் டிகிரி பொறியாளர்களிடையே நிலவி வரும் மனக்கசப்பு நீர்ந்து நாட்டு முன்னேற்றப் பணிகளில் முழுக் கவனம் செலுத்த ஏதுவாகும் என்பதையும் இத்தருணத்தில் முன் வைக்கின்றது.

2) பொறியாளர்களுக்கு காலவரையறைப்பதவி உயர்வு வழங்க வேண்டுதல் (Time Bound Promotion)

தமிழகத்தின் பொறியியற் கட்டுமானப் பணிகள் அனைத்தும் ஒரு காலத்தில் பொதுப்பணித்துறையின்கீழ் இயங்கி வந்தன. காலம் செல்லச் செல்ல பணிகள் அதிகமான

பேச்சு பெரிதுதான். ஆனால் மௌனம் அதனிலும் பெரிது. — தாமஸ் கார்லைல்

காரணத்தாலும், வேறுபல காரணங்களாலும் நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை, மின்சார வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், விவசாய பொறியியல் துறை போன்ற பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து விட்டதன் காரணத்தால் பொதுப்பணித்துறையில் பொறியாளர்கள், தாங்கள் பணியில் சேர்ந்தது முதல் 25 ஆண்டுகளுக்கு மேலாகவும் அதேபதவியில் தொடர்ந்து எந்தவித பதவி உயர்வுமின்றிப் பணியாற்றுவதால் மன உளைச்சலுக்கும், மனச் சோர்விற்கு பொறியாளர்கள் ஆட்பட்டு வேலையில் ஆர்வமின்றி பணியாற்றக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு விடுமோ என அஞ்சுகின்றோம். அந்த நிலைகள் ஏற்படாவண்ணம் தவிர்க்கப்படுவது இக்கால கட்டத்தில், மிக அவசியம் என்பதோடு மிக அவசரமும் கூட என எண்ணுகின்றோம். உரிய நேரத்தில், பதவி உயர்வு தந்து தரமான பணியினைப் பெற பல்வேறு மத்திய அரசு துறைகளில் காலவரையறைப் பதவி உயர்வு (Time Bounn Promotion) அளிக்கப்படுகிறது என்பதைத் தங்கள் முன் வைக்கின்றோம். அதே நிலையில் தமிழக அரசு பொதுப்பணித்துறையில் பதவி உயர்வு இன்றி உள்ள பொறியாளர்களுக்கும் காலவரையறைப் பதவி உயர்வு வழங்க ஆவன செய்ய வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு காலவரையறைப் பதவி உயர்வு வழங்குவதால் அரசிற்கு ஏற்படும் கூடுதல் செலவு என்பது மிகவும் குறைவானதாகும் என்பதுடன் திறமையை ஊக்குவிக்கும் பாங்கில் காலவரையறைப் பதவி மிகவும் அவசியம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எடுத்துக்காட்டாக இளம்பொறியாளர் பதவி வகிக்கும் ஒருவர் தனது பத்தாண்டு பணிக்கால முடிவில் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவராவார். அவருக்குப் பதவி உயர்வு வாய்ப்பின்மையைக் கருதி காலவரையறைப் பதவி உயர்வு வழங்கினால் பெறுகின்ற ஊதியம் :

இளம்பொறியாளர் ஊதியம் 525-25-675-30 855-35-925
10 ஆண்டுகளுக்குப்பின் ஊதியம் ரூ. 795
காலவரையறைப்பதவி உயர்வினால் ரூ. 750-50-1350 விகிதத்தில்
நிர்ணயிக்கப்படும் ஊதியம் ரூ 800/

ஆக பொறியாளர்கள் திறமையாக மனச்சோர்வின்றி சிறப்பாக பணியாற்ற காலவரையறைப்பதவி உயர்வு வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டுகின்றோம்.

3) தொழில் நுட்பக் கல்வியைப் பல்கலைக் கழகத்தின் ஆளுகையின்கீழ் கொண்டு வருதல்.

இந்தியா சுதந்திரம் பெற்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நீட்ட முன்வந்தபோது பொறியாளர்கள் பற்றாக்குறையின் காரணத்தால் திட்டப்பணிகள் பாதிக்கப்படும் என்ற உண்மை, அறிஞர் பெருமக்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் தெரிய வந்தது. அரசின் பொறியியல் துறைகளுக்கு அடிப்படைத் தேவையான பாடத் திட்டங்களைக்கொண்டு குறுகியகால பொறியியல் கல்வி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் அன்றைய தினம் பல்கலைக் கழகங்கள் பழமையாளர்கள் (Conservative) கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்ததால் அந்த முறையை ஏற்க மறுத்து விட்டார்கள். தேவைகளைக் கருத்திற்கொண்டு அரசுகள் தொழில் நுட்பக் கல்வித்துறையின் கீழ் தொழில்நுட்பக் கல்லூரிகளை அமைத்தன. தொழில்நுட்பக்கல்வித்துறை அமைப்பதற்கு முன் அவை தொழில் வணிகத்துறையின் ஆளுகையில் இருந்து வந்தது. இன்றும் அம்முறை கடைப்பிடிக்கப்பட்டு வருவதுடன் பல்கலைக்கழகங்களின் ஒப்புதலின்றி அரசாலேயே டிப்ளமாக்கள் வழங்கப்பட்டு வருகின்றது இதே போன்ற டிப்ளமாக் கல்வி வேறு பல இருந்தாலும் அவைகள் பல்கலைக் கழகத்தால்

எவனிடத்தில் வாய்மை, தூய்மை, தன்னலமின்மை என்னும் குணங்கள் இருக்கின்றனவோ அவனை அழிக்கும் சக்தி எங்கும் கிடையா. —சுவாமி விவேகானந்தர்

வழங்கப் படுகின்றன. என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆதலின் இத்தொழில் நுட்பக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்தின் ஆளுகையின் கீழ் கொண்டு வருவதுடன் பொறியியல் டிப்ளமாப் பட்டத்தை அங்கீகரிக்கவும் வகை செய்தாலொழிய பொறியியல் துறையில் பொறியியல் டிப்ளமா தாழ்த்தப்பட்ட கல்வியாக கருதப்படுகின்ற நிலை மாறவாய்ப் பில்லை என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் மேலும் பொறியியல் டிப்ளமா என்றால் ஏளனமாகக் கருதுகின்ற நிலையைப் போக்க டி. சி. இ., டி. எம். இ., டி. இ. இ., என்று டிப்ளமாப் பட்டங்களை டிகிரிப் பட்டங்களாக மாற்றி வழங்கு மாறும் கேட்டுக் கொள்கிறோம். தமிழில் புலவர், வித்துவான் போன்ற டிப்ளமாப் பட்டங்களை இலக்கிய இளங்கலைஞன் (பி. லிட்) என்று பல்கலைக் கழகங்கள் மாற்றி வழங்கி வருவதும் ஒப்பு நோக்கற்குரியது. ஆகவே இதன் அடிப்படையில் பொறியியல் டிப்ளமாவை, பல்கலைக்கழக ஆளுகையின் கீழ்க்கொணர்ந்து டிகிரியாக மாற்றி வழங்க வேணடுகின்றோம்.

4) அரசாணை 955 பொ. ப. து. நாள் 4-8-78ஐ நீக்க வேண்டல்.

"சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு" என்று முழக்கமிட்ட தந்தை பெரியாரின் பேரறிஞர் அண்ணாவின் வழியில் நடைபெறும் ஆட்சியில் பொறியாளர்களின் சுயமரியாதைக்கு ஊறு விளைவிக்கும் ஓர் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் திருமுன் கொண்டுவர வேதனைப்படுகின்றோம் தமிழகப் பொதுப்பணித்துறையில் பொறியாளர்களை தங்கள் சொந்த மாவட்டங்களில் பணியாற்ற அனுமதிக்கக் கூடாது என்று 4-8-78 நாளிட்ட பொ. ப. து. அரசாணை 955 அறுதியிட்டு கூறுகின்றது.

மூன்றாண்டுகட்கு ஒரு முறை மாற்றலுக்கு ஆளாகி வாழ்கின்ற பொறியாளர்கள் சிறிது காலம் கூட தங்கள் பிறந்த மாவடட்த்தில் பணியாற்றக்கூடாது என்ற நிபந்தனை அரசுத் துறையில் பொறியாளர்களுக்கு இழைக்கப்பட்ட மிகப் பெரிய கொடுமையாகும். பொறியாளர்கள் குற்றப்பரம்பரையினர் என்று எண்ணப்படுகின்ற இந்த இழிநிலையை, பொறியாளர்களின் சுயமரியாதையைக் காக்க இந்த அரசாணை எண் 955 பொ. ப. து. நாள் 4-8-78னை மீண்டும் பரிசீலனை செய்யப்படவேண்டும்.

மேலும் வயதான தாய் தந்தையர், உற்றார் உறவினர் அனைவரும் சொந்த மாவட்டத்தில் இருக்கும்போது நல்லது / கெட்ட நிகழ்ச்சிகள் போன்ற அவசியமான நேரங்களிலும் தனது நீண்ட நாளைய அரசுப்பணியுல் ஒரு சில ஆண்டுகள் கூட சொந்த மாவட்டத்தில் பணியாற்றவும் முடியாத நிலையால், பல்வேறு நேரங்களில் குடும்ப சூழ் நிலையால், ஏராளமான பண விரயத்திற்கு ஆளாக நேரிடுகின்றது என்பதைத் தங்கள் முன் வைக்கின்றோம்.

சொந்த மாவட்டத்தில் பணியாற்றக் கூடாது என்கின்ற கட்டுப்பாடு வேறு எந்தத் துறையிலும் இல்லை என்பதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவருவதுடன் மாநாக ஊராடசி ஒன்றிய அலுவலர்கள், வட்டாட்சி அலுவலர், நிர்வாக அலுவலர் போன்ற அலுவலர்கள் பொது மக்களோடு நெருங்கிப் பழகும் நிலையிலே உள்ளவர்கள் யாவரும் சொந்த மாவட்டம் என்ற கட்டுப்பாடின்றி பணியாற்றி வருவதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம். ஆகவே பொறியாளர்களின் சுயமரியாதையைக் காக்கின்ற வகையில் பொறியாளர்கள் சொந்த மாவட்டங்களிலும் பணியாற்றலாம் என்று அரசு ஆணை எண் 955 பொ. ப. து. 4-8-78ன் பேரில் மறுபரிசீலனை செய்து மாற்று ஆணை வழங்க அன்புடன் வேண்டுகிறோம்.

பட்டம், பதவிகளை எவனொருவன் நாடுவதில்லையோ அவனே மேதை.

—வில்சன்

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண்விடல்''

என்ற பொய்யாமொழிப்புலவரின் நல்லுரைக்கேற்ப மேற்கண்ட பிரச்னைகளைத் தங்கள் திருமுன் வைத்து, ''பவழவிழா'' காணும் இச்சங்கத்தின் உறுப்பினர்கள் மகிழ்கின்ற வகையில் நல்ல தீர்ப்பினை அரசு ஆணைகள் மூலம் வழங்க அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள் ஏற்கப்படுவதன் மூலம் அரசிற்கு எத்தனிதமான கூடுதல் செலவினங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்பதைத் தங்கள் மேலான பார்வைக்குக் கொணர விரும்புகின்றோம்.

பிரச்னைகளை நியாய அடிப்படையில் தீர்த்து வைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களது இப்பிரச்னைகளுக்கும் நியாயமான ஒரு தீர்ப்பு வழங்கி பொறியாளர்களின் சுயமரியாதையைக் காக்க அன்புடன் வேண்டுகின்றோம்.

காலண்டர் கேம்ஸ் பதில் இங்கே உள்ளது.

Answer to Calendar Game :-

You will find the answer as Thursday for 29.2.1900, a leap year. If it is, so please find the day of 1.3.1900. You will be hurry to say it is Friday. Wait! Find the day from the Table. It will come to Thursday again! What a confusion! —No! It is not a confusion. Because the year 1900 is not a leap year though it can be divided by four. The reason is this :-

The total days of a year is 364 plus approximately 6 hours. To be correct slightly less than 6 hours. So, a leap year of 1900 was actually cut short by one day by making it as an ordinary year (ie 28 days in February 1900) as compensation against the fraction of minutes rounded upto one day in every leap year.

அளவோடு பெற்று
வளமோடு வாழுங்கள் !

மனம் ஒரு கண்ணாடி. கவலை அதில் படியும் அழுக்கு. நகைச்சுவை அந்த அழுக்கைப் போக்கும் திரவம். —மகாகவி ஜாமி

'அக்னியின் அவதாரம்'

(அம்மு)

பூத்துப் போன கண்களுக்கு
புதுவொளி தெரிகிறது
புத்துணர்ச்சி பாய்கிறது
புன்னகையும் பூக்கிறது—ஆம்
எம் கண்ணுக்கு தெரிந்தது
நம் சின்னத்தில் கெப்புச்
சுடருடன் பிரகாசிக்கும்
அக்னி பகவான்தான் ;
எழுபத்தி ஐந்து ஆண்டுகளாக
நம்முடன் வாழ்ந்த அவன்முகம்
இன்று மட்டும்
இன் முகமாக இருப்பதின்
மர்மம் என்ன என்பதை
எப்படிச் சொல்வேன்—என்னன்பே !
அவனுக்கு ஏற்பட்ட பசியில்
எத்தனையோ பட்டய பொறியாளர்களின்
பதவியும் பதவிஉயர்வும்
புகழும் அறிவும்
குன்றிவிட்ட விளக்காக
குமைந்து கொண்டிருந்தது ;
இன்றோ இன்முகம் காட்டுகிறான்
இனியாவது தொலையுமோ
இத்தொல்லைகள் என என்
இனத்தவர்கள் நிம்மதி
அடைவதற்கே
இத்தனை நாளா ;
நாங்கள் எந்தியிருப்பது
அக்னி சுடர்தான்—காரணம்
புது உலகுக்கு செல்லும்
புதுப் பாதை சமைத்திடவே ;
அடுத்தவர்களின் உரிமைகளுக்கு
உலை வைப்பதற்கில்லை ;
எங்கள் சுடரின் உதவியை—நீயும்
பெறலாம்—நாங்கள் மனிதர்கள்.
எங்கள் சுடரில் சுகவாசம்
செய்யலாம்—நாங்கள்
குயில் ஜாதியில்லை ;—
பாவத்தை மனதில் வைத்து
பாசாங்கு செய்யாதே
எங்கள் சுடர் ஒளிர்வது
எண்ணெயிலும் நெய்யிலும்
அல்ல—எங்கள் சமூகம்
புரியும் வேள்வியின்
வேதவினைதான்—அது ;
உண்மையை உணர்த்தவே
நீச்சுடரை நீண்டினாள்
சீதை—அன்று
உரிமையை உயர்த்தவே
நீச்சுடரை நீண்டினோம்
நாங்கள் இன்று
நீயே கூறுவாய்
''நிரபராதி நீ'' என்று
அன்று முதல் எங்கள்
சுடர் ஒளிவிடும் உங்களுக்கும் ;
இதை உணர்வாயோ
என் ஒன்றுவிட்ட சகோதரனே !

உதித்தது பொறியியல் வானிலே ஓர் கதிர் !

(பொறியாளர் இ. அப்பாஸ் மந்திரி)

பொறியியல் கதிரால் விளைந்ததே "பவழ விழா மலர்" என்றால் அது பொருத்தமேயாகும்.

ஆகவே, பொறியியல் கதிர் தோன்றிய வரலாற்றை நினைவுகூர்வது இங்கே பொருத்தமாய் இருக்கும் என்று நம்புகிறேன். அதிலும், டிப்ளமா பொறியாளர் இயக்கத்தின் படைக்கருவியாக விளங்கிவரும் பொறியியல் கதிரின் வரலாற்றை, பவழ விழா மலர் போன்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆவணப்புத்தகத்தில் பதிவு செய்வது சாலப் பொருத்தமாகும் என்று நினைக்கிறேன்.

"பாராளுமன்றத்தின் நிலையான நிகழ்ச்சியே பத்திரிகை (Press is parliamcnt in permanent session)" என்கிறார்கள். அழுத்தப்பட்டுக் கிடக்கும் இனத்திற்கு, அதன் செய்தி ஏடு, சிந்தனையையும் செயலையும் சீர்பெறவும் கூர்பெறவும் செய்கின்ற அறிவாயுதமாகும் !

1965-66-67-68-69.....இந்த ஆண்டுகள் நம் பாசறையைச் செப்பனிட்டு, கட்டுக்கோப்பைக் கனமாகத் திருத்தியமைத்த காலக்கட்டம். தமிழ்நாடு முழுவதும் டிப்ளமா பொறியாளர்கள் கிளர்ந்தெழுந்த கந்தாயம் அந்த காலக்கட்டம்.

நமக்கொரு விடிவெள்ளி தேவை என்று பலராலும் உணரப்பட்டது—அது நமக்கு திசையறிய.

நமக்கொரு கேடயம் வேண்டும்—அது நமக்குப் பாதுகாப்பாக,
நமக்கொரு முனையீட்டி--தற்காப்புக்கு.

"நமக்குள்ள பிரச்னைகளை ஆராய்ந்து அறுதி செய்துவிட்டோம். இவற்றை வெளியிடுவதற்கு ஒரு மாத இதழ் போதுமே !"

"ஆமாமாம். நாம் ஒரேயொரு பத்திரிகையைத்தான் துவக்க இருக்கிறோம்".

"ஹாஹ்ஹாஹ்.....அதைச் சொல்லவில்லை நான் ! ஒரு மாதம் வெளியிட்ட பிறகு, அடுத்த மாதத்திற்கு வெளியிடச் செய்தி இருக்காது என்கிறேன்".

"ஓகோ ! என்ன செய்யக் சொல்கிறீர்கள் ?"

வாழ்க்கை ஏணி போன்றது. நாம் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும். மேலேயோ கீழேயோ நம்மை இழுத்துச் செல்லும். —ரோகர் வார்டு பாப்ஸ்

"பத்திரிகை என்று வேண்டாம். அவ்வப்போது, தேவைப்பட்டால், துண்டு அறிக்கைகளை வெளியிடுவோம்".

ஒரு துவக்கத்தடையாளர்க்கும், ஓர் ஆர்வலருக்கும் இடையே நடந்த சொல்லாடல் இது.

துவக்கத் தடையை மீறி, சிந்தனை நிலம் பண்படுத்தப்பட்டது. விதையை ஊன்றுகிற நேரத்தில் தலைகாட்டினார், துவக்கத் தடையாளர்.

"பத்திரிகை, அச்சில் எப்படி வருமோ அதேபோல் கையெழுத்தில் உருவாக்கி, மாதிரிப் பிரதியொன்றை முன்கூட்டியே ஒப்புதல் பெற்றபிறகே அச்சுக்குக் கொடுக்க வேண்டும்'' என்றார் அவர்! மரீனாக் கடற்கரைப் பரப்பில் நடந்த ஆலோசனைக் கூட்டம் அது. அவரின் ஆலோசனையைக் கேட்டதும், மடங்கி மடங்கி எத்தனைச் சிரிப்பு அலைகள் கடற்கரையிலே! 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நடந்த கூட்டம் அது. பிறக்கவிருந்த குழந்தைக்கு என்ன பெயரைச் சூட்டலாம் என்று எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தபோது, நீலக்கடற்பரப்புத்தாளில் தங்கக் கதிரால் தன் பெயரை எழுதிக் காட்டினான், ஒளிவேந்தன்.

15-9-1969 பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவையும் பொறியாளர் நாளையும் ஒருசேர, மதுரை மாநகரில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் செயற்குழுக் கூட்டம் கொண்டாடியது. அந்த விழாக் கூட்டத்தில் பொறியியல் கதிரின் முதல் இதழ் வெளியிடப்பட்டது. அதை முத்தமிட்டு வரவேற்று, மூத்த பொறியாளர்களும், சங்கச் செயல் வீரர்களும் வாழ்த்தினர். பொறியியல் கதிரின் நிறுவன ஆசிரியனாகிய எனக்கு இந்த இன்பக் காட்சிகளைக் காணக் கொடுத்து வைக்கவில்லை. பொறியியல் துறையில் உள்ளவனாகிய எனக்கு பத்திரிகையாளனாக மாறுவதற்குக் கடும் உழைப்பு தேவைப்பட்டதால் அதன் விளைவாக உடல்நலம் பாதிக்கப்பட்டு, அதே மதுரையில் இருந்தபோதிலும், விழாவுக்குப் போக இயலாதவனானேன். விழாவிலிருந்து திரும்பி, நள்ளிரவு நேரத்தில், நாற்பது சகோதரர்களுக்கு மேல், என் வீட்டுக் கதவை 'உடைத்தனர்'. அப்பொழுது அந்த இனிய நெஞ்சங்கள் வழங்கிய பாராட்டுரைகளே அமிழ்தமருந்தாகி அந்தக்கணமே புத்துணர்ச்சி பெற்றேன்; காய்ச்சல் பறந்தது! ஆம், பொறியியல் கதிர், என்னை, நோயிலிருந்து குணமாக்கியது!

''அதென்ன அண்ணாச்சி, பாரிப்பு என்று பொறித்திருக்கிறீர்கள்? வெளியீடு என்று சொல்லலாம் அல்லவா?''

''வெளியீடு என்பதைக்காட்டிலும் விரிவான, நுட்பமான பொருளையுடையது, பாரிப்பு என்ற சொல், Radiation என்பதையே பாரிப்பு என்ற சொல் காட்டுகிறது.''

இப்பொழுது பொறியியல் கதிருக்கு 16 வயது நடக்கிறது. குபதப்பருவம்! இவன், பிறக்கும் பொழுதே வீறுடன் பிறந்தவன்! வளரும் பொழுது எந்த கெட்ட காற்றும் அண்ட முடியாதபடி அடர்ந்து வளர்ந்தவன்! இந்தக் கதிரவனைக்கண்டு மலர்ந்த செடிகள்

நாம் எவ்வளவுநாள் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல. எப்படி வாழ்கிறோம் என்பதே முக்கியம். —பெய்லி

ஆயிரமாயிரம் ! பாடும்திறன் பெற்றவர்கள் பலர் ! எழுதும் ஆற்றலை வளர்த்தவர்கள் எத்தனையோபேர் ! மயக்கத்தை நீக்கி இயக்கம் கொண்டவர்கள் ஏராளம் !

பொறியியல் கதிரின் பெருமைக்கு சான்று வேண்டுமா ? 5-11-1973 இல் நம் சங்க மணிவிழாவின்போது, அகில இந்திய டிப்ளமா பொறியாளர் சம்மேளனத்தின் மாநாடும் ஒருங்கிணைந்து நடந்தல்லவா ? எல்லா மாநிலங்களிலிருந்தும் பிரதிநிதிகளாக சகோதர டிப்ளமா பொறியாளர்கள் வந்திருந்தநர்கள். அவர்கள் சொன்னார்கள் :'' எங்களிடம் இருக்கிற தமிழ்ச்சகோதரப் பொறியாளரைக் கொண்டு, பொறியியல் கதிர்க்கட்டுரைகளை எங்கள் மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகிறோம் !!

'பொறியியல் கதிரின் பொறுப்புக்கு பலர் பயிற்சிபெற வேண்டும்' என்பது என் கருத்து.

பொறியியல் கதிர் துவங்கியதிலிருந்து நாளதுவரை அதன் பொறுப்பாளர்கள் :
பொறியாளர் இ. அப்பாஸ்மந்திரி

,, ஜெ. நா. விவேகாநந்தன்

,, அ. சு. இராமசாமி

,, தி. ப. பாலசுப்பிரமணியன்

,, இர. அய்யாசாமி

,, அ. சுப்பிரமணியம்

பொறியியல் கதிரின் பாரிப்பு தொடர்க !
பொறியியல் கதிர் வாழ்க !

அளவோடு பெற்று
வளமோடு வாழுங்கள் !

எல்லா குணங்களிலும் சிறந்தது, மௌனம். இதன் மூலம் பிறர் குறைகளை அறியவும், நம் குறைகளை மறைக்கவும் முடிகிறது. —ஜீனோ



நான் நடந்து வந்த பாதை!

C. P. சண்முகம் LCE. B.E.

தலைவர் த. பொ. ச/பொ. ப. துறை

என்னை வாழவைக்கின்ற சங்கம் தமிழ்நாடு பொறியியல் சங்கம் (பொ. ப. து) எனக் சொல்லிக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இச்சங்கத்திற்கு இன்று பவழ விழா காண்கிறோம். நமது சங்கம் ஆங்கிலேயர் காலத்தில் 1910ல் தோற்றுவிக்கப்பட்டு, அவர்கள் ஆட்சியின்போது 1928ல் அங்கீகாரம் பெற்று, பொறியாளர்களின் நலன் காத்து வருகின்றது. இச்சங்கம் இன்று 75 ஆண்டுகளை கடந்துள்ளது. நம்முன்னோர்கள் இச்சங்கத்தை தோற்றுவித்து எந்த குறைபாடும் இல்லாமல் பொறியாளர்களின் நலன்காத்த அந்த பெரியவர்களை நினைவுகூர்ந்து இன்று பவழ விழா எடுக்கின்றோம்.

நம் சங்கம் 1935ல் வெள்ளிவிழா கண்டது. 1960ல் பொன் விழாவைக் கண்டது. நானோ பெரியதுறை, என எல்லாராலும் புகழப்பட்ட இந்த துறைக்கு 1960ல் தொழில் நுட்பக்கல்லூரி படிப்பை முடித்து பணியில் சேர்கின்றேன். ஆனால் சிறப்புமிகுந்த இச் சங்கத்தில் ''பொன் விழா'' 1960ல் என்று என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. நம்மை காக்க சங்கம் இருக்கின்றது என்ற உணர்வை புரிந்துகொள்ள முடியவில்லை.

திங்கள் பூராவும் அரசுப்பணி, விடுப்பு நாட்களில் சொந்தப்பணி என்கின்ற வகையில் உழைத்து, உழைப்பிற்கான ஊதியம் பெற்றுகுடும்ப பொறுப்பில் இருந்தேன். சுமார் ஏழு ஆண்டுகள், அதாவது 1967 வரை சங்கத்தின் சிறப்புமிகுந்த செயல்களை அறிந்து கொள்ளமுடியாமல் இருட்டிலே உள்ள கறுப்பு பூனையைப் போல இருந்தேன். துறையில் சேர்கின்றபோதே பொறியாளர்களின் சொத்தாகிய இச்சங்கத்தை தெரிந்து வைத்திருப்பேனாயானால் இன்று என்வாழ்வில் உயர்நிலையை அடைந்திருக்கமுடியும் என என் உள்ளம் தெரிவிக்கின்றது.

என்னைப் பற்றியும் என்வீட்டைப்பற்றியும் மட்டுமே நினைத்துக் கொண்டு இருந்த நான் 1967ல் சங்கத்தைப்பற்றி தெரிந்துகொள்ளக் கூடிய ஒரு நிகழ்ச்சியை நான் சொல்லியாக வேண்டும். 1967ல் உணவு உற்பத்தித்துறையில் வேலூரில் பணியாற்றிக் கொண்டு இருந்தேன். தற்சமயம் சங்கச் சட்டச்செயலாளராக உள்ள பொறியாளர் வி. எஸ். ஜானகிராமன் வேலூரில் பணியாற்றிக் கொண்டு இருந்தார். மையச் சங்கத்தில்

மனிதனைக் கண்டு அஞ்ச வேண்டும்? ஏன்? மற்ற மிருகங்களைப் பழக்கிவிடலாம் இந்த மிருகத்தைப் பழக்க முடியுமா?

—பெர்னாட்ஷா

பொறுப்பினை வகித்து வந்தவர். அவருக்கு ஒரு தந்தி வருகின்றது. அதில் "Emergency Supervisor Days are Counted" என வாசகம் தாங்கி மையச் சங்கத்திலிருந்து வருகின்றது. அதனை எங்களுக்கெல்லாம் தகவலுக்கு சுற்றுக்கு விடப்படுகின்றது. அதனைக் கண்டதும் அதிர்ந்துபோய் சோர்வுற்றேன். ஏழு ஆண்டுகள், பணிபுரிந்து எனக்கு தமிழ்நாடு தேர்வாணைக்குழுமூலம் தேர்வு பெற முடியவில்லை. திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகளுக்கு தந்தையானநான் வேலூரில் இருந்த எனது நண்பர் சி. சவுந்திரராசனை அழைத்துக் கொண்டு திருச்சி செல்கின்றேன்.

திருச்சியில் நம் சங்க கட்டத்தில் முதன் முதலாக என் சுயநலத்தை முன்னே வைத்து அடிஎடுத்து வைக்கின்றேன். "வேலை நீக்கம்" என்கின்ற கொடுமை மிக்க செயலுக்கு தீர்வுகாண பொறியாளர் சி. எம். ஜோஸ், சி. சணமுகப்பெருமாள் நாகன் பிள்ளை மற்றும் பலர் விவாதிக்கின்றனர். அவர்கள் பேசுவதில் சற்று வேகமில்லாமையால், நான் சங்கத்தில் என் கன்னிப் பேச்சை தட்டுத் தடுமாறி நடுக்கத்துடன் ஆரம்பிக்கின்றேன்.

துறையில் ஏழு ஆண்டுகள் பணிபுரிந்ததற்கு தண்டனை வேலை நீக்கமா? இதற்கு உடனே தீர்வுகாண வேண்டும். நான் இன்று சொல்லிக்கொள்கின்றேன். ''நானும் விபரம் தெரியாத என் மனைவியும் இரண்டு பெண்குழந்தைகளும் தீக்குளிக்க தயாராக உள்ளோம். நாங்கள் தீக்குளிப்பதன்மூலம் பிரச்சனைக்கு நல்ல முடிவு கிடைக்கட்டும் எனச் சொன்னேன். நடுக்கத்தோடு, ஆரம்பித்த பேச்சு சங்க உணர்வினால் வேகமாக பேச ஆரம்பித்தேன். சங்க பொறுப்பாளர்கள் என்னை சாந்தப்படுத்தி நிச்சயம் "வேலை நீக்க பிரச்சனைக்கு தீர்வு காணுவோம் என உறுதியளிக்கின்றனர். அதன் தொடர்பாக உடல் நலமற்று இருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா'' அவர்களை சங்கத்தின் சார்பில் சந்திக்கின்றனர். வேலை நீக்க உத்தரவு நிறுத்தப்படுகின்றது. அன்று நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

சங்கத்திற்கு நன்றிக்கடன் செலுத்துகின்ற வகையில் நண்பர்களின் அரவணைப் போடு வேலூரில் ''தமிழ்நாடு பொறியியல் சங்க'' கிளை துவக்கப்படுகின்றது. நான் கிளையின் செயலாளராக பொறுப்பேற்கின்றேன். நம் மையச் சங்கத்திற்கு கட்டிடம் கட்ட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றது. ஒவ்வொரு கிளையும் ரூ5000/- தர வேண்டும் என அறை கூவல் விடப்படுகின்றது. வேலூரில் ஆரம்பிக்கப்பட்ட கிளையில் உள்ள உறுப்பினர்கள் அத்துணைபேரும் வேகமாக செயல்பட்டு குறிப்பாக நண்பர் ஏ. எம். பாபு அவர்களின் ஒத்துழைப்போடு எல்லா கிளைகளுக்கும் முன்னோடியாக ரூ5001/- நமது பொதுச் செயலாளர் திரு எஸ். முருகன் வசம் மகிழ்ச்சியுடன் ஒப்படைத்தேன்.

19-4-1970ல் தமிழ்நாடு பொறியியல் சங்கம் முன்னின்று நடத்திய டிப்ளமா பொறியாளர் மாநாடு சென்னை கலைவாணர் அரங்கத்தில் (அப்போது சிறுவர் அரங்கம் நடைபெறுகின்றது. மாநாட்டிற்கு வேலூர் கிளையினின்று இரண்டு பேருந்துகளை ஏற்பாடு செய்து கொண்டு சென்னை வந்து ஊர்வலத்தில் விழாவில் பங்கேற்கின்றோம். விழா சிறப்போடு நடக்கின்றது. அன்று மாநாட்டு அமைப்பாளர் பொறியாளர் த. சந்திர சேகரன். நல்ல மிடுக்கோடு மாநாடு நிறைவு பெறுகின்றது.

மாநாட்டிற்கு அடுத்த நாள் 20.4.70ல் பல்வேறு துறைகளைச் சார்ந்த டிப்ளமா பொறியாளர்களை ஒருங்கிணைந்த ''டிப்ளமா பொறியாளர் பேரவை'' உருவாக்கப் படுகின்றது. 12.2.71ல் பிரிவு பொறுப்பில் பணியாற்றுகின்ற மேற்பார்வையாளர்கள்,

---

நல்ல மனிதனை ஏன் பார்க்க முடியவில்லை என்றால் எல்லோரும் அந்த வேடத்தைப் போட்டுக் கொண்டிருப்பதால் தான். —ஹிலே

இளம்பொறியாளர்கள் ஒரேபணியைச் செய்தாலும் டிகிரி படித்த இளம்பொறியாளர்களுக்கு அரகிதழ் தகுதி வழங்கப்படுகின்றது. இதனை எதிர்த்து ஆர்பாட்டம் செய்கின்றோம். தொடர் உண்ணா நோன்பு மேற்கொள்கின்றோம். முதல் நாள் அன்று நானும் நண்பர் ஏ. எம் பாபுவும் வேலூர் கிளையின் சார்பாக மையச் சங்க பொறுப்பாளர் எஸ். முருகன் த. சந்திரசேகரன் ஆகியோர் தொடர் உண்ணா நோன்பு மேற்கொள்கின்றோம்.

மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக சங்கம் வளர்ச்சி பெறுவதை காண்கின்றேன். 1971ல் சென்னைக்கு மாற்றலாகி குடிசைமாற்று வாரியத்தில் பணி ஏற்கின்றேன். எனது சங்கப்பணி சென்னைக்கு வந்ததால் இன்னும் சற்று அதிகமானதில் வியப்பு ஒன்றுமில்லை. மைய சங்கத்தின் துணைத் தலைவராக 1971-1972ல் பொறுப்பேற்றேன்.

எந்தக் கல்விக்கும் மேல் கொண்டு படிக்க வாய்ப்புண்டு. ஆனால் பொறியியல் டிப்ளமா பெற்றவன் மேல் கொண்டு படிக்க முடியாது. இந்த இரும்புத்திரையை நீக்க பல ஆண்டுகள் சங்கம் சோதனைகளைத் தாங்கி பொறியியல் டிப்ளமா பெற்றவன் மேல் கொண்டு படிக்க அரசு ஆணையைப் பெற்றது. அதன் தொடர்பாக 1971ல் பகுதி நேரப் பொறியியல் கல்வி கொண்டுவரப்பட்டது.

சங்கத்தின் வெவ்வேறு பொறுப்புகளில் 1971 முதல் 1978 வரை இருந்தேன். நான் வேலை நீக்கத்திற்கு ஆளாகின்ற சோதனை வந்தபோது என்னையும் என்னோடு பல நண்பர்களையும் காத்தது சங்கம். அதனைத் தொடர்ந்து நீண்ட நெடு நாட்களாக தற்காலிக பணியில் இருந்த அத்துணை பேருக்கும் "சிறப்புத் தேர்வினை பெற்று தந்தது சங்கம். 1971ல் அதனைத் தொடர்ந்து 1972ல் சிறப்புத் தேர்வு மூலம் 267 மேற் பார்வையாளர்கள் (இளம்பொறியாளர்கள்) 192 இளம்பொறியாளர்கள் (உதவிப் பொறி யாளர்கள்) தேர்வு செய்யப்படுகின்றனர். சங்கத்தின் சிறப்புமிகு செயல்குறித்து சங்க நண்பர்கள் தோழமைச் சங்கத்தை காத்தவர்கள் வாயார பாராட்டினர். நிதி உதவி அளித்தார்கள். இந்த சங்கத்தின் அரிய செயலால் கிடைக்கப்பட்ட பகுதி நேர பொறியியல் டிகிரி படிக்க எனக்கு 1972ல் வாய்ப்பு கிடைத்தது. நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை யில்லை. பகுதி நேரப்படிப்பினால் எனது சங்கப் பணி தொய்வடையவில்லை; சற்று வேகமாக செயலாற்ற தொடர் சாதனைகள் என்னை ஊக்குவித்தது.

மெல்ல மெல்ல மாவட்டங்களில் புதிய கிளைகள் உருவாகியது. கிளைகளின் ஒத்துழைப்போடும் டிப்ளமா பொறியாளர்கள் பேரவையின் அரவணைப்போடு நம் சங்க மணிவிழாவினை 5.11.73ல் சென்னையில் எடுத்தோம். சிறப்பு மிகு நிகழ்ச்சியாக அமைந்தது. அன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பங்கேற்று நமது தலையாய கோரிக்கைகளை ஏற்று தெரிவிக்கின்றார். மகிழ்ச்சியோடு விழாவை முடித்தோம். ஆனால் ஒப்புக்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் நிறைவு பெறவில்லை என்பது வருத்தத் திற்குரிய ஒன்று.

இரண்டாம் ஊதியக்குழு அறிவிப்பின்மூலம் மேற்பார்வையாளர்களுக்கு (இளம் பொறியாளர்) சம்பளம் ரூ325-650 என்றும், இளம்பொறியாளர்கள் (உதவிப்பொறியாளர்) சம்பளம் 400-650 எனவும் அறிவிக்கப்பட்டது. ஒருதலை பட்சமாக டிகிரிபடித்த இளம் பொறியாளர்களுக்கு ரூ425-700 என மாற்றி அமைக்கப்படுகின்றது. அதுசமயம் சங்கம் தனது எதிர்ப்பை தெரிவிக்கின்றது. சங்கம் நியாயத்தை தொடர்ந்து வலியுறுத்தி அரசு ஆணை எண் 106 பொ. ப. து 22.1.77ன் மூலம் மேற்பார்வையாளர்கள் (இளம்பொறி

ஒருவன் எப்பொழுதும் வீரனாக இருக்க முடியாது. ஆனால் என்றென்றைக்கும் மனிதனாக வாழ முடியும். — காங்பான்

யாளர்) சம்பளம் ரூ 350-700 என மாற்றி அமைக்கப்படுகின்றது. மூன்றாம் ஊதியக்குழு அறிக்கை வெளிவருமுன் இதனைப் பெற்றதை மன நிறைவோடு பாராட்டாதோர் இல்லை.

நம் சங்கத்தைப் பொறுத்தவரை சாதனைகளும் சோதனைகளும் மாறி மாறி வரும். நாமெல்லாம் வேலைக்கு ஒரு பெயர் - அந்த வேலைக்கு ஒரு சம்பளம் என்கின்ற அடிப் படையில் நம் நியாயத்தை வலியுறுத்தினோம். ஆனால் அரசு ஆணை எண் 294 பொ. ப. து 22.2.77ல் மேற்பார்வையாளர்கள் இளம்பொறியாளர் எனவும் இளம்பொறி யாளர்கள் உதவிப் பொறியாளர் எனவும் உதவிப் பொறியாளர்கள் உதவி செயற்பொறி யாளர்கள் எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. நாம் கேட்டது பொதுப் பெயர். ஆனால் அதற்கு மாறாக இளம்பொறியாளர் என பெயர் மாற்ற அளிக்கப்படுகின்றது. இதன்மூலம் டிப்ளமா உள்ளவர்களை பொறியாளர்களாக கருகதமாட்டோம் என் பிடிவாதகுணம் கொண்டவர்கள் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்ள வழிவகுத்தது.

அடுத்து நம்மால் மறக்க முடியாத நிகழ்ச்சி மீண்டும் தொடர்கின்றது. உதவிப் பொறியாளர்கள் தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலம் தேர்ந்தெடுக்க பட்டவர்களுக்கு பதவி கொடுப்பதற்கு வேண்டி துறையில் 10 முதல் 12 ஆண்டுகள் வரை தொடர்ந்து பணியாற்றிய இளம் பொறியாளர்களுக்கு வேலை நீக்க உத்தரவு வழங்கப்படுன்றது. மிகவும் அநியாயமான செயல். ஒரு மாதம் இரண்டு மாதம் ஆன தற்காலிக உதவிப் பொறியாளர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தனர். ஆனால் நம்மவர்கள் அதாவது ஒதுக்கப்பட்டவர்களாகிய டிப்ளமா பொறியாளர்கள் 10 ஆண்டுகள் தற்காலிகமாக பணிபுரிந்தவர்கள் வேலை நீக்கத்திற்கு ஆளாயினர். இந்த பிரச்னைக்கு தீர்வு காண எல்லா வழிகளிலேயும் பார்த்து விட்டு முடியாத நிலையிலே சங்கம் அறப்போராட்டத்தை வகுத்தது. 19-12-77ல் மாபெரும் மௌனப் பேரணி. அதிலே பாதிக்கப்பட்டவர்களும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கின்றவகையில் மற்றவர்களும் குறிப்பாக நமது முன்னால் தலைவர் எஸ். முருகானந்தம் அவர்கள் உள்பட மொட்டையடித்து ஊர்வலம் செல்கின்றனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த அத்துணைபேரும் ஊர்வலத்தில் பங்கேற்கின்றனர். மௌனப்பேரணி சென்னை நகரத்து மக்களிடையே ஒரு அனுதாபத்தை உண்டாக்கியது. பேரணியைத் தொடர்ந்து தொடர் உண்ணா நோன்பு 19.12.1977 முதல் 25.12.77 வரை நடைபெறுகின்றது. பிரச்சனைக்கு தீர்வு இல்லை. வேறுவழியின்றி காலவரையற்ற உண்ணா நோன்பு 26.12.77 அன்று நானும், பொறியாளர்கள் அடைக்கல துரை, கோல்டுவின் இமானுவேல் ஆகிய மூவரும் மேற்கொள்கின்றோம்.

நான் உண்ணா நோன்பு மேற்கொண்டபோது ஆனந்தக் கண்ணீர் வடித்தேன். பேச நா எழவில்லை. நம்சங்க முன்னாள் தலைவர் சி. சண்முகப் பெருமாள் உணர்ச்சி பொங்க எனது கடிதத்தை படிக்கின்றார்.

கடிதம் படித்து முடித்ததும் அருகில் வந்த அத்துணைப்பேரின் கண்களின் ஓரங்களில் கண்ணீர் கசிவதை மறைக்க இயலவில்லை.

நமது காலவரையற்ற உண்ணா நோன்பு தொடர்கின்றது. உண்ணா நோன்பு நேரத்தில் எங்களைச் சுற்றி இருந்து பாதுகாத்த உறுப்பினர்களின் பாதங்களை முத்தமிட வேண்டும். உறக்கம் இல்லாமல் எங்களுக்கு பணிவிடை செய்த நம் பொறியாளர்களையும் தோழமைச் சங்கங்களையும் மறந்திட இயலாது. அத்தோடு கட்சி பாகுபாடு இல்லாமல் பிரச்சனைக்கு தீர்வுகாண முயன்ற அரசியல் தலைவர்களை மறந்திட இயலாது. உண்ணா

மாத்திரைகளைக் கண்டறிந்தவன் புத்திசாலி. அதன்மேல் சர்க்கரையைப் பூசியவன் மேதை.

—புளுபார்க் கப்ரீஃப்ஸ்

நோன்பு ஐந்தாம் நாள் செல்கின்றது. நமது பிரச்னையின் உண்மை நிலையை அறிந்து வேலை நீக்கத்திற்கு ஆளான அத்துணைப் பேரையும் மீண்டும் பணியமர்த்த அரசு உத்தரவிட்டது.

நமது காலவரையற்ற உண்ணா நோன்பு 30—12—1977 அன்று மாலை 7 மணியளவில் முடிவடைகின்றது. உறுப்பினர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு எல்லையே இல்லை.

நான் சங்கத்தை தெரிந்துகொண்ட நாட்களில் இருந்து இதுவரை சங்கத்தினின்றும் என்னை தனியாக பிரித்துக்கொள்ள முடியவில்லை. நம் சங்கத்தினால் நான் மனிதனாக உள்ளேன் எனச் சொல்வதில் தவறில்லை. இச்சங்கத்தால் நான் பெற்ற அனுபவங்களும் பலன்களும் ஏராளம். இச்சங்கம் இல்லையெனில், நம் டிப்ளமா சமுதாயம் அழிக்கப்பட்டிருக்கக்கூடும்.

இன்று இச்சங்கத்திற்கு இருபது கிளைகள். இச்சங்கத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருந்த நான், உங்கள் அன்பால் இன்று இச்சங்கத்தின் மாநிலத் தலைவனாக உங்களுக்கு உழைக்க அனுமதிக்கப்பட்டு உள்ளேன்.

நான் நடந்துவந்த பாதையில் மேடு பள்ளங்கள் உண்டு. சாதனைகளையும் சோதனைகளையும் கண்டுள்ளேன். எந்தச் சொத்தையும் குறிப்பாக என் மனைவி மக்களையும் சொத்தாகக் கருதவில்லை.

நான் நடந்துவந்த பாதையில் கிடைக்கப்பெற்ற அரிய சொத்து "தமிழ்நாடு பொறியியல் சங்கம்". இது என் சொத்தல்ல; நம் சொத்து.

கடமையாற்றுவோம்! சங்கத்தை வளர்ப்போம்!

வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்! வளர்க பொறியாளர் ஒற்றுமை!

An Appeal by DECT President

Er. N. Raghavan, L.S.E., B.E.

President, DECT

The effective functioning of the district and taluk constituents are the need of the hour. I want to specifically emphasise that in view of the partition treatment awarded for the Diploma Engineers, in the Fourth pay Commission which is an indication of the long fight we have to face in the months to come. I appeal that every Diploma-Engineer irrespective of the department he serves, shall take this challenge in real and true spirite, to safe guard our eommon interest.

Arise! Awake! And act quickly!

பிரிவுப்பொறுப்பில் மத்திய பொதுப்பணித்துறையில் உள்ள நிலையை உருவாக்க தயக்கம் ஏன் ?

R. ஸ்ரீராமன் பொதுச்செயலாளர்,
த. பொ. ச. / பொ. ப. துறை

தமிழக பொதுப் பணித்துறையில் 1949 வரை பிரிவுப்பொறுப்பில் டிப்ளமா, டிகிரிப் பொறியாளர்களிடையே சம்பள விகித வேறுபாட்டைத் தவிர வேறு எந்தவித வேறுபாடும் கிடையாது. ஆனால் 1949 முதல் 1956 வரை பெயர் வித்தியாசம், பதவி உயர்வு விகிதாசாரம், பதவி உயர்வு பெற கால அளவு ஆகியவைகள் புகுத்தப்பட்டது. அதற்கான ஆணைகளில் டிகிரிப் பொறியாளர்களுக்கு அதிக வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக மேற்குறிப்பிட்ட சலுகைகள் வழங்கப்பட்டன. 1971ல் டிகிரிப் பொறியாளர்கட்கு அரசிதழ் தகுதி, 1977ல் டிப்ளமோ பொறியாளர்கட்கு இளம் பொறியாளர் எனவும், டிகிரிப் பொறியாளர்கட்கு உதவிப் பொறியாளர் எனவும் பெயர் மாற்றம் கொடுக்கப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் சிகரமாக இதுவரை பிரிவுப் பொறுப்பில் இருசாராரும் ஒரேவித பணிபுரிந்து ஒருவருக்கொருவர் மாறுதல் (Inter Changeable) பெறும் வாய்ப்பு இருந்தும், எந்த இலாகாவிலும் இல்லாத முறையில் 1965 முதல் மூன்று முறை பணிநீக்கம் என்ற கோடரியால் நியாயமற்ற, மனிதாபிமான மற்ற முறையில் டிப்ளமா பொறியாளர்கள் மட்டும் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

பிரிவுப் பொறுப்புக்கு தேர்ந்தெடுப்பதில் டிப்ளமா பொறியாளர்கட்கு 25 சதவிகித ஒதுக்கீட்டை அதிகபட்ச எல்லையாக நிர்ணயித்து (Maximum limit) தெரிந்தெடுப்பது முற்றிலும் நியாயத்திற்கு புறம்பான ஒன்று.

ஆனால் மத்திய பொதுப்பணித்துறையில் பிரிவுப் பொறுப்பில் டிப்ளமா, டிகிரிப் பொறியாளர்களிடையே எந்தவித வேறுபாடும் இன்றி ஒரே பொதுப் பெயர், ஒரே சம்பள விகிதம், பதவி உயர்வு பெற விகிதாசாரம், கால அளவு வேறுபாடுகள் அன்றி தெரிந் தெடுக்கப்படுகின்றனர். தெரிவு செய்கையில் கல்வித் தகுதியை டிப்ளமா அளவில் வைத்து போட்டித் தேர்வு (Competitive Examination) மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், டிகிரிப் பொறியாளர்கட்கு அளித்துவந்த 6 முன் ஊதிய உயர்வு தேவையில்லை எனக் கருதி மூன்றாவது மத்திய சம்பளக் கமிஷன் அதை நீக்கிவிட்டது. மத்திய பொதுப்பணித் துறையில் பணிபுரியும் டிகிரி மற்றும் டிப்ளமா பொறியாளர்களின் கல்வித் தகுதியும், தமிழக பொதுப் பணித்துறையில் பணிபுரியும் பொறியாளர்களின் கல்வித் தகுதியும் ஒன்றே. அதேபோல் மத்திய, மாநில பொதுப் பணித்துறைகளில் பணியும் ஒன்றே.

ஆனால் மத்திய பொதுப் பணித்துறையில் டிகிரி டிப்ளமா பொறியாளர்களிடையே எந்தவித வேறுபாடும் இல்லை. ஆனால் தமிழக பொதுப் பணித்துறையில் எவ்வளவு கொடுமையான வேறுபாடுகள்.

பேசுவதைத் தாங்களே கடைப்பிடிப்பவர்களாக இருத்தல் வேண்டும். இந்த மனோதிடம் இருந்தால்தான், மற்றவர்களையும் சீர்திருத்த இயலும். —சுவாமி சித்பவானந்தா

தமிழ் மாநிலத்தில்கூட பல அரசுவாரியங்களில் (கட்டபொம்மன் போக்குவரத்து நிறுவனம்) தமிழ்நாடு இறைச்சி நிறுவனம், மற்றும் பல நிறுவனங்களில் டிகிரி மற்றும் டிப்ளமா பொறியாளர்கட்கு கல்வி அடிப்படையில் சம்பள வேறுபாடின்றி அனுபவம் மட்டும் டிப்ளமா பொறியாளர்கட்டு கூடுதலாக வைத்து ஒரே பெயர் (உதவிப் பொறியாளர்) ஒரே சம்பளம் வழங்கப்படுகிறது. அயற்பணியில் மேற்படி நிறுவனங்களில் பொதுப் பணித்துறையிலிருந்து சென்று பணிபுரியும் பொறியாளர்களிடையே பல வேறுபாடுகள், ஆனால் அதேசமயத்தில் அதே தமிழக அரசின்கீழ் உள்ள அரசு நிறுவனத்தில் உள்ள இரு பொறியாளர்களிடையே எந்தவித வேறுபாடுமின்றி பணிபுரிவது எவ்வகையில் நியாயம் என்பது எங்களுக்கு விளங்கவேயில்லை.

தமிழக அரசு பல கால கூட்டங்களில் மத்திய அரசின் கொள்கைகளோடு ஒப்புதல் அளித்து நிறைவேற்றும் பொழுது அரசு ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும் வயது வரம்பை உயர்த்துதல், பஞ்சப்படி வழங்குதலில் அகவிலை குறிப்பீட்டு எண் (Consumer Price Index) அளவு ஆகியவைகள், இதிலும் குறிப்பாக சமீபத்தில் தமிழக அரசால், மத்திய அரசால் ஒப்புக்கொள்ளப்பட்ட அரசு ஊழியர்கட்கு வாரத்தில் 5 நாட்கள் பணிபுரிதல், ஆண்டுக்கு 12 நாள் சில்லறை விடுப்பு ஆகியவைகள் மத்தியபொதுப்பணித் துறையில் பிரிவுப் பொறுப்பில் உள்ள பணி விதிமுறையை தமிழக அரசின் பொதுப்பணித் துறைக்கும் அமுல் படுத்துவதில் தயக்கம் ஏன் ? சுணக்கம் ஏன் ?

தமிழக அரசிலேயே எப்பதவியிலும் வேவ்வேறு கல்வித்தகுதியுடைய ஊழியர்கட்கு எவ்வித பாகுபாடு காட்டப்படாததும் பஞ்சாயத்து யூனியன்களில் டிப்ளமோ மற்றும் டிகிரிப் பொறியாளர்கள் "Union Engineer" என ஒரே பெயராலும், எல்லா பொறியியல் துறையில் பணிபுரியும் டிகிரி மற்றும் M.Sc. Ph.D. டிகிரிப் பொறியாளர்களிடையே எவ்வித வேறுபாடு இல்லை எனவும் Ministerial Service பணிபுரியும் டிகிரி மற்றும் S.S.L.C: தகுதியுடைய இளநிலை உதவியாளர்களை ஒரே பெயரிட்டு அழைப்பதும் அதேபோல் I.T.I. மற்றும் டிப்ளமா தகுதியுடைய பொறியாளர்கள் எங்குப் பணிபுரிந்தாலும் எவ்வித வேறுபாடு காண்பிக்கப்படவில்லை என்பதும் மறுக்கமுடியாத உண்மை,

கடைசியாக தமிழக துறைமுகப் துறையில் அரசு தேர்வாணைக் குழு மூலமாக தெரிந்தெடுக்கப்படவுள்ள இளம் பொறியாளர்கள் பதவிக்கு டிப்ளமா, டிகிரி வேறுபாடு காண்பிக்கப்படாதது மேலும் மறக்கமுடியாத உண்மையாகும்.

மத்திய பொவப்பணித்துறை, தமிழக அரசுத்துறை நிறுவனங்கள், தமிழக அரசுத் துறையில் வேறு எந்த பதவியிலும் இரு வேறு கல்வித் தகுதியுடையவர்கள் பணிமாற்றும் போது காணபிக்கப்படாத வேற்றுமை பொதுப்பணித்துறை பிரிவுப் பொறுப்பில் மட்டும் காண்பிப்பது எல்வகையில் உண்மையாகும்? நியாயமாகும் !

பொதுப் பணித்துறை பிரிவு மட்டும் மிகச் சிறப்பு, தகுதி உடைய பதவியா ?

பொறியாள பெருமக்களே ! அரசியல் வல்லுனர்களே ! தமிழக அரசு அதிகாரிகளே ! பொதுமக்களே !

சிறிது சிந்திப்பீர் ! ! !

ஆகையில் நாங்கள் பிரிவுப் பொறுப்பில் மத்திய அரசு பொதுப்பணித்துறையில் உள்ள நிலைமையை உருவாக்க கேட்கிறோம். இதன் நியாத்தை உணர்ந்து எங்களுக்கு நியாயம் விரைவில் கிட்டும் என நம்புகிறோம்.

வாழ்க்கையில் பெரிதும் எதிர்பாராதவையே நடக்கின்றன. இப்படி இல்லாவிட்டால் வாழ்க்கைக்கு பயனோ, பொருளோ இருக்காது. —எமர்சன்

"DECT"

A CUSTODIAN OF DOWN TRODDEN WITH ITS UNSHAKABLE BASIC PRINCIPLES...

Er. T. V. Gomathynayagam, LCE.
Generel Secretary. D.E.C.T.

We are extremely happy that one of our constituent units celebrating its **"Platinum Jubillee"**. Our hearty congradulations to them. On this happy occasion we wish to recall and register our appreciation to Tamil Nadu Engineering Association P.W.D. for their role played as the founder and forrunner of this premier organisation, Diploma Engineers council, Tamil Nadu.

We are proud of its glorious service in the last 75 years and its continued service for the common cause of engineers and especially to the Diploma Engineers. It may not be out of place to mention about the ideals for which the DECT is working for and the TNEA (P.W.D.) is extending its maximum best Co-operation to activate those ideas.

1. Recuriment Payscale & Designation :

The diploma engineers council Tamil Nadu is of firm view that the recruitment to the category of supervisors (ie Section level posts) in all the engineering departments shall be in the ratio of 3 : 1 between the Diploma and Degree Engineers. This is based on the number of engineers produced every year from the Polytechnics and Engineering colleges in Tamil Nadu.

Further 'when the diploma engineers and degree engineers discharge identical functions; bear similar responsibilities; control the same jurisdiction and the posts held by them are inter changeable, there cannot be any chance for discrimination between them, one section cannot be paid lesser salary and the other higher salary. The discrimination now shown by the Government in regard to the two sets of pay scales to one category of post clearly offends the cardinal principle of **"Equal Pay for equal work"** which is a constitutional goal guaranted to every citizen. Therefore the DECT always demands for fixation of only one set of payscale to the category of supervisor posts irrespective of whether they are held by the Diploma engineers or degree

---

நான் ஓர் ஈயினுடைய தலையாக இருக்க விரும்புவேனே தனிர சிங்கத்தின் வாலாக இருக்க விரும்ப மாட்டேன். —யாரோ

engineers. Further there should be one common designation for the post and the present practice of calling the diploma engineers as Junior Engineers and the degree engineers as Assistants engineers by personal designation has to be dispensed with once and for all.

In this connection, it is to be pointed that what the DECT requires is already followed in the central Public Works Department and other government of Indian services. There is no disparity or discrimination between the same category of staff based merely on their qualifications. Therefore, similar policy has to be followed in our state also.

2. Promotion :

As regards the promotion to the posts of sub division officers. (ie. Assistant Executive Engineers) from the category of supervisors, a proportion of 1 : 3 between diploma and degree engineers is followed in most of the engineering departments of Tamil Nadu where as the C.P.W.D. and other central Government services are not following this ratio system and the promotions are made purely on the basis of merits and seniority. Therefore DECT demands for making promotions to the posts of sub-divisional officers strictly on the basis of seniority and merits, without giving undue preference only to the engineering graduates.

3. Under employment :

In many engineering departments and statutory bodies, Diploma engineers are apponited in the lower categories. In many cases, the diploma engineers are employed under N.M.R (daily wages basis), though they are fully qualified for appointment to the post of Junior engineers. The DECT strongly objects the present practice of keeping the diploma engineers under employed in various departments and autonomous bodies and requests for putting an end to this practice.

4. Injustice to Diploma Engineer :

In most of the engineering departments of Govt. of Tamil Nadu autonomous boards, Local bodies, Municipal corporations, statutory Rules are deliberately violated when the the promotions are made to the engineers. Preferential treatments are given to the degree engineers flouting the rules, standing instructions of the Govt etc., This situation has led to the filing of scate of writ petitions in the high court of Madras and Supreme Court of India. On date hundreds of writ petitions filed by the diploma engineers of various departments are pending in the courts.

The Diploma engineers are victimised in almost all the departments for the fault and failure of the concerned authorities in following the rules made by Government. Because of this lapse on the part of the concerned authorities of various institutions, public money is unnecessarily spent and wasted to defend their illegal action in the courts. The innocent employees are also unnecessarily driven to the courts to seek justice even in ordinary matters.

கம்பெண்ணின் கண்ணீரைத், துடைக்க முடியாத கடவுளிடத்திலாவது, மதத்தி னிடத்திலாவது எனக்கு நம்பிக்கை கிடையாது. —மகாத்மா காந்தி

DECT demands for probing the matter in respect of all the departments and to set right the situation. It also demands that any loss incured by the department because of the failure and high handed action of the officers shall be made good from the salaries of those officers concerned.

5. Acquiring higher qualifications :

In the recent past many of the institutions of government departments are reluctant to forward the application and they refuse the applications of the diploma engineers to prosecute further studies in the evening colleges. This has caused lot of hardships to Diploma engineers. In fact this action on the part of many of the administrative authorities is in contrast and contradictory to the Govt. policy on acquiring higher qualification by the Government servants.

The reasons attributed by those authorities are that the normal functioning of the institutions will be affected by sending the employers for higher education.

In that event we wish to suggest that correspondence courses ; to acquire engineering quatification may be introduced in the Universities of our state.

The T.N.E.A. (P.W.D.) has all along been serving well for these common goals. It has been successful in sorting many of the problems in the public works Dept. We wish them many more success in their endeavouss.

We wish to recall the golden words of our late Prime Minister **Pandit** Jawaharial Nehru in this occasion ;

"Men taking degree is no sign of learning. I am prepared to give the most important job to a man who did not have a degree but who has the capacity and talent to fulfil the task."

LONG LIVE DECT ! LONG LIVE TNEA !!

பட்டயப்படிப்பு எந்த 'டிகிரியையும்'

விட மட்டமல்ல ! தொழில்கல்வி

ஜனநாயகத்தின் ஆணிவேர் !

பேச்சாளர்கள், எதையும் வெறும் வாயளவில் சொல்வதில் பயன் இல்லை. தாங்கள் பேசுவதைத் தாங்களே கடைப்பிடிப்பவர்களாக இருத்தல் வேண்டும். இந்த மனோதிடம் இருந்தால்தான், மற்றவர்களையும் சீர்திருத்த இயலும். —சுவாமி சித்பவானந்தா

RECORDS IN WORLD STRUCTURES

(Compiled by Er. S. Sethuraman)

1. **Largest Industrial Building** : *Nizhnig Tagil Rail Road Car and Tank Plant U.S.S.R.* Floor space : 204.3 Acre or 827620M²

2. **Largest Commercial Building** : *V.B.A. Co.operative Auction Building at Aalsmeer Netherlands.* Floor space : 74.9 Acres (303420 M²)

3. **Largest Office Building** : *TWIN TOWERS—World Trade Centre New York.* Floor space : 100.30 Acre (4,06320 M²)

4. **Largest Parking Lot/Garage** : (i) Largest Parking Lot :— *Giants Stadium East Rutherford, U. S. A.* Capacity : *26000 Automobiles + 500 Buses.* (ii) Largest Garage :— *Garage at O'Hare Airport, Chicago, U. S. A.* Capacity : *9250 Cars (6 levels).*

5. **Largest Hanger** : *Good Year Airship hanger, AKRON, OHIO, U.S.A.* Floor space : 8.35 Acre (33826 M²) Capacity : *55 million cubic ft (15,57'425 M³)*

6. **Largest Airsupported Structure** : *Roof of Pontiac Silverdome Stadium, Michigan, U.S.A.* Air Pressure Supports 10 Acres (40510 M²) translucent fibre glass roofing.

7. **Largest Cooling Tower** : Cooling tower at Nuclear Power plant at Uentrop West Germany, Hight 590 ft (180 Metre)

8. **Largest Stadium** : *(i) Covered Outdoor Stadium* Azteca Stadium, Mexico. Capacity : 1,07,000 Persons *(ii) Indoor Stadium* Superdone, New Orleans, *U.S.A.* Capacity : 29400 Persons

---

எங்கு ஏழ்மையும், இல்லாமையும் இல்லாமல் இருக்கிறதோ, அங்குதான் மனிதத் தன்மையைக் காண முடியும்.

—லெனின்

9. Tallest Building	:	*(i) Tallest building in the world* Sears Tower, Chicago Number of stories 110 Height : 145 ft (443 metre) Total including TV Antenna 1559 ft (474 metre) *(ii) Tallest apartment building in the world* Lake Joint Tower, Chicago Number of stories 70 Height : 645 ft (197 metre)
10. Tallest Towers	:	*(i) Guyed* Warshaw Radia Mast, Warshaw, POLAND Hight : 2121 ft (647 metre) *(ii) Self Supported* C. N. Tower, Metro Centre, TORONSO, Canada Height : 1822 ft (555 metre)
11. Tallest Chimney	:	Chimny at Copper Cliff, Sudbury, Canada Height : 1246 ft (380 metre) Diametre : 116.4 ft (35.50 metre) at bottom to 51.80 ft (15.80 metre at) top

Courtesy & Reference : Guinnes Book of World Record—1983. Published in August 1984 Volume of TOR STEEL.

பொறியாளர்கள், C. P. சண்முகம், அடைக்கலதுரை, மற்றும் கோல்டுவின் இமானுவேல் அவர்களே ! உயிரை துச்சமெனக் கருதி சாகும்வரை உண்ணா நோன்பு இருந்து உடன் பிறப்புக்களுக்கு வாழ் வளித்த உத்தமர்களே ! உங்கள் தியாகங்களை நினைவு கூர்வதில் இந்த சங்கம் பெருமை கொள்கிறது ! இந்த வையகம் உள்ளவரை பட்டயப் பொறியாளர் சமுதாயம் உங்கள் புகழ் பாடும் ! வாழ்க ! வளர்க !!

உத்தம மனைவியைப் பெற ஒரே வழி, உத்தமக் கணவனாக இருத்தலே.
—பார்க்கர்

Ers.

156. G. Balasubramanian, L.C.E.
157. S. Sivagnanaswamy, L.C.E.
158. N. Subramanian, L.C.E.
159. Vasudeva-Rao, L.C.E.
160. R. Solamalai, L.C.E.
161. A. Dhanabalan, L.C.E.
162. C.P. Shanmugam, L.C.E., B.E.
163. B. Nagarajan, L.C.E.
164. S. Palanichamy, L.C.E.
165. S. Venkataraman, L.C.E.
166. N. Venkatachalam, L.C.E.
167. T. Arumugam, L.C.E.
168. R. Dhamodaran, L.C.E.
169. N. Parthasarathi, L.C.E.
170. P. S. Jayaraman, L.C.E.
171. M. Murugesan, L.C.E.
172. D. Jagadeesan, L.C.E.
173. K. M. Ramakrishnan, L.C.E.

Ers.

174. M. Muthuswamy, L.C.E.
175. A. Sivagurunathan, L.C.E.
176. M. Ramiah, L.C.E.
177. T. P. S. Vairavasundaram, L.C.E.
178. N. Karuppiah, L.C.E.
179. T. Saibaba, L.C.E.
180. S. Helkiah, L.C.E.
181. V. N. Ganesan, L.C.E.
182. P. S. Ekambaran, L.C.E.
183. S. G. Subramanian, L.C.E.
184. C. N. Viswanathan, L.C.E.
185. S. Subramaniam, L.C.E.
186. S. Balasubramaniam, L.C.E.
187. K. Muthiya L.C.E.
188. I. Vaidhilingam, L.C.E.
189. K. Subramanian,
190. M. Shahul Hameed,

கேளுங்கள் கொடுக்கப்படும் - என்றீரே கர்த்தரே !
கேட்டுக் கேட்டு எங்கள் 'வோகல் கார்டே'
கிழிந்து போனதுதான் கண்ட பலனா ?
ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக்
காட்டு என்று சொன்ன எங்கள் பிதாவே !
இரண்டு கன்னமும் வீங்கிப்போய் விட்டதே ! !
ஏசுவே ! மூன்றுவது கன்னத்துக்கு எங்கே போவேன் ?

— ஒரு 'வெள்ளிவிழா'
இளம்பொறியாளனின் மௌனகீதம்

நோயாளிகளின் நலம் காக்க
இரத்த தானம் செய்யுங்கள்

மூடனுடன் விவாதம் செய்வது அறிவுடைமையல்ல. பக்கத்தில் நிற்பவர்களுக்கு யார் மூடன் என்று புரியாமல் போய்விடும். —விஸ்ப்டிங்ஸ்

'துறையின் வெள்ளி விழா' மின்மினிகள்

தமிழகத்திலே பொறியியல் பணித்துறைகளின் முன்னோடியான இந்த பொ. ப. துறையில் துழைந்த பதவியிலேயே கால்நூற்றாண்டுகளாக பணியாற்றிக்கொண்டு, எந்தவித பதவி உயர்வுக்கும் வழியில்லாமல் முதிர்ந்து, மூப்பாகி, கருமமே கண்ணாயினார் என்று கடமையை செய்வதன்றி வேறு வழியின்றி, உள்ளக்குமுறல்களை அடக்கி-அடக்கி, வெந்து நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் 200-க்கும் மேற்பட்ட 'வெள்ளி விழா' இளம் பொறியாளர்களுக்கு என்று விடிவுகாலம் தோன்றுமோ? நாமறியோம்! துறையின் ஊழியர்களின், அதிலும் குறிப்பாக மூத்த அநுபவம் மிக்க இத்தகு பொறியாளர்களின் நலன் நல்லவிதமாக பேணப்படாவிட்டால் நட்டம் நாட்டுக்குத்தானே? இதை நாங்களும் பல்வேறு கூட்டங்களில் பலமுறைகளில் எடுத்துச் சொல்லியும் மனிதாபிமான அடிப்படையில்கூட இந்தப் பிரச்சனைக்கு விடிவுகாண சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிய வில்லை.....

'பவழ விழா' காணும் இன்று அத்தகைய 'பொறுமை திலகங்களை' மலர்வாயிலாக உங்களுக்கு அறிமுகப் படுத்துவதை த.பொ.ச./பொ.ப து. கடமையாக கருதுகின்றது.

'பவழ விழா' இந்த துர்பாக்கியசாலிகளின் வாழ்க்கையில் மங்கலங்களை உண்டாக்கட்டும்! வெள்ளி விழா இளம் பொறியாளர்களின் பட்டியல் தனியாக தரப்பட்டுள்ளது! இங்கு அவர்களில் சிலரின் புகைப்படங்களை பிரசுரிப்பதில் 'மலர் குழு' பெருமைப்படுகிறது!

Er. A. சுப்ரமணியன்

Er. K. குலசேகரன்

Er. R. பாலசுந்தரம்

Er. R. கிருட்டிணமூர்த்தி

துரையின் வெள்ளிவிழா மின்மினிகள் (தொடர்ச்சி)

Er. N. C. ராஜேஸ்வரன்

Er. A. V. கணபதி

Er. M. குணசேகரன்

Er. K. R. சீனிவாசன்

Er. K. செல்வராஜ

Er. T. பரமசிவம்

Er. A. அடைக்கலதுரை

Er. A. நாராயணன்

துரையின் வெள்ளிவிழா மின்மினிகள் (தொடர்ச்சி)

Er. V. தங்கவேல்

Er. U. தங்கசாமி

Er. R. ரங்கநாதன்

Er. S. சோமசுந்தரம்

Er. V. ஜெயராமன்

Er. P. S. சேதுராமன்

Er. R. ராஜகோபால்

Er. V. K. கலியபெருமாள்

துரையின் வெள்ளிவிழா மின்மினிகள் (தொடர்ச்சி)

Er. M. ரங்கராசன்

Er. K. K. வாசுதேவன்

Er. S. சிவஞானசாமி

Er. K. M. ராதாகிருட்டிணன்

Er. M. முனுசாமி

Er. A சிவகுருநாதன்

Er. S. ஹெல்கையா

Er. C. பாலசுப்பிரமணியன்

துறையின் வெள்ளி விழா மின்மினிகள் (தொடர்ச்சி)

Er. K. முத்தையா

Er. K. சுப்பிரமணியம்

Er. M. சாகுல்அமீது

Er. D. சந்திரசேகரன்

Er. P. சத்தியநாராயணன்

Er. K. R. ராமுடு

Er. K. சுப்பிரமணியம்

Er. S. ஜெயராமன்

துறையின் வெள்ளி விழா மின்மினிகள் (தொடர்ச்சி)

Er. R. பாலசுப்பிரமணியன்

Er. P. S. ஜெயராமன்

Er R. பாலசுப்ரமணியன்

Er. T. S. சீனிவாசன்

Er. A. Lakshmanan

Er. A. தனபால்,

Er. B. H. சுப்பிரமணியம்

Er. R. அய்யாசாமி,

துறையின் வெள்ளி விழா மின்மினிகள் (தொடர்ச்சி)

Er. R. பாட்டையன்

Er. T. தியாகராசன்.

Er. G. விஸ்வநாதன்

Er. C. N. விஸ்வநாதன்



Er. C. P. ஷண்முகம்

Er. A. S. ராமசாமி

Er. B. வீரராகவன்

Er. S. ஆறுமுகசுந்தரம்

தமிழ்நாடு பொறியியல் சங்க முன்னாள் தலைவர்கள் ..

ER. V. கணபதி

ER. R. S. நடராஜன்

ER. S. கணபதி

ER. S. முருகானந்தம்

ER. I. அப்பாஸ் மந்திரி

ER. C. சண்முகப்பெருமாள்

பவழவிழாவிலே இவர்களை கௌரவப்படுத்துவதில் சங்கம் பெருமை கொள்கிறது.

"மூப்பெரும் தளபதிகள் :"

பொறியாளர் சித்தையன்

சிந்தனைச் செம்மல் சி. ப. சண்முகம்:



எங்கள் கனவெல்லாம்
நனவாகும் வண்ணம்
தங்கள் உயிர் போகும்
நிலையான தலைவா :
சிங்கத்தின் சினமாக
நின்று சிறப்பான
தங்க நிற மன்னா·

வங்கத்தின் கடலோரம்
இன்று ஒரு வரலாறு
படைத்திட்டோம் நாமே :
பொங்குமாங் கடலாக
வந்துப் பொறியாளர்
பணி காத்த கண்ணா :
பல்லாண்டு நீ வாழவேண்டும் :

நான் திருந்தத் திறமையற்றவன் தரணியைத் திருத்த இயலாது. - கான்புஷியஸ்

சட்டத்தின் முன் எல்லோரும் சமம்

கர்நாடகத்தின் முதுபெரும் விஞ்ஞானியும் நூறாண்டு வாழ்த்தவருமான டாக்டர் விஸ்வேஸ்வரய்யா அவர்கள் மைசூர் மஹாராஜாவின் திவானாக இருந்தார்.

ஒரு சமயம் அவர் அரசாங்க அலுவல் காரணமாக வெளியூர் சென்ற பொழுது ஒருநாள் இரவு பயணமாளிகையில் தங்கி அரசு பைல்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். அரசுப் பைல்களைப் பார்த்து முடித்ததும் தன்னுடைய சூட்கேஸைத் திறந்து அதில் இருந்த மெழுகு வர்த்திகளை எடுத்துக்கொளுத்தி வைத்தார். பின்னர் மாளிகையில் எரிந்து கொண்டிருந்த மின் விளக்குகளை அணைத்துவிட்டார்.

சூட்கேஸிலிருந்து புத்தகங்களை எடுத்துப் படித்துக்கொண்டிருந்தார். மெழுகு வர்த்தி எரிந்துகொண்டிருந்தது. மாளிகையின் காவலாளி பயத்துடனும், பதட்டத்துடனும் அவர் அருகிம் வந்து ''ஐயா, மாளிகை மின் விளக்குகள் எரியவில்லையா ? நான் மாளிகையின் மின் விளக்குளை எரிய வைக்கட்டுமா ?'' என்று கேட்டான்.

அதற்கு அம்மேதை ''மின் விளக்குளை எரியவிட வேண்டாம். நான் அரசு பைல்களைப் பார்க்கும்பொழுது மட்டும் தான் மாளிகையின் மின் விளக்குகளைப் பயன் படுத்தவேண்டும். நான் என் சொந்தக் காரணத்திற்காக புத்தகங்களைப் படிக்கும் போது ஏன் மின் விளக்குகள் எரியவேண்டும் என்றுதான் மின் விளக்குகளை அணைத்து விட்டு மெழுகுவர்த்திகளை கொளுத்தி வைத்துள்ளேன்'' என்று கூறினார்.

தகவல் : என். ஆர். ஜெயச்சந்திரன்

நன்றி : ரத்தினபாலா

தட்டுங்கள் திறக்கப்படும்
என்ற தேவனே !
'தட்டித்தட்டி' 'கை' ரத்தம் கட்டிப் போனதுதான்
கண்ட பலனா ?
சேப்பாக்க செந்தூறக் கோட்டையின்
மனக்கதவுகளை திறக்க மார்க்கம்
தெரியவில்லை பிதாவே !

மனச்சாட்சியின்படி நடப்பவன் நீதி மன்றங்களின் தண்டனைக்குப் பயப்படுவதே இல்லை.
—பீச்சர்.

'துறை மெழுகுவர்த்திகள்'

பூங்கா மாணிக்கம்

*

அடியெடுத்த நாளில் இருந்து
ஓய்வு பெறும் வரை
ஒரே பதவியில் இருந்து
துறைக்கு ஒளி தந்து
தங்களையே அழித்துக்
கொண்டு வரும்
மெழுகு வர்த்திகள் !

*

எதையும் தாங்கும்
இதயத்துடன்
எல்லா இறக்கங்களையும்
இடி தாங்கியென
தாங்கிக் கொள்ளும்
இதயத்திற்கு சொந்தமானவர்கள் !

*

சம பந்தியில் ஓர வஞ்சனையா
படையல் இடும்போதும்
ஒரு கண்ணுக்கு வெண்ணையும்
மற்றுமோர் கண்ணுக்கு
சுண்ணாம்பும் வைத்து
வேடிக்கை காட்டிவரும்
வாடிக்கையாளர்கள்
முன்னர், இவர்கள் ஒரு
பஞ்சைகள் !

*

ஏமாற்றங்கள் அடுக்கடுக்காய்
ஏறி விட்டாலும்
இன்முகத்தோடு
எப்பணியும், எவரிடத்தும்
ஆற்றும் ஆற்றல்
பெற்றிட்ட மறவர்கள் !

*

ஏற்றம் எதிர்கொண்டு
அழையாத போதும்
ஆற்றலிலே இமியும்
குறையாது கதிராடிவரும்
(அ) சகாய சூர வர்கங்கள் !

*

பின்னனியில் வந்தவரெல்லாம்
முன்னனியில் நிற்பதனை
கண்டு பொறாமைப்படவில்லை
என்றாலும்
நியாயங்கள் மறுக்கப்படுகின்றனவே
யென எண்ணி எண்ணி
கண் கலங்கும் கண்மணிகள் !
துறையின் தீயாகத் தீபங்கள் ! !

*

கிழக்கு வெளுக்கும்
கீழ் வானம் சிவக்கும்
அவர்கள் பொழுது புலர
பூபாளம் பாடி புத்துணர்வுடன்
பொலிவு பெறும் காலம்
ஒரு நாள் வரும் என்ற
நம்பிக்கையில் நடமாடிவரும்
எதிரப் பொறியாளர்கள் !

*

உழைப்பின் பலனை
மற்றவர்கள் பெற்று
உயர்வடையும் போதும்
அடக்கத்தின் அடிதளமாக
என்றும் துறையின்
அடிமட்டப் பொறியாளர்கள் !

கூடையை மூடும்போது நாம் மூடியிருப்பது கோழியா - சேவலா என்று பார்த்து விட்டு மூடவேண்டும். கோழியை மூடாது சேவலை மூடிவிட்டு, ஐயோ முட்டை இடவில்லையே என்றால் என்ன பொருள்.

தொகுத்தவர் : ஆர். கே. எஸ்.

தவறு நேருவதால் இழிவு இல்லை. தவறு நேர்ந்து விடுமோ என அஞ்சிப் பின் வாங்குவதுதான் இழிவு.

—ஹென்றிபோர்டு.

விழித்தெழுவோம்: நண்பர்களே

நா: முத்தையா,
மதுரை

விண்முட்டும் புகழ்பெற்ற
விசுவேசுவர அய்யாவின்
விவேகமிக்க பிள்ளைகளாய்
விசுவாசமாய் உழைத்திட்டும் ;
முறை தவறிப் போய்விட்ட-
இவ்வக்கற்றத் துறையினிலே
முன்னேற வழியின்றி ;
திக்கற்று திசையற்று
விக்கித்து நிற்கின்றோம்.
தொல்லைகளாயிரம் வரும்
எல்லையிலா ஏழ்மையிலும்
தொடக்கப் பள்ளிக் காலம் முதல்
தொழில்.நுட்பக் கல்வி வரை
தொடர்ந்திட்டு முடித்த பின் ;
கண் நிறைந்த கனவுகளுடன்
களத்தினிலே இறங்கிய நாம்
கரித்திருக்கும் நீர் வழிய-மனம்
கசிந்துருகிக் கலங்குகின்றோம்
கணம் நிறைந்த துயர்களோடும்
மனமுவந்து பணி செய்தும்
தாய்மை மனம் இல்லாத
தரம் தெரியா மனிதர்களால்
தலை குப்புறத் தள்ளப்பட்டோம்
காட்சி ஒன்றையே காணும்
கண்களிரண்டினிடையே
நல்லதென-கெட்டதென
தரம் தெரியா மனிதர்களால்
தலை குப்புறத் தள்ளப்பட்டோம்
காட்சி ஒன்றையே காணும்
கண்களிரண்டினிடையே
நல்லதென-கெட்டதென
தரம் பிரித்தும் பார்ப்பதுண்டோ ?

ஒரே வழியில் செல்கின்றோம்,
ஒரே தொழிலை செய்கின்றோம்
டிகிரியென்றும் டிப்ளமோவென்றும்
பிரித்தல் நீதியாகுமோ ?
பேசி நாமும் அயர்ந்துவிட்டோம்
யாசித்தும் கேட்டு விட்டோம்
நிலைமை இன்னும் மாறவில்லை
நிமிர்ந்திடுங்கள் தோழர்களே :
இரு வேறாய் பார்க்கும்
இனவெறியையும் மிஞ்சிடும்-இவ்
இழி நெறியை மாற்றிடவே
திட மிக்க மனதுடனே
ஒருமித்துக் கூடிடுவோம்.
பவள விழாக் காணும்-இப்பசுமை
மாறா நாட்களில்-நம்
பரிதாபக் குரல்கள்
பாரத தேசமெங்கும்
பலமாக ஒலிக்கட்டும் ;
பகலவனைக் கண்ட
பனித்துளிகள் போல்
பரிகசித்தக் குரல்களெல்லாம்
வளமிகு நம் படைகள்
பயந்தோடி ஒழியட்டும்
விழித்தெழுங்கள் நண்பர்களே !
இருள் திரையைக் கிழித்திடுவோம்
நலிந்துவிட்ட நம் இனத்தின்
நலம் காக்க விரைந்திடுவோம் :
நமக்கென்று ஓர் உலகை
நாமே படைத்திடுவோம்-அதில்
சமத்துவ நிலை அமைத்து
ஜய கீதம் இசைத்திடுவோம் :

காலம் மாறக் கூடியது. மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

—அறிஞர் அண்ணா.

த. பொ. சங்கம் பெரியகுளம் கிளையின் வரலாற்றுச் சுருக்கம்

ஆர்வமிக்க பொறியாளர் நண்பர்களால், இக்கிளையானது. ஜனவரி 1976 ல் மையச் சங்க அனுமதியுடன் ஆரம் பிக்கப்பட்டது, பெரியகுளம் கிளையானது, உத்தம பாளையம், பெரியகுளம், கோடைக்கானல் நிலக்கோட்டை, திண்டுக்கல், பழநி, ஆகிய வருவாய் வட்டங்களை உள்ளடக்கியது. இக்கிளையில் பெரியகுளம் கோட்டம், திண்டுக்கல் கோட்டம் (மதுரை வட்டம்), பெரியாறு தனிக் கோட்டம் (பெரியாறு தனிவட்டம்), பெரியாறு வைகை உட்கோட்டம் (மதுரைவட்டம்), சோத்துப்பாறை கோட்டம் குடகனாறு கோட்டம் (மதுரை திட்டங்கள் வட்டம்) குதிரையாறு கோட்டம் (தனி திட்டங்கள் வட்டம், திருச்சி) மற்றும் தனி கட்டிட உட்கோட்டம் (தனிகட்டிடவட்டம் மதுரை) ஆகிய கோட்டங் களில் பணியாற்றுகின்ற உதவி செயற் பொறியாளர் உதவி பொறியாளர்/இளம் பொறி யாளர்கள் வரைவு அலுவலர்கள், ஒவர்சீயர்கள் உதவி வரைவாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் இக்கிளையின் உறுப்பினர்களாக உள்ளனர். பெரியாறு அனையி லிருந்து குதிரையாறு திட்ட தனம் வரை இக்கிளையானது பரந்து விரிந்துள்ளது. இக்கிளையில் பெரியாறு அணை மஞ்சளாறு அணை, வைகை அணை, பேரணை, பேரிஜம் ஏரி மருதாநதி அணை, வரதமாநதி பரப்பலாறு அணை, பாலாறு பொருந்தவாறு அணை போன்ற பாசனத்திற்கான நீர்த் தேக்கங்களும் சுருளி மின் நிலையம் பெரியாறு மின் நிலையம் போன்றவைகளும் இக்கிளையின் வலிவிற்கும். பொலிவிற்கும் உறுதுணை செய்த உத்தம பொறுப்பாளர்களின் பெயர் வருமாறு :-

திருவாளர்கள்

S. பாலசங்கரன், K. இராஜாங்கம், M. குமரேசன், G. சுப்ரமணியன், M. தனசேகரன், A. சீனிவாசன், S. K. ஆறுமுகம், G. ஜெகதீசன், D. பிரபாகரன், M. சதாசிவம். S. பெரியசாமி, P. சுப்பாராஜ், S. கங்காதரன், S. கலியமூர்த்தி, A. கனகராஜ், K. பரமன், K. சீனுவாசன், P. முத்துசாமி, A. செல்வராஜ், K. சதாசிவம், G. நாராயணசாமி, P. மகாமுனி, சாமுவேல் ராஜ், K. இராஜமாணிக்கம், D. L. ஜெயக்குமார், M. கணேசன், V. கோவிந்தராஜ், R. அனந்த கிருஷ்ணன், P. சந்திர சேகரன், A. செல்வராஜ், T. நாகராஜன்.

தற்போது இக்கிளையின் உறுப்பினர் பொறியாளர்களின் எண்ணிக்கை 114 ஆகும்.

இளநிலை பொறியாளர் : இன்று செங்கல் கட்டிடவேலை ஆரம்பித்தாக வேண்டுமே? ஏன் துவங்க வில்லை ?

ஒப்பந்தக் காரர் : செங்கல் இல்லை சார்.....

இ. பொறியாளர் : நேற்று மாலை நான் வீட்டுக்கு போகும் போது ஒரு லோடு செங்கல் வந்ததே ? என்னவாயிற்று ?

ஒப்பந்தக்காரர் : அந்த வயிற்றெரிச்சலை ஏன் கிளறுகிறீர்கள் ! நீங்கள் சொல்லிய படி செங்கற்களை தொட்டியில் ஊறப்போட்டோம். காலையில் வந்து பார்த்தால் ராகி' கூழ்தான் மிச்சம் ! சொன்னால் எங்கே கேட்கிறீர்கள் ? மண்ணிலே கோட்டை கட்டிய காலத்தில் எழுதப்பட்ட MDSSஐ விரித்து வைத்துக் கொண்டு ஊறப்போடு ஊறப்போடு என்று உயிரை வாங்கினீர்களே ! இந்த காலத்து அவசர வேக்காடு செங்கல் உங்க MDSSக்கு தேறுமா சார் !! ஐயோ இப்ப என் 3000 செங்கல் போச்சே !

இ. பொறியாளர் : ???

—ஜெயமணி

டிப்ளமோ பொறியாளர்களுக்கு வேதனை உடன்பிறப்பா ! !

''ஒப்பிடத்தக்க பணித்தன்மைகளை ஒட்டிய பதவிகளுக்கு ஒத்த சம்பளம் என்ற அடிப்படையில் அமைந்துள்ள அமைப்பு

—ஊதியக்குழு பற்றிய அரசு செய்தி.

நன்றி !

ஆனால்

ஒப்பிடத்தக்க பணித்தன்மைகளை ஒட்டிய பதவிகளுக்கு ஒத்த சம்பளம் என்றால் பிரிவு பொறுப்புகளில் எந்த பாகுபாடின்றி ஒரே பணி புரியும் டிப்ளமோ, டிகிரி பொறியாளர்களிடையே மாறுட்ட ஊதிய விகிதம்

ஏன் ?

நாட்டின் மேம்பாட்டிற்கு உடல், உயிர், உழைப்பு நல்கும் பொறியாளர் களுக்குள்ளே டிப்ளமோ, டிகிரி என்ற வேறுபாடு இல்லை !

ஆனால் !

மாறுபட்ட சம்பளம் - வேறுபட்ட பெயர்
நியாயமா ? நீதி எங்கே ?

தமிழக அரசு, தன்மான அரசு ஏழை எளியவர் அரசு
சமவாய்ப்பு தரவும், சமநீதி வழங்கவும் தடை ஏன் ?

தமிழ்நாடு டிப்ளமோ பொறியாளர் பேரவை.

நீதிகள் தாமதப்படுத்தப்படலாம்

மறுக்கப்பட்டதாக சரித்திரம் இல்லை

வீட்டிற்கு ஒரு மரம் வளருங்கள்-அது

நாட்டிற்கு நல்ல பலன் தரும் !

தண்டிப்பது ஏதோ கடந்த காலத்தில் செய்த ஒரு தவறுக்காக அல்ல, எதிர்காலத் தில் இம்மாதிரி நடக்கக் கூடாது என்பதற்காக. ஆனால் எதிர்காலத்தில் நன்மை வேண்டுவோர் தண்டிக்கப்படும் போதுதான் நமக்குக் குழப்பம் ஏற்படுகிறது.

—புச்னன்.

AN EPITOME

TAMIL NADU ENGINEERING ASSOCIATION, P.W.D.

In the days gone, under the British colonial rule, P.W.D. was installed in Madras Presidency in the year 1858 to execute the works of Roads, Buildings, Irrigation Projects etc., to the then needs of the populace of the State. By the influx of time and growth of population, more number of plan projects became necessary to be implemented.

In the post Independance era, the democratic Government in the Indian Sub Continent made it possible for more number of plan programme in commensurate with expansion and advancement to establish and assure a true socialistic pattern of society.

Thus the only Engineering Department in Madras Presidency -P.W.D.- has enlarged the scope of bifurcation and additional departments namely Highways, Industries and Commerce, Town Planning, Agricultural Department as well as constituting of state undertakings namely Electricity Board, TNHB, TWAD, Slum Clearance Board and other industrial undertakings.

The engineers of the P.W.D. in the pre-independance days have formed an Association named as "MADRAS ENGINEERING ASSOCIATION" in the year 1910 and continued to serve the objects of the association are :

(a) To render efficient service to the Nation and particpate in building up a Socialistic Society.

(b) To safeguard and promote the interests and rights of members of the association and to get redressal of their grievances.

(c) To elevate the Engineering profession and to raise the standard of the profession.

(d) To promote social, educational, economical, moral and cultural uplift of members as well as Nation.

(e) To putforth an economic solution in the implementation of schemes.

(f) To provide further education for members on Engineering.

(g) To conduct journals for the uplift to Technical and General knowledge of members.

(h) To strive for solving unemployed and under-employed problem of Engineering personnel.

(i) To get affiliated with any of the like-minded Association in this nation.

With painstaking efforts, recognition of the Association was obtained from the then Government after 18 years in G.O.Ms. No. 822, dated 27-9-1928. The members constituting the executives of P.W.D. Degree and Diploma Engineers - combined

---

கூட்டம் கூடுவது எளிதான காரியம். ஆனால் ஒன்றுபடுவதுதான் கடினம். உழைப்பும் தியாகமும் சேர்ந்தால்தான் இந்த ஒற்றுமையுணர்ச்சி பிறக்கும். —தாகூர்

to work for the uplift of the communion of Engineers. By tne advent of time and differences of opinion amongst them, an Association was separately formed by the Degree Engineers in the year 1936. Since then, the Diploma Engineers from the ranks of Supervisors to Superintending Engineers formed the bulk of the Madras Engineering Association and continued to serve.

The days have changed, characters changed, distinctions began to increase and the Degree Engineers formed a separate Association for themselves. Thus the Diploma Engineers had to look for themselves, fight for their cause, to stall the vested interest continued to create wide differences.

Madras Engineering Association was named as TAMIL NADU ENGINEERING ASSOCIATION on formation of Tamil Nadu State.

Under the British rule, discrepancies and disparities did not exist between Diploma and Degree Engineers-executives of P.W.D. is-a-vis the prospects of both the Engineers were not affected. But after 1956, vested interest played a vital role to promote the prospects of Degree Engineers alone. It was also made possible to reduce the chances of promotional opportunities of Diploma Engineers by amending the proportion of 2 : 1 into 3 : 1 (i.e. for every three promotions for Degree holders one Diploma holder to get promotion) In G.O.Ms. No. 5290 P.W.D. dated 24-12-1956.

Upto 1954, the Diploma and Degree Engineers had equal promotional opportunities by way of seniority, (i.e. 1 : 1.) irrespective of intial qualification. Subsequently in 1954 the ratio was increased in favour of Degree Engineers as 2 : 1 between Degree holders and Diploma holders.

The implementation of Government orders in 1954, adversely affected the Diploma Engineers reducing their legitimate chances of routine promotions. This had in effect a moral setback to the Diploma Engineers as well as a telling effect on the administration.

Times rolled on. The T.N.E.A. had to fight at every stage, either in recruitment or in promotion, sustaining the rights, as well as achieving the demands.

In short, service interests of the Diploma Engineers have to be protected with a search of thoughts and continued democratic means of approaches to counterbalance the unjustifiable aspirations and united efforts of Degree engineers.

In recent years not only one section of Engineers i.e. Degree Engineers began to prosper at the cost of service and sacrifices of the other class of engineers. - Diploma Engineers, but also a classwar has begun to creep in the departments with the blessings of Senior Engineers.

As P.W.D. had given place to many Engineering departmental functionaries, TNEA also has given birth to many a service associations in the respective Engineering departments for furtherance of, interest of diploma engineers who begin to experience similar setbacks in official life. Yet TNEA stands as a collosal unit playing a leading role as an association which is SEVENTY FIVE YEARS OLD.

"என்னால் முடியும் என்றே நினைக்கவேண்டும்.
என்னால் முடியாது என்ற எண்ணமே கூடாது." —ஓர் அறிஞர்.

It will not be out of place to make mention of the services rendered by this leading association TNEA - now on to celebrate its "PLATINUM JUBILEE".

In the service conditions of Engineering profession, diploma and degree engineers formed the backbone of the low and middle level managements for the implementation of Plan projects to the Society and its welfare. Only in engineering profession, two class of Engineers share the burden of services thus having given room for vintage position to the degree engineers because of the wealth of their influence in the society and administration.

Our elders who saw the "Madras Engineering Association" to its service to the community has celebrated 36 years of celebration in the year 1946. The then Public works Minister, the eldest Statesman of the country, Hon'ble Thiru M. Bakthavatsalam has rendered a high thinking advice for a reunion of the two class of Engineers to serve for their cause.

In the year 1949, an engineering hand book was issued for dessimination of technology.

From 1955, the two associations began to serve independantly without any useful understanding.

This association in Feb. 1961 celebrated its GOLDEN JUBILEE whence, the then Hon'ble Public works Minister (Late) Thiru P. Kakkan and Hon'ble Education Minister, Thiru C. Subramaniam took part giving useful suggestions as well as assurances.

கோமாளிகள்

இரா. கதைப்பித்தன்

கோமாளிகள் சர்க்கஸில் மட்டும் இல்லை-மன
நோயாளிகள் ஆஸ்பத்திரியில் மட்டும் இல்லை!
வில்லன்கள் சினிமாவில் மட்டும் இல்லை-கொடும்
விலங்குகள் காட்டில் மட்டும் உலவவில்லை!
வேறு எங்கெல்லாம் இவர்கள்
இருக்கிறார்கள் என்பதை,
சிந்தித்துப் பார்த்தால்
சிரிப்பும் அழுகையும்
சேர்ந்தே வருகிறது!
விவரமாய்ச் சொல்லி
வேதனையைக் கிளப்புவானேன்?
விட்டுத்தள்ளுங்கள்.

எரிமலையும், வெள்ளமும், இடியும் உன் கோபத்தின் விளக்கம். மழையும், தென்றலும், நிலவும், உன் கருணையின் விளக்கம் —சுத்தானந்த பராதியார்.

The next year the association had its proud celebration of 51 st year of celebrations.

In 1967-68, the then Supervisors (redesignated as Junior Engineers) were retrenched in large mumbers. Therefore the Association had felt a need to strengthen itself to put up an united front and to rise a commoncall to thwart the wanton impositions on the members. Today TNEA is proud to have twenty branches all over the state.

In 1970, TNEA brought the feelings out of undying, depressed diploma Engineer to the public and administration through a State Conference. The them Hon'ble P.W. Minister Thiru Sadiq Batcha, Silambu Chelver Thiru M. P. Sivagnanam and Thiru H. V. Hande graced the conference and eulogised the efforts, sacrifices, services of diploma engineers with a due consideration.

When large scale retrenchment of J Es was made in the year 1969, Hon'ble Chief Minister of Tamil Nadu, late perarignar Anna, understanding the difficulties of over middle classes has given a big relief for a special selection to reinstate as well as for recruiment of the members in G.O. Ms. No. 440 P.W.D. dated 12-2-71.

The year 1969 is memorable year for TNEA bringing out a useful leaflet "PORIYEYAL KHADIR" which has now grown to a status registering itself as one of the Newspapers of India.

The year 1970, not only saw an awakening in the diploma engineers but also made the diploma engineers of the State from all fhe channels to forth an united front in forming a "DIPLOMA ENGINEERS' COUNCIL OF TAMIL NADU", a forerunner to all the States.

In the same year TNEA with the concerted efforts appealed to the Government advancing the cause of higher education to the deprived few and by persistant efforts parttime degree cource - B.E. - in engineering faculty was secured from the Government in 1971. Now, TNEA is profoundly proud to see not only its members but also many a diploma engineer is securing B.E. degree faculty through part time study with laurels amidst official, personal, social, obstacles as also many a few secured master in engineering.

With all this, Governmental encouragement, departmental incursions creeping to deprive the interested diploma engineers in securing the degree. This climate is to be changed by departmental encouragement shown to advance their qualifications.

The year of 1973, was a vital one as TNEA in cooperation with Diploma engineers Council of Tamil Nadu and AIFDE celebrated its Diamond Jubilee in which the then Hon'ble Chief Minister, Thiru M Karunanidhi, the then Hon'ble Public works Minister, Thiru P. U. Shanmugam, the then Hon'ble Minister for Major Irrigation of Karnataka, Thiru Hegde participated and gave advices. The zenith of the achievements of TNEA could be well inscribed in its history of the two assurances given by none other than the Hon'ble Chief Minister.

நீங்கள் கற்றுத்தரும் கல்வி, ஒரு குழந்தையை மகாத்மா ஆக்க வேண்டுமென்பதா இல்லை, மனிதனாக ஆக்கினாலாம் போதும். — காந்தி.

(i) Common designation as Junior Engineer for all Section Officers (Degree and Diploma holders).

(ii) Confirming Gazetted status to Section Officers with Diploma qualification after five years of service.

Alas ! Apathy continues ?

Public memory short ; sufferageof

Diploma Engineers at large,

THE ASSURANCES NOT FULFILLFD.

First Pay Commission of Tamil Nadu state was implemented. One common scale (with the difference of ten increments only) was given for the two class of engineers (Diploma and Degree) at section level post.

உங்களைத்தான் அழைக்கிறேன் !

இரா. கதைப்பித்தன்

தர்மங்கள் இங்கே
தள்ளுபடியாகின்றன.
நீதிகள் இங்கே
நிராகரிக்கப்படுகின்றன,
தார்மீகக் கோபமுள்ளவர்களே !
தயவு செய்து தலையிடுங்கள் !
பொறுமை இங்கே
புறக்கணிக்கப்படுகிறது.
படபடப்பொறியாளர் வாழ்வு இங்கே
அவமதிக்கப்படுகிறது !
போர்க்குணம் மிக்கவர்களே !
புறப்பட்டு வாருங்கள் !
அன்பும் பண்புமிங்கே
அலட்சியம் செய்யப்படுகிறது.
அடிப்படை நியாயங்கள் இங்கே
அழுத்தமாய் மிதிக்கப்படுகின்றன.
அநீதியை எதிர்ப்பவர்களே !
அவசரமாய் வாருங்கள்.
குரல்கொடுக்க வாருங்கள்.
கூட்டமாய் வாருங்கள் !
நல்லதொரு எதிர்காலத்தை
நாம் பெறவே வாருங்கள்.

ஆன்மாவை விளக்கி, வெளிச்சத்தின்பால் மக்களை எது திருப்புகிறதோ, அதுவே கல்வி. —பிளேட்டோ.

In the second Pay Commission 1970, two different pay seales for Junior Engineers and Asst. Engineers at section level post was prescribed with reduction of difference to five increments at the basic scale.

In the year 1977, redesignation took place between Diploma and Degree engineers as J. Es and A. Es. TNEA has presented useful and eventful memoranda of representation envisaging all conditions of life and service with pay scales befitting social commitments to all the pay commissions and were appreciated but not rewarded.

In the same year 239 Diploma Engineers as J. Es were retrenched to accommodate the Degree engineers selected by TNPSC. This has resulted in a depression, discontentment and TNEA has to come out to find a redressal through democratic means. Many Associations of the State of Tamil Nadu owed allegiance to find a solution.

On 19-12-77, in the floors of the Lokhsabea, the then Hon'ble Minister for works and Housing has given a consoling statement as "The Diploma engineers have suffered much in the past. They deserve due consideration."

As assurance was received from the Hon'ble Minister of State, Dharna discontinued fast given up. The solutions were not to the full satisfaction.

Administrative Reforms Commission constituted by the Government gave out recommendations providing for more intake of Diploma engineers adopting 2 : 1 ratio (i.e. 2 Diploma Engineers to one Degree Engineer). At lower level management-Section post-the issues accepted and ordered-G.O.Ms. No. 1964 PWD dated 18-2-73. Subsequently to our dismay Government had stayed order in G.O.Ms. 573 P.W.D. dated 30-7-74.

TNEA besides fulfilling various assignments for the course of Diploma Engineers giving its useful services has inunciated the principles of service with devotion. We are proud to announce that in times of dispire flood havocs, drought and other onslaught of natural calamities our members have risen up to the occsions, sacrificed themselves and rendered useful services with high dignity and tranition of profession, securing the first name and gold medals.

TNEA has launched a programme in the encouragement of secondary and higher secondary education by presenting rewards of 1000 rupees to the high ranking children of its members.

Also, a benevelent fund is created to give relief to the members dying in harness.

TNEA, the first service organisation of engineering profession is proud to celebrate its "PLATINUM JUBILEE" in commemoration of its useful service for the society members of the profession.

We will be failing in our duty, if we do not bring forth our immediate demands for the kind information of His Excellency the Vice President of India.

நகைச்சுவை எங்கு உள்ளதோ அதன் அருகிலேயே சோகமும் இருக்கும்.

—விப்பிளின்.

(i) Common designation and common scales of pay for section level post (Diploma and Degree engineers) as per the constitution of India.

(ii) As it has become a course that the diploma engineers are allowed to continue in seryice for over 20 years at the initial post of J. Es without promotion, a time bound promotion with pay scales as in vogue in Central Government establishments.

(iii) To remove the disparities and to accord a common policy of recruiment as in C.P.W.D.

(iv) To accord Degree in engineering similar fo B. Lit. of Tamil Pulavars after successesfully completing technical education through Polytechnics.

(v) To reduce the hardships experienced by the diploma engineers in prosecuting B. E. degree through part time study and to give, maximum oppertunities without any discrimination which will help to advance their technological studies and to improve the standards in the profession.

(vi) To avoid increasing sorting of Polytechnics but to give opportunities to acquire the Degree in engineering through correspondance and continuing education through open University.

(vii) To give rights of electoral franchise in the graduate constituency for all the Diploma in Engineers on acquiring Diploma in Engineering without restrictions as there is no common proceedure and objected to by Electoral Officer.

We are deeply indebted to His Excellency the Vice President of Great Indian Republic for having accepted to grace the celebration amidst innumerable assignments and appointments.

JAI HIND

மார்சு மாத மகிமை . . . .

ஒரு ஒப்பந்ததாரர் :- மார்சு மாதம் செய்த பணிக்கு, ஏப்ரல் முதல் வாரத்தில் Payment நிச்சயம் சார் ! அதனால் கடனோ உடனோ வாங்கியாவது தைரியமாக வேலை செய்யலாம். மற்ற மாதத்தில் வேலை செய்து சிக்கிக்கொண்டால் வரிலில்லாத சந்தேகமெல்லாம் 'Data' வில் வரும். எங்க பாடு அவஸ்தைதான் ! எனவே அநாவசிய ரிஸ்க் நாங்கள் எடுப்பதில்லை — மார்ச் மாத Payment வேகம் மத்த மாதங்களிலும் இருந்தால் வேலை செய்ய எங்களுக்கு என்ன கஷ்டம் ? ஒருவிதத்தில் பார்த்தால் எல்லா வேலைகளையும் மார்சு மாதத்தில் முடுக்கி விடுவதில் எங்களுக்குத் தொல்லைகள்தான் அதிகம் ! வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. சிலவு அதிகம். கட்டிடப் பொருள்களும் கிடைப்பது அரிதாகிவிடுகிறது. எனவே இந்த முறையை மாற்றி அமைப்பதுவும் நல்லதுதான் சார் ! ஆனால் பூனைக்கு யார் மணிகட்டுவது ?

அடிமைத்தனம் தவறு இல்லையென்றால், உலகில் வேறு எதுவுமே தவறில்லை.
— ஆப்ரஹாம் லிங்கன்.

மலரும் நினைவுகள்
(நிழற்படத் தொகுப்பு)



சங்கப் பொன் விழாவில் அன்னாள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு கக்கன் அவர்களுடன் பொறுப்பாளர்கள்

19-4-70 சங்க மாநில மாநாட்டில் சிலம்புச் செல்வர்.

19-4-70ல் மாநிலமாநாட்டில் அமைச்சர் பெருமக்களும், தலைமைப் பொறியாளர்களும்.

'பொறியாளர் நாள்' விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் பண்ருட்டி S. இராமச்சந்திரன், ப.உ. சண்முகம் அவர்கள்

5-11-73 மகத்தான மணிவிழாவில் முதல்வர் டாக்டர் கலைஞர் அமைச்சர் ப. உ. ச. அவர்களுடன் சங்கத் தலைவர்

கட்டிடநிதிக்காக நடந்த விசுவாமித்திரர் நாடகத்தின் போது நாடகக்காவலர் மனோகருக்குப் பாராட்டு

சரித்திரம் படைத்த 19-12-77 மொட்டையடிப்பு போராட்டம்



19-2-80ல் 'கட்-அவுட்' கருப்புத் துணி போராட்டம்

15-3-80 டிப்ளமாப் பொறியாளர் பேரவையின் சார்பாக மாபெரும் பேரணி AIFODE தலைவர் முன்னிலையில் சென்னையில் நடந்தது

இலங்கை இனப்படுகொலை கண்டனப் பேரணி

பொதுப்பணித் துறை அமைச்சருக்குப் பாராட்டு விழா

26-1-83 பொங்கும் நிதித்துவக்க விழா

பாதிக்கப்பட்ட சகோதரப் பொறியாளரின் குடும்ப நலன் பேனும் பொங்கும் நிதிவழங்கல்

மாண்புமிகு முதல்வருடன் சங்கப் பொறுப்பாளர்கள்



கிளைச்சங்க அலுவலகத்திறப்பு விழா

டிப்ளமாசித்தன்

ஆக்கம் : V. S. அனந்தராமன், இ. பொ. காரைக்குடி

பண்டைக் காலத்தில் இருந்த சித்தர்கள் பதினெண்மர் என்று தானே கேள்விப் பட்டிருக்கிறோம். டிப்ளமாச் சித்தன் என்று கேள்விப்பட்டதில்லையே என்றுதானே சிந்திக்கிறீர்கள். சித்தர்கள் தம் ஞானப்பாடல்களிலே மருந்துண்ணாமலே உடம்பை நோயின்றி வைத்திருக்கும் வழியைக் கண்டறிந்திருக்கிறார்கள்.

நமது டிப்ளமாதாரனும் பலனும் பவிசும் இன்றியே ஒரேபதவியில் கிடந்துழலும் சித்தனாய் வாழ்கிறான். சமீபகாலத்தில் பாடப்பட்டது ஞானவெட்டியான் என்றும் சித்தரின் பாடலே. அதற்குப்பின் இருபதாம் நூற்றாண்டில் நமது தாய் நாடு விடுதலை அடைந்தபின் உருவாக்கப்பட்ட சித்தனே டிப்ளமாச் சித்தன் ஆவான். இவனை ''அடிமைச் சித்தன்'' என்பது சாலப் பொருந்தும். வெள்ளையனின் துறைத்தனத்தில் கூட இவன் அடிமையாகிடவில்லை. இன்றையதுறைத்தலைவர்களின் துறைத்தனத்தால் இப்படி ஆனானோ?

சித்தர்களின் நூலிலே பரிபாஷைகள் பல காணப்படுகின்றன. அவைகளைப் படிக்கும் புலவர்களோ, பொதுமக்களோ அவற்றின் உண்மைப் பொருளைக் காணமுடியாது. பரம்பரையான சித்தர் நூல் பயிற்சியுள்ளவர்கள்தாம் அவற்றின் உண்மையான பொருளைக் கண்டறிய முடியும், ஆனால் நமக்கென்னவோ சித்தர்கள் பிற்கால டிப்ளமா சித்தர்களின் நிலைமையையும் முன் கூட்டி அறிந்தே பாடியிருப்பார்களோ என்று தோன்று கிறது.

அது சரி பொறியாளனே சித்தனைப் போல்தானே இது என்ன டிப்ளமாச் சித்தன் என்று பிரித்துக் கூறுவது என்று சிலர் அங்கலாய்ப்பது புரிகிறது. காலங்காலமாக டிகிரிச்சித்தனும் டிப்ளமாச் சித்தனும் ஒன்றாய்தானிருந்திருக்கிறார்கள். இரு சித்தர் களுமே மனிதகுலத்தின் வாழ்வுக்காகவே உழைத்தார்கள். ஆதலால் அவர்கள் மக்களையோ, நாட்டையோ, சகோதரர்களையோ, நாசமாக்கக் கூடியதீயசக்திளைக் கண்டு பிடிக்கவில்லை. இவைகளைக் கண்டு பிடிப்பதில் தங்கள் அறிவையும் காலத்தையும் செலவிட்டு வீணாக்கவில்லை. பொறியாளர் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்க்கான துறையிலேயே அவர்கள் உழைத்தார்கள். காலங் கடத்தினார்கள். கருத்தைச் செலுத்தி னார்கள். அவர்கள் தாங்கள் உழைக்க-முயன்ற-துறையில் ஒற்றுமையாய் வெற்றியும் கண்டனர்.

1952-ம் ஆண்டு ஓர் சித்தன் பித்தன் ஆனான். இதனால் இருவருக்கிடையிலும் அச்சம், நடுக்கம், ஒருவரை ஒருவர் நம்பாமை, வாழ்விலே அவநம்பிக்கை. பித்தனால் எப்பொழுது என்ன நடக்குமோ என்ற பீதி-வழக்குகள்-வம்புகள் இவைபிறந்து பேயாட்டம் ஆடுகின்றன.

அறிவில்லாதவர்க்கு பட்டம் அவசியம். அப்பொழுதே மக்கள் அவர்கள் அறிவில்லாதவர்கள் என்பதை மறக்க இயலும். —கிரேளன்.

உண்மையில் இரண்டு சித்தர்களின் பெருமை சமூகத்தில் மிகவும் போற்றுவதற்குரியது. இருவருமே பல அற்புதங்களைச் செய்பவர்கள் என்பது நாடே அறியும். நாட்டிலே இவர்களின் பொறியியல் அறிவை மனதார பலர் அறிந்துள்ளனர். அவர்கள் மனித சமுதாயத்திற்கு செய்து வரும் நன்மையை உணர்ந்திருக்கிறார்கள். பணிகளைப் பாராட்டி வருகிறார்கள். ஆனால் சித்தனும் பித்தனும் அடித்துக் கொள்வதால் இருவருமே சமூக அந்தஸ்து இழந்துவருகிறார்கள். இவர்கள் பணிகளுக் கேற்ற பயன் பெறாமல் வாடுகிறார்கள். சித்தனில் உயர்ந்தோன் யார் என்ற தேவையற்ற பண்பாடற்ற சண்டையில் காலம் வீணாய்ப்போவதைப் பார்த்து மக்கள் எள்ளி நகையாடுவது மட்டுமல்ல குறைந்த சலுகைகள் கொடுத்து மிச்சம் பிடிக்கிறார்கள், சித்தர்கள் பித்தர்களானால் கவனிப்பார் யார்?

மெத்தப்படித்தவனாம் பித்தன், சித்தனின் காலை இழுத்துவிட்டு தானும் குழியில் விழுவதை உணர்கிறான் இல்லை. பித்தன் சித்தம் தெளியும்வரை டிப்ளமாச் சித்தனின் பாடு திண்டாட்டமே.

அடப்போய்யா! எந்த வகையிலே நாம் சித்தனானோம். ஒப்பு நோக்கிக் கூற முடியுமா உம்மால் என்று விரட்டவேண்டாம். கேளுங்கள் சித்தர்கள் எட்டு வகை. அவை அணிமா, மகிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், கரிமா என்பன. பயந்து விடாதீர்கள் இதன் பொருளுணர்ந்தால்தான் நாம் சித்தர்கள்தானா என்று தெளிய முடியும்.

அணிமா :- அணுவைக் காட்டிலும் மிகவும் சிறிய உருவிலே உலவும் ஆற்றலுக்கு அணிமா சித்தி என்று பெயர்.

நமது டி. சித்தன்தான் கடைகால் தோண்டுவது முதல் திறப்புவிழாக்கல் பதியும் வரை உழைத்திருப்பான். பெரீய்ய்ய அதிகாரிகள் திறப்புவிழாவின்போது டி. சித்தன் அணுவைக் காட்டிலும் மிகவும் மிகவும் மிகவும் சிறிய உருவிலேதானே உலவுவான். ..... இப்போது கூறுங்கள் நமது டி. சித்தனுக்கு அணிமா சக்தி உண்டா இல்லையா என்று.

மகிமா :- மலையினும் பெரிய உருப்பெற்று நிற்கும் ஆற்றலுக்கு மகிமா என்று பெயர்.

வெள்ளமா, புயலா அல்லது பஞ்சமா? கூப்பிடுங்கள் அந்த டி. சித்தனை. மலையாய் பணியில் உயர்ந்து நிற்பான். மழையில் கரையமாட்டான். வெய்யிலில் உலரமாட்டான். அவன் மலையாய் ஆற்றலில் உயர்ந்து நிற்கமாட்டானா அய்யா! நெஞ்சைத் தொட்டு நீவீர் சொல்வீரே!

லகிமா :- உடம்பைக் கனமாக இல்லாமல் இலேசாகச் செய்து கொள்ளுதலும், நீரிலும், சேற்றிலும் அழுந்தாமல் காற்றுபோல் விரைந்து செல்லும் வல்லமையைப் பெறுவதும் லகிமா ஆகும். நமது சித்தனுக்கு பெயரளவிற்குத்தான் உடம்பே இருக்கிறது. இவன் தான் உழைத்து உழைத்து ஓடாய்ப் போனானே. ஏற்கனவே இலேசு. இதில் இலேசாய் வேறு செய்து கொள்ள வேண்டுமோ. "திட்டமதிப்பீடு இவ்வாரத்திற்குள் முடித்திட வேண்டும்" என்று சொல்லுங்கள் நம் சித்தனிடம். நீராவது, சேறாவது, காற்றிலும் கடிதே காடும் மேடும் பறந்து, உழன்று வேலை செய்வானே.

பிராத்தி :- தான் எதை விரும்பினாலும், எதை நினைத்தாலும் நினைத்தவைகளை அடையும் வல்லமைக்குப் பிராத்தி என்று பெயர்.

ஒரு மனிதன் தன்னிடம் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் குறைகள் அனைத்தையும் நாம் எளிதில் நம்பி விடுகிறோம். ஆனால் தன்னைப்பற்றி ஒருவன் கூறும் புழுக மொழிகளை எளிதில் நாம் நம்புவதில்லை. —மாண்டேன்.

''நாளைக்காலை 9.00 மணித்தியாலங்களுக்கு 4-ஆம் நம்பர் கால்வாயில் நீர் செல்லவேண்டும். எந்த தடைகளை எப்படி அகற்றுவாயோ தெரியாது. சாதித்துக் காட்ட வேண்டும்'' என்று விரும்பினால் சாதிப்பான்.

இரவு 11.00 மணிக்கு பாதியில் (தூக்கத்தில்) மேலதிகாரி சித்தனைப் பார்க்க விரும்பினால் ஓடி வருவான்.

ஆனால் ''சம வேலைக்கு சம ஊதியம்'' ஒரே வேலைக்கு ஒரே பெயர்'' என்று விரும்பினால் அடைய முடியவில்லையே என்று நெளிவது புரிகிறது. சற்றுப் பொறுங்கள். இவனுக்கு Inferiority Complex என்கிற கீழ்மையுணர்வு உருவாக்கப்பட்டிருக்கிறது. இவன் வீறு கொண்டெழுந்து விரும்பி முடிவெடுத்துவிட்டால் அதனை அடையாமல் இருக்க மாட்டான். நினைத்தவைகளை நினைத்தபடி அடையும் வல்லமையுண்டு. ஏன்? இவன் நல்லதையே நினைப்பான். ''திண்ணிய நெஞ்சமும் தெளிந்த நல்லறிவும் உள்ளவன் அல்லவா?'' இவன் பித்தனல்ல...இவன் பித்தனல்ல... சித்தன்.

பிராகாமியம் :- தன்நினைப்பின் வல்லமையால்-ஆற்றலால்-எல்லாவற்றையும் படைக்கும் சக்திக்குப் பிரா காமியம் என்று பெயர்.

அட! அட! சித்தனின் நினைப்பின் வல்லமைதான் என்னே! இவனின் ஆற்றல் தான் என்னே! இவனின் படைப்புகளான பல்வேறு கட்டிடங்கள், கலைச்சின்னங்கள் என்னே! படைத்திட்ட சிறுகுளங்கள், பெரிய அணைக்கட்டுகள், பல்வேறு துறை சீரிய திட்டப்பணிகள் எண்ணிலடங்குமோ? ஏட்டிலடங்குமோ? சிந்தனை செய்திடுவீர்.

இவனை சித்தனல்லன் என்று எத்தர்கள் அன்றோ புகல்வர்.

ஈசத்துவம் :- எல்லோரும் தன்னை வணங்கும் படியான தெய்வத்தன்மையை அடைவது ஈசத்துவம் என்று சொல்லப்படும்.

டி. சித்தனுக்குமட்டும் ஒரு சாபக்கேடு என்ன தான் ஓடாய் (வெய்யிலையும் மழையையும் தாங்கும் ஒடுபோல) உழைத்தாலும், தன்னையே தியாகம் செய்தாலும் கூட..... ஈசத்துவம் நினைத்துப்பார்க்க முடியுமோ. ஆயினும் பித்தர்களிடம் எதிர்நோக்காது போயினும் இவனை நம்பியிருக்கும் மக்கள் இவனை படைக்கும் ஈசனாகப் போற்றுகிறார்கள்.

பொறியியல் கதிர் படியுங்கள்!

'டிப்ளமா' பொறியாளர் சமூகத்தின் பிரச்சனைகளை புரிந்துகொள்ளுங்கள்

—த.பொ.ச./பொ.ப.து.

மன நேர்மையே இன்பம். மனக்கோணலே துன்பம். — ஜேம்ஸ் ஆலன்.

வசித்துவம் :- உலகம் முழுவதையும் தன் வசப்படுத்தி நடத்தும் ஆற்றலை அடைந்திருப்பதற்கு வசித்துவம் என்பார்கள்.

பொன் விழாவா ? பவழவிழாவா ? அல்லது மொட்டையடிப்புப் போராட்டமா ? இன்பமோ துன்பமோ தன் மன உணர்வுகளை மக்கள் உணரும் வண்ணம் அவர்களை தன் வசப்படுத்தி நடத்தும் ஆற்றல் உள்ள டி. சித்தனுக்கு வசித்துவசக்தி உண்டு என்று ஒப்புக்கொள்ள மறுப்பார் உண்டோ ?

கரிமா ;- ஐம்புலன்கள் நுகரும் இன்பதுன்பங்களைப் பற்றிக் கவலைப்படாமல்-அவைகளுடன் சம்பந்தப்படாமல் இருப்பது-கரிமா என்று சொல்லப்படும்.

நான் சொல்லியா டி சித்தனின் கரிமா சக்தி உங்களுக்குத் தெரியவேண்டும். நேற்று வேலையில் சேர்ந்த பொறியாளனைக் கூட மேனேஜிங் டைரக்டரைப் பார்க்கச் சென்றால், ''ப்ளீஸ் டேக்யுவர் ஸீட்'' என்கிறார்கள். இதுவும் நம் தமிழ் நாட்டில்தான் (நெய்வேலியில்) நடக்கிறது. இங்கோ ஒருபடி மேல் தாண்டி சென்றால் கூட அதிகாரிகளின் முன் ஐம்புலன்கள் மட்டுமல்ல ஆறாவது புலனையும் சில சமயம் விட்டு விட்டு நிற்கிறான். இவனை மதித்தால் தான் துறைக்கு மதிப்பு என உணர்வதில்லையே.

ஆக நமது டிப்ளமாச் சித்தன் எண்வகைச் சித்திகளையும் கைவரப் பெற்று அட்டமாச் சித்தியுள்ள டிப்ளமாப் பொறியாளனாக விளங்குகிறான்.

மிகவும் வாரிவிடுவதாக எண்ண வேண்டாம்.

உண்மையில், சித் என்றால் அறிவு. சித்தை உடையவர்கள். சித்தர்கள். அறிவு படைத்தவர்கள் சித்தர்கள். ஆகவே சித்தர்கள் என்றால் அறிஞர்கள், மேதைகள், பேரறிவுபடைத்தவர்கள், நுண்ணறிவுபடைத்தவர்கள், விஞ்ஞானிகள் மெய்ஞ்ஞானிகள் என்று பொருள் சொல்வதே பொருத்தமாகும்.

நமது நாட்டில் வாழ்ந்த சித்தர்கள்—பண்டைக் காலத்தில் வாழ்ந்த சித்தர்கள்—பதினெட்டு பேர் என்று சொல்கின்றனர் (1) திருமூலர் (2) இராமதேவர் (3) கும்பமுனி (4) இடைக் காடர் (5) தன்வந்திரி (6) வான்மீகி (7) கமல முடி (8) போகநாதர் (9) மச்சமுனி (10) கொங்கணர் (11) பதஞ்சலி (12) நந்தி தேவர் (13) போதகுரு (14) பாம்பாட்டிச் சித்தர் (15) சட்டைமுனி (16) சுந்தரானந்த தேவர் (17) குதம்பைச் சித்தர் (18) கோரக்கர் இஃது போலன்றி வேறுபடுத்திக் கூறுவதும் உண்டு.

ஆமாம், சித்தன் என்றால் சோதிடம், ஔடதம் (மருந்து) மந்திரம் மூன்றும் தெரிந்திருக்க வேண்டுமே என்று யோசிக்கிறீர்கள்.

வானத்தைப் பார்த்து காலத்தை அறிவதும் பருவநிலையை அறிவதும் சோதிடம் ஆகும். இதனை நாம் அறிவோம். நாள் முழுதும் உழைத்து உடல் முழுதும் வலியாய் இருந்தால்கூட ''குளேசர் ஒர்க் ஸார்... ஜுரத்துக்கு அல்த்ரோசின் சாப்பிட்டேன். குழந்தைக்கு இருமல். விக்ஸ் பார்முலா வாங்கிக் கொடுத்தேன்'' என்று மருத்துவரைப் பார்க்காமல் தானே மருத்துவம் செய்பவனல்லவோ நம் சித்தன். எனவே ஔடதம் அறிவான் அடுத்து... மந்திரம் என்றால் என்ன ? இதனைத் தெரிந்து கொண்டால்தான் டிப்ளமா சித்தனுக்கு மந்திரம் தெரியுமா என்று புரிந்துகொள்ள முடியும்.

குணத்தில் மிக உயர்ந்தவனும் அடிமட்டத்திலிருப்பவனும் மாறவே மாட்டார்கள்.

—சிங்—சௌ,

''எவ்வளவு பெரிய கொடுமையையும் எங்களால் அடக்கிவிடமுடியும். இவ்வுலகிலே நீதியை நிலைநாட்ட முடியும்''— முதற் செய்யுளின் பொருளிது.

''மூன்றுலகத்தையும் இன்பமடையச் செய்வோம் இப்பெரிய உலகிலே எக் கொடுமையும் இல்லாமல் செய்வோம்''—என்பது இரண்டாவது செய்யுளின் கருத்து.

''கானலை மான் நீர் எனவே கண்டு செல்லல் போல்
காசினி வாழ் வினை மூடர் கண்டுகளிப்பார்
மேல்நிலை கண்டார்கள் வீணாய் வம்புபேசிடார்
மெய்யன் பதம் நாடுவார் என்று ஆடாய்பாம்பே!''

பொருள் : வெட்டவெளியில், கோடைக்காலத்தில் கானல் ஒளியைத் தண்ணீர் என்று நினைத்து மான் அந்தநீரை உண்பதற்காக அதன்பின் ஓடி இளைக்கும். நீர் பெறாமல் வருந்தும். அதுபோல் இத்துறையில் அடுத்தவனை, தகுதியுள்ள சகோதரனைத் தாழ்த்தி விடுவது இன்பந்தருவது என பித்தர்களே மயங்கிக்களிப்பார்கள்.

ஆனால் உயர்ந்த நிலையில் பல்லாண்டு காலம் பணியாற்றுபவன் பயனற்ற வம்பு பேசிக் காலம் போக்கிக் கொண்டிருக்க மாட்டான். உண்மைத் தேவதையின் (நீதிமன்றத்தின்) பாதத்தை நாடி நிற்பான். என்ற உண்மை விளங்கும்படி பாம்பே நீ. படம் விரித்து ஆடுகஎன்பது பொருளாகக் கொள்வது பொருந்துகின்றது.

சமயபேதம், பலவான சாதிபேதங்கள்
சமயத்தோர்க்கேயல்லாது சற்சாது களுக்கோ?

என்று கேட்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

''சமய வேற்றுமைகளும், பலவகையான சாதிவேற்றுமைகளும் பகுத்தறிவானர்கள் பின்பற்றக் கூடியவையல்ல. படிப்பைவைத்து சாதிபடைப்பது அறிவாளர்கள் ஒப்புக் கொள்ளக் கூடியவை அல்ல. மனிதப் பண்புள்ளவர்களால் பாராட்டப் படக்கூடியவை அல்ல.

Only such reform of polytechnical Education will solve the problems of Diploma Holders in Engineering in the country. Other wise the war between the Diploma Holders and Degree Holders in Engineering will continue, because the scope of both the groups lie in the same area in the present system of education.

குற்றவாளியைத் தண்டிக்காமல் விடுவது குற்றம், நிரபராதியைத் தண்டிப்பது அதைவிடப் பெரிய குற்றம். —எலியட்.

அன்றிலிருந்து இன்று வரை

(ம. இராகவன். தலைவர், D. E. C. T.)

காலத்துக்கு முன் எது தோன்றினாலும் அதற்கு முதலும் முடிவும் இருப்பது நியதியாகும், காலத்தே எது செய்யப்படினும் அதற்கும் முதலும் முடிவும் உண்டென்பது, உண்மை.

சரித்திரச் சான்றுகளைவைத்து மனிதன் முன்னவைகளை அறிந்து, நடப்பவைகளை நன்குணர்ந்து எதிர்காலத்தை அமைத்திட விரும்புகிறான்.

முன்னே நடந்ததை சரித்திரமாகவும், இன்றே நடப்பவை காதைகளாகவும், நாளையவை கனவுகளாகவும் மாறுவது மரபாகிறது.

அன்று நடத்தவைகளையும் இன்று நடப்பவைகளையும் கூர்ந்து கவனித்து நாளை எப்படி இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பவன்-அவனுடன் அழைத்துச் செல்பவர்களை அவர்களது முன்னேற்றத்தை கவனிப்பவன் அறிஞனாகிறான்.

சரித்திரம் படைத்திட்ட முன்னவர்களை நினைக்கும் போது தம்மை அறியாமலேயே அவர்களுடன் பற்றும் பாசமும், மரியாதையும் எழுகிறது. அவ்வண்ணமே நாமும் நடைமுறையில் வாழவேண்டும் என பயிற்சி கொள்ள வேண்டும்:

அவ்வண்ணமே அன்று நமக்காக சங்கம் அமைத்திட்டவர்களை எண்ணி வியக்குகிறோம். இன்று சங்கம் நடைபெறுவதை எண்ணி பெருமை படுகிறோம். நாளை எப்படி இருக்கும்; இருக்க வேண்டும் என நினைவலைகளில் கனவுகாண்கையில் உள்ளம் புளகாங்கிதம் அடைகிறோம். சென்ற தலைமுறையை வாழ்த்தும் நாம் இந்த தலைமுறையை வளரும் தலைமுறை வாழ்த்த வேண்டும் என எண்ணுவதில் தவறில்லை.

ஆங்கிலேயன் இந்தநாட்டை ஆண்ட காலத்தில் பொறியியல் துறை என பொதுப் பணித்துறைக்கு சங்கம் அமைத்திட்ட ஆன்றோர்களின் தீர்க்க தரிசனம் தான் என்னே !

1910ல் ஆரம்பித்த நம் சங்கம், சென்னை பொறியியல் சங்கம், பொன் விழா கண்டு, மணிவிழா கண்டு, இன்று பவழவிழா காணும் வகையில் பேறுபெற்று இந்த தலை முறையினரையும் சுயமாரியாதைக்கு வித்திட்டு வாழவைத்துள்ளதே.

அன்றைய சென்னை பொறியியல் சங்கம் — மூத்த சங்கம், முன்னோடிச் சங்கம், முதல் சங்கம் இன்று தமிழ் நாடு பொறியியல் சங்கமாக உலா வருகிறது

உரிமைகளுக்கென அன்று சங்கம் அமைத்திட்டார்களோ என்னவோ தெரியவில்லை இன்று, உரிமை பறி போகாவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டிய கட்டாய நிலையில் உள்ள நாம், இச்சங்கம் இல்லையேல், எச்சங்கம் நம்மை அழைத்துச் சென்றிருக்கும் என எண்ணிப் பார்க்கையில், நமது முன்னோர்களின் தீர்க்க தரிசனம் நன்கு புரிகிறது.

நீங்கள் எந்தப் பதவியில் இருக்கிறீர்கள் என்பதல்ல முக்கியம். இருக்கும், பதவியில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதே முக்கியம், பதவி உங்களுக்கு பெருமை தருவதில்லை ; நீங்கள்தான் பதவியைப் பெருமைப்படுத்த வேண்டும். —பெட்ருக்.

சகோதர மனப்பான்மையுடன் பழகி, பொறியியல் துறையின் மாண்பு கெடாமல் ஒருங்கிணைந்து அன்று பணியாற்றியதாக சரித்திரம் கூறுகிறது.

இன்றோ நாம் வேறு, மற்றவர் வேறு என்ற மனக்கசப்புக்கு வித்திட்டு பகை உணர்ச்சியுடன், மற்றவர் ஏற்றம் பெற, பின்னவர் பணிபுரியும் நிலையாய்பட்டதே !

நம் சங்கம், தமிழ் நாடு பொறியியல் சங்கம், பொதுப்பணித்துறை வளர்ந்து பிரிந்து பல துறைகளுக்கு வித்திட்டதுபோல், பல சங்கங்களுக்கு மூலமந்திரமாக மாறிவிட்டது, எத்தன்மைத் தூயது என்று எண்ணி வியப்படையும் வேளையில் எத்துனை காலமாயினும், நம் சங்கம் போன்று பெருமை மிக்கது, சரித்திர சான்றுகளுடன் பீடுநடை போட்டது வேறேதேனும் உண்டா !

கானகத்தில் களிறு, பிளிறிட்டு தன் கூட்டத்தை அழைத்துச் செல்லுமாம். அது போன்றது தமிழ் நாடு பொறியியல் சங்கம், எத்தனை சங்களுக்கு தாயாய், தலைவனாய் அழைத்து செல்கிறது.

தமிழகத்தில் பல சங்கங்கள் இருக்கலாம், பெருமையோடு இருக்கலாம் ஆனால் பெருமையுடன், தொண்மையுடையதாய், வலிவுள்ளதாய், ஒரேகொள்கைக்கென ஒன்றி நிற்பதாய், நம் சங்கத்தை போல் இருக்குமா !

நம் முன்னவர் அறிய கருத்துக்களை அளித்துள்ளனர். மிலேச்ச குணமின்றி மனிதாபிமானத்துடன் வாழ வேண்டியநாம் நம் உடமைகளை உரிமைகளை இழக்கும் வண்ணம் இன்று மாறும் சூழ்நிலை ஏன் ! ஆயினும் நாம் கடமை யுணர்ச்சியுடன், செய்யும் தொழிலே தெய்வம் என்ற சீரிய கருத்துடன் செயலாற்றியும் நம் முன்னேற்றம் தடை படுவதேன்.

அன்றிலிருந்து இன்றுவரை கோட்பாடுகள் மாறின வா — அரசு நடைமுறை மாறினவா, மாற்றப்பட்டனவா, நமக்கென கோரிக்கைகள் மலிந்து வருவதன் தன்மை தான் என்ன.

அன்றைய சூழ்நிலைகளுக்கு இன்றைய சூழ்நிலைக்கும் மாறுதல் உள்ளனவே.

காலம் கனியும், கனியும் வரை காத்திருப்போம் என்றும், ஜனநாயக அடிப்படியில் நம் மேலோர், அரசு, நம்மை சீராக சமாளித்துக் கொள்ளும் என்றிருந்தோமே அதுதான் தவறு.

காலன் வந்தாலும் மார்க்கண்டேயனை ஈசன் காப்பாற்றி என்றும் பதினாறு என்று வகைசெய்தானே அதேபோல் மற்றொருவருக்கு தனிவரம் அளிக்க நாம்மட்டும் அவதிப் படுவதேன்.

அன்றிலிருந்து இன்று வரை டிப்ளமோ பொறியாளர்கள் செய்த பணிகள், பெற்றிட்ட சிறப்புகள், தன்னலமற்ற உழைப்பு, பணியின் இலக்கியத்தை பிணக்கமின்றி செயல் படுத்தியும் ஏன் நமக்கு இந்த நிலை.

அன்றைய சூழ்நிலை இன்றைய காலவரை எண்ணி பார்கிறேன். மலையளவு ஏமாற்றம் தெரிந்தாலும், மதியளவு நமக்கு நம்பிக்கை ஊட்டுகிறது, நமது சங்கம் நம்மை இது காறும் அழைத்து சென்ற நிலையில், "இளமையில் கல்" என்பது பழமொழி அதனை பழமை மொழியாக்கி "முதுமையில் கல்" என்ற முதுரைக்காட்டி, அதிகப்படியாக சிரமம் ஏற்று ஈடாக வந்தாலும் ஓரவஞ்சனை தான் பதிலா.

வயதாகியும் கன்னியாயிருக்கும் பெண், தபாலில் போடாத கடிதம் போன்றவள்.
—ஓர் அறிஞர்

அரசு அங்கிகரிக்கும் உரிமைகள் சலுகைகள் நேரடியாக நியாயமாக நமக்கு கிடைக்கப் பெறவில்லையே. இச்சங்கம் அதனை எடுத்துவைத்தும், வெற்றிகாண வில்லையே. நல்லவர்கள் போற்றுகிறார்கள். வல்லவர்கள் தடுக்கிறார்கள் சான்றோர்கள் மதிக்கிறார்கள், நற்காட்சி தருகிறார்கள் மற்றவர்கள் சாடுகிறார்கள்.

இருவழிப்பாதையாக இருக்கவேண்டியது ஒரு வழியாக, இணையாதகோடுகளாகி, எற்றமின்றி இனியும் இருக்கவேண்டுமா.

நமது குரல் அரசின் செவிகளில் சரிவர நமது சொல்கள் சரிவர மதிப்பளிக்கப்பட, பொன்விழாவில் மணிவிழாவில் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டதைபெற்றிட ஆக்கபூர்வமான செயலில் ஈடுபடுவோம்.

நமது சங்கத்தின் பொன்விழாகண்டதாம், மணிவிழா எடுத்திட்டதாம், பவள விழா நடத்திக் கொண்டு வருகிறோம்.

ஆங்கிலேயன் கோலோச்சியபோது ஆரம்பித்த இச்சங்கம், அன்றைய நமது முன்னவர்கள். இந்த நாடு சுதந்திரம் அடைந்ததை கண்டு மகிழ்ந்திருப்பார்.

அதுபோல் பவழ விழாகாணும் நாம், விரைவில் விடிவெள்ளி தோன்றுகிறதே அதைநோக்கி பீடுநடைபோடுவோம்.

இச்சமூகத்திற்கும் நமது தாயகத்துக்கும் நமது சேவையை அர்ப்பணிப்போம்.

சேவல் கூவி பொழுது விடிவதில்லை என்பார்கள். சூரியன்வெளிவர பனிபடல் மறையும். மற்றவர்கள் விஷ வித்திட்டாலும் நம்மை அண்டாமல் செய்வோம்.

அன்றிலிருந்து இன்று வரை பாடுபட்டோம். நாளைவரை வழி நடாத்தி செல்லுவோம்.

ஒற்றுமையாய் ஒரே குரல் எழுப்புவோம். நமது கொள்கையின் முரசுகொட்டுவோம் முன்னவர் வழிசெல்வோம் முன்னேறுவோம்.

பவழ விழா நம்மை அழைக்கிறது
பாரோற்மெச்ச பணியேற்போம்,
சுயசேவை தவிர்ப்போம்
பொதுசேவை செய்து பெயர் பெருவோம்.
வளர்வோம் வாழ்வோம்
நூற்றாண்டு விழா காணுவோம்.

கனிவுமிகு முதல்வரின் கருணை உள்ளத்துக்கு...

தவிக்கின்ற வாய்க்கு தண்ணீர் கேட்கும்—இந்த
தாழ்த்தப்பட்ட பட்டயப் பொறியாளர் இனத்துக்கு;
தருமங்களின் தலைவன் தரணியாள்கின்றபோதும்
வடிவு பிறக்காதென்றால்... அவர்தம்
வாழ்வின் அவலங்கள் மறையாதென்றால்...
ஓ! கதிரவனே! நீ அண்டத்தை காப்பதுவும் பொய்யே!
இளந் தென்றலே! நீ வீசுவதெல்லாம் புயலே!!
உயிரே! உடலில் உந்தன் சலனமும் பொய்யே.

பொன்னான சரித்திரம் !
கடுமையான உழைப்புக்கு
உண்மையான எடுத்துக்காட்டு !
நேரந்தவறாமைக்கு
அவருக்கு நிகர்கூறமுடியாது.
சர். எம். விசுவேசுரய்யா
சாதாரணப் பொறியாளராய்தான்
சுர்வீஸில் சேர்ந்தார்.
ஆனால் அவர்
சாதித்த சாதனைகள்
சரித்திரத்தில் இடம்பெற்றவை
பூனாவுக்கு அருகிலுள்ள
கடக்வாஸ்லா அணைதன்னில்
பொருத்துதற்கு சரியான
ஆடமேடிக் மடைக்கதவுகளை
அறிமுகப்படுத்தி வைத்து
முதன்முதலாய் கண்டுபிடித்த
முழுப்பெருமை அவரைச்சாரும் !
ஆங்கிலேய அதிகாரிகளைக்கூட
அயர வைத்த அவரது சாதனை
ஆடமேடிக் மடைக்கதவும்
பிளாக் சிஸ்டம் (Block System) என்ற
பூனாவின் புதிய நீர்ப்பாசனத் திட்டமும்தான்
பூனா நகர் தன்னில் அவர்
பொறியாளராய் இருந்தபோது
நீர்ப்பாசனத் திட்டம் பற்றி
விரிவான அறிக்கை தன்னை
விளக்கத்துடன் சமர்ப்பித்தார்.
அமெரிக்காவில் பயணத்தினின்று
ஹைதராபாத் நிஜாம் அவர்களால்
அவசரமாய் அழைக்கபட்டார்
மூசா நதி வெள்ளம்
மூர்க்கத்துடன் பாய்ந்தோட
முயற்சி செய்து திட்டம் தீட்டி
ஹைதராபாத் நகரத்தை
நாசத்தினின்று காபாற்றினார்
ஆங்கிலேயருக்கு மட்டுமே
அப்போது வழங்கப்பட்ட
அரிதாகக் கருதப்பட்ட
தலைமைப் பொறியாளர் பதவி
நம்முடைய
அருமைப் பொறியாளர்
அயராத உழைப்பாளர்
சர். எம். விசுவேசுரய்யாவை
தேடிவந்தது
நாடி வந்தது
மைசூர் மகாராஜா அவர்களின்
மனமார்ந்த விருப்பத்தில்
மகத்தான பதவிதனை
மனப்பூர்வமாய் ஏற்றார்.
காவிரியின் குறுக்காக
கிருஷ்ணராஜசாகர் அணையை
கம்பீரமாய் கட்டிமுடித்து
கண்டவரெல்லாம் பாராட்ட
கௌரவத்தின் சிகரம் போல
மைசூர் மாநிலத்தின்
திவானாகப் பதவியேற்றார்.
பதவிகள் அவரால் பெருமைபெற்றன.
தொழில் நுட்பக் கல்விக்கும்
தொழிற்சாலை வளத்திற்கும்
அவர் புரிந்த
தொண்டுகள் கணக்கற்றவை
அவரது பணிக்காலத்தில்
அனைவரும் அதிசயிக்க
அற்புதமாய் பணிபுரிந்தார் !
ஒரு நேர்மையான பொறியாளர்
ஒரு நல்ல நிர்வாகியாகவும்
நிர்வாகம் செய்ய முடியுமென்பதை
நிரூபித்துக் காட்டினார்.
புகழ் பெற்ற புத்தகமொன்றை
'இந்திய அரசின் திட்டமிட்ட பொருளாதாரம்
என்ற இனிய தலைப்பில்
யதார்த்த நடைமுறைகளோடு
எழுதி வெளியிட்டார்.
எண்ணற்ற தொழிற் பள்ளிகளும்
எழிலார்ந்த மைசூர் பல்கலைக் கழகமும்
எழுந்தது இவருடைய
ஏற்றமிகு திவான் பதவிக் காலத்தில்தான்.
சர். எம். விசுவேசுரய்யா அவர்கள்
பொறியாளர் மட்டுமல்ல
இந்திய சுதந்திரத்திற்கு
இணையில்லா பாடுபட்ட
இரானடே, கோகலே, திலகர் போன்ற
தன்னிரகற்ற தியாகிகளுடன்
நெருக்கமாய் நட்பு கொண்டு
நேசமாய் பழகிவந்தார்.
மறக்கமுடியாத சாதனை புரிந்த
மாபெரும் சரித்திரம் !

ஒரு நாட்டின் வாழ்வு தாழ்வுக்கெல்லாம், அந்த நாட்டு இளைஞர்கள் பெறும் கல்வியைப் பொருத்திருக்கிறது —அரிஸ்டாட்டில்.

எளிமையாக வாழ்த்தார்.
சுருக்கமாகப் பேசினார்.
ஒழுக்கத்தை கடைப்பிடித்தார்.
புகையும், குடியும் அவருக்கு
புதிதான வார்த்தைகள்!
நல்ல உடையையே
நாள்தோறும் அணிவார்.
நாகரிகம் அறிந்து
மரியாதை கொடுத்து
மரியாதை பெற்றுப் பழகிய
மாபெரும் மனிதர் அவர்.
கருமமே கண்ணாக
கடைசிவரை உழைத்தவர்
பதவி ஓய்வு பெற்ற பின்னும்
பணிபல புரிந்தவர் அவர்
சுதந்திர இந்தியாவிற்கு
சோதனைகள் வந்தபோது
தொழில் துறையில் அவர் சொன்ன
யோசனைகள் ஏராளம்
திட்டக் கமிஷனுக்கு
தீர்க்கமான முடிவுகளை
தெளிவாக பரிந்துரைத்த
தொழில்நுட்ப மேதை அவர்
கடவுளை உறுதியாய்
நம்பிய மேதை!
அவரின் கருணையை
முழுமையாய் பெற்று வாழ்ந்த அறிஞர்
சர். எம். விசுவேசரய்யா — ஒரு
சத்தியமான கர்மயோகி!
அவருடைய சாதனை வாக்கியம்
"Work is Workships"
"காரியமே கடவுள் வணக்கம்"
மறைந்து போன அந்த
மாபெரும் பொறியாளரின்
மகத்தான சாதனையை
இப்பொன் மாலைப்பொழுதில்
சற்றே நினைவு கூர்வோம்!
அவர்
சரித்திரத்தின் வழிநடப்போம்!
வாழ்க விசுவேசுவரய்யா!
வளர்க அவர் புகழ்!

மார்ச் மாத மகிமை...

பொதுப்பணித்துறையிலும், மற்ற பொறியியல் துறைகளிலாகட்டும் வருடத்தில் மற்ற மாதங்களைக் காட்டிலும் மார்ச் மாத இறுதியில் பணிகள் முடுக்கி விடப்பட்டு 'பட்ஜெட்' சிலவுகளின் நிர்ணய குறியீட்டு அளவுகளை அடைய நம்மவர் 'பிரம்மப்பிரயத்தினம்' செய்வது தொன்று தொட்டு கூட பிடிக்கப்பட்டு வரும் நடைமுறை. இதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கெல்லாம் ஏற்படும் அநாவசிய உளைச்சலும், அலைச்சலும் உள்ளங்கை நெல்லிக்கனி! இதை 'எப்படி' மாற்றுவது என்ற வேட்கையில் இதன் உண்மையான பின்னனிகளை அறிய, துறையின் மூத்த பொறியாளர், ஒரு ஒப்பந்ததாரர், ஒரு பிரிவு அதிகாரி, ஒரு கோட்ட மேலாளர், ஒரு பிரிவு பணிநியித்த ஊழியர் என்று பலதரப்பட்டோரை பேட்டி கண்டோம். அவர்களின் பெயர்களை வெளியிடுவது பத்திரிக்கை தர்மமாகாது. ஆனால் அவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களை கூட்டி கழித்துப் பார்த்தபோது நமக்கு ஓர் உண்மை புலப்பட்டது! எவருக்கும் இந்த 'மார்ச்' வேக பணிகளில் உடன்பாடு இல்லை எனத் தெரியவந்தது! இருப்பினும் வெவ்வேறு சுயதேவை காரணங்களுக்காக இந்த மார்ச் வேக' பணிமுறைகளால் இவர்களும் கட்டுண்டு பணிகளை நடத்துவது காலங்காலமாக தொடர்கிறது! இதற்கு விமோசனமே இல்லையா? நமது நேரடி பேட்டியின் விபரங்கள் தனித்தனியாக தரப்பட்டுள்ளன. கண்டுபிடித்து, சிந்திக்க வேண்டுகிறோம்.

— கோவைமணியம்.

புதுமைக் குறள்

சுவாமி இரத்தினம்
தமிழ்நாடு பொ. ச. திருச்சி.

நானும் எனது துணைவியாரும் எனது பணியைப் பற்றி அளவாளவிக் கொண்டிருந்தோம்.

துணைவி : இன்று உங்கள் பிரிவு கூடுதல் பொறுப்பையாரிடம் ஒப்படைத்தீர்கள் ?

நான் : குமார் என்ற உதவிப் பொறியாளரிடம் ஒப்படைத்தேன்.

துணைவி : அப்படி என்றால் உங்கள் உதவிப் பொறியாளர் (A. E) ரமேஷ் மாற்றமா ?

நான் : அவர் எனது உதவி செயற்பொறியாளர் (A. E. E.) எனக்கும் குமாருக்கும் மேல் அதிகாரி.

துணைவி : அப்படி என்றால் உங்கள் பிரிவு பொறுப்பை ஒரு இளம் பொறியாளரிடம் தான் ஒப்படைத்தீர்கள் ?

நான் : அது என்னடா ரொம்ப வம்பாக போய்விட்டது. அம்மா.....நான் டிப்ளோமா படித்திருக்கிறேனாம். அவர் டிகிரி படித்திருக்கிறாராம். அதனால் ஒரே வேலையை செய்யும் எங்களுக்குள், டிப்ளோமா படித்த எனக்கு இளம் பொறியாளர் என்றும் டிகிரி படித்த குமாருக்கு உதவிப் பொறியாளர் என்றும் சொல்கிறார்கள் எங்கள் துறையில்

துணைவி : அப்படி என்றால் உங்கள் உபகோட்ட தலைமை எழுத்தர் கோவிந்தசாமி என்பவர் S. S. L. C. படித்தவர் அவரை ஹெட்கிளார்க் என்று சொன்னீர்கள் அவர் மாற்றலாகி தற்போது வந்துள்ள ராமசாமி B.Sc. டிகிரி படித்தவர் அவரையும் ஹெட்கிளார்க் என்று சொன்னீர்கள். இது மட்டும் என்னாவாம் ?

நான் : அது வந்து.....வந்து இத்தபாரு இதை உனக்கு மட்டுமல்ல யாருக்கும் புரியாத குழப்பமான சங்கதி ஆளைவிடு.

துணைவி : என்னங்க ஒரே பேத்தலும் பிதற்றலுமாக இருக்கு.

இப்படியாக நாங்கள் உரையாடிக் கொண்டிருக்கும் போதுஇப்படி அவள் பேத்தலும் பிதற்றலும் என்றவுடன் திருக்குறளில் துறவற இயலில் கூடா ஒழுக்கம் என்ற 28 வது அதிகாரத்தில் உள்ள 280 வது குறள் ஞாபகம் வந்தது. அதாவது

''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்''

மேற்கண்ட குறள் வடிவில் ஏன் நாம் ஒரு புதிய குறள் எழுதக் கூடாது என்று சிந்தித்தேன். பிறந்தது புதிய குறள். அதாவது —

பேத்தலும் பிதற்றலும் வேண்டா நீதி வகுத்தது ஏற்று விடின்.

அதாவது ஒரே வேலைக்கு ஒரே பெயர், ஒரே ஊதியம் என்ற நீதியினை மாற்றி அதற்கு அளிக்கும் விளக்கமும் ஒரே பேத்தலும் பிதற்றலுமாக இருப்பதால் இந்தக் புதுமைக்குறள் வடித்துள்ளேன்.

வாழ்க்கையில் ஒன்றுதான் நிஜமானது. அர்த்தமுள்ளது. அதுதான் மரணம்.
—புதுமைப்பித்தன்

With best compliments from :

R. Muthu Krishnan Naidu

CONTRACTOR

Vadugacheri
Irrukkai
Thanjore Dt. - Pin 611 10

Public works by MCC Bank

★ Offers higher interest rate than any other nationalised Bank
★ Uplifts poor through Advances
★ Attractive Scheme to match everybody's need
★ Serves the society for over 50 years.

The Bank that care for the masses and Dare to reach heights in service. That is why, it is called as People's Bank.

MADRAS CENTRAL CO-OPERATIVE BANK
Madras-600 108

With best compliments from :

You may not be able
To change the whole world,
But atleast you can
Embarrass the guilty.

KATHA POLLIT

INDIAN EXPRESS

The largest circulated daily
Published simultaneously
From 11 centres

எந்தப் பொய்யும், முதுமை அடையும்வரை வாழ்வதில்லை. —ஸோபாக்கிளீஸ்

ஏக்கங்கள்

பொறியாளர் மா. சுவாமிநாதன்

தென்மண்டல செயலாளர்
அகில இந்திய டிப்ளமா பொறியாளர் கூட்டமைப்பு

உயரே பறக்கும் காத்தாடி
உதவும் ஏழை நூல் போலே
பட்டம் போல் அவர் பளபளப்பார்
நூல் போலேஇவர் இழைத்திருப்பார்

பாரதம் என்னும் காத்தாடி தொழில் துறையில் உயர உயர பறக்க உதவும் ஏழை நூல்கள், இந்தப் பாட்டாளி வீட்டுப்பிள்ளைகளான பட்டயப் பொறியாளர்கள். ஆனால் பயன் பெறுபவர்கள் பணம், பதவி போன்ற வசதி படைத்தவர்கள் வீட்டு பட்டங்கள். இந்தப் பட்டயங்களின் நிலை

ஏறிடும் கூட்டத்தை ஏற்றிவிட்டு
அந்த ஏணி இருக்குதம்மா
கரை ஏறிய மாந்தர்கள் எட்டி உதைத்தால்
ஓடம் மிதக்குமம்மா
அலை மோதித்துடிக்குமம்மா

மத்திய ஏழை வர்க்கத்திலே பிறந்து மிகுந்த இடர்பாடுகளுக்கிடையே படித்து பட்டயம் பெற்று நாட்டு முன்னேற்றத்திற்காக தங்கள் உழைப்பை நல்கும் இவர்கள்

அழுவதைக் கேட்க ஆட்களும் இல்லை
ஆறுதல் வழங்க யாருமே இல்லை
இந்த ஏழைப் பட்டயங்கள் வாழ இடமே இல்லை
எந்த அரசாங்கம் வந்தாலும் ஆதரவில்லை

வணக்கத்துகுரியவரே

ஒரு தவறு செய்தால்
அதை தெரிந்து செய்தால்
அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்

இந்த ஏழைப் பொறியாளர்களின் எதிர்காலத்தை இருட்டடிப்பு செய்ய ஒரு தவறல்ல பல தவறுகள் செய்யப்படுகின்றன. அவையும் தெரிந்தே செய்யப்படுகின்றன. செய்பவர்களும் தேவர்கள் அல்ல. தங்கள் ஆளுகைக்கு உட்பட்டவர்கள் தான், அவர்களை விடாதீர்கள்

மதத்தைத் தனது சொந்த சொத்தாக்கி வைத்திருக்கும் சுயநலக்காரர்கள் நிறைந்த இன்றைய உலகில் இலட்சியங்கள் வெறும் கள்ள நாணயங்களே.

—சி. கே. எஸ்.

இங்கு ஏழைகள் ஏங்கவும்
உண்மைகள் தூங்கவும்
நானா பார்த்திருப்பேன்

ஐயா, இந்த ஏழைப்பட்டயப் பொறியாளர்கள் ஏங்கிக் கிடக்கின்றனர். சாதி சமய வேறுபாடு இல்லாத நாட்டிலே நீ சூத்திரன், நீ தாழ்த்தப்பட்டவன் என்று கூறுவது போலத்தான் ஒரே பணியைச் செய்பவர்களிடையே படிப்பின் பெயரால் நீ பட்டயம், அவன் பட்டம் என்று கூறுவது. வாக்குரிமை உள்ள எந்தக் குடிமகனும் ஆலயத்தில் நுழையாதே என்று தடுக்கப்பட முடியாது. ஆனால் பொறியியல் துறைகளில் மட்டும் பட்டம் படித்தவன் உயர்ந்த ஜாதி, பட்டயம் படித்தவன் தாழ்ந்த சாதி. இருவேறு பெயர்கள், இருவேறு சம்பள விகிதம், இருவேறு பதவி உயர்வு முறை—
இப்படி உண்மைகள் தூங்குகின்றன, நீங்களும் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். படிக்காத மேதை காமராசர், கலைஞர் கருணாநிதி, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர், ஆகியோர் பட்டம் பெற்ற பெரியோர்களைவிட சிறப்பாகத்தான் ஆட்சி நடத்தவில்லையா?

கனவு காணும் வாழ்க்கையாவும்
கலைந்து போகும் ஓடங்கள்

என விரக்தியாக இருக்கும் இந்தப் புதிய பாரதம் படைக்கும் சிற்பிகள்

எங்களுக்கும் காலம் வரும்
காலம் வந்தால் வாழ்வு வரும்
வாழ்வு வந்தால் அனைவரையும்
வாழவைப்போமே

என்று நம்பிக்கையுடன் காத்துக்கிடக்கின்றனர். இவர்கள் கண்மாயில் மாறுகால் பாய்வது எந்நாளோ

என்னதான் நடக்கும் நடக்கட்டுமே
இருட்டினில் நீதி மறையட்டுமே
தன்னாலே வெளிவரும் தயங்காதே
ஒரு தலைவன் இருக்கிறான் மயங்காதே

என்று செயல்படும் இந்த உண்மை ஊழியர்கள் அரசாங்க ஊழியர்களாகவே இருக்கிறார்களா? அரசியல்வாதிகளாக மாறி விடுவார்களா?

காலம் பதில் சொல்லட்டும் :

BEST COMPLIMENTS FROM :

S. RAMACHANDRA NADAR
PWD CONTRACTOR CLASS I
No. 15, V. P. NAINAR NADAR STREET,
Mylapore, MADRAS-600 004.

எல்லா ஆசைகளும் புனிதமானவையே, மனித சமூகத்திற்கு, துன்பமும் துயரமும் தராதவரை.
—ஜோசப் கான்ராட்.

கால்டுவெல்லும்

பிராங்ளினும்

குறிஞ்சிக் கவிஞன்

'' 1993-ம் ஆண்டை நோக்கிச் செல்கின்ற நமக்கு 1893-ம் ஆண்டிலேயே தாம் இயற்றிய நாலடியார் ஆங்கிலப் பொழிப்புரையில் நாலடி - 19-ம் பாடலின் விளக்க வுரையில் "Tamil has a wealth of words which English lacks" என்று கூறியுள்ளார். ''காய்' ஏன்ற சொல்லுக்கு இணையான ஆங்கிலச்சொல் இன்மையை அறிந்தே அவர் அவ்விதம் விளக்கினார். காயைக் கண்டு அதன் கனிந்த நிலையைக் ''கனி'' என்றான் தமிழன். ஆனால் ஆங்கிலேயன் கனியைக்கொண்டு ''காய்''க்கு "unripe fruit" என்று வழங்கும் விந்தையைக் கண்டு டாக்டர் போப் ஆங்கிலத்தைவிடத் தமிழ் சொல்வளம் நிறைந்தது என்று துணிந்து கூறினார்.

பைந்தமிழ் தெளிவு நிரம்பியது என்பதைச் சென்னையில் அமெரிக்கத் தூதரகப் பேராளராகப் (American Consul General) பணியாற்றிச் சென்ற டாக்டர் பிராங்ளின் பின்வருமாறு விளக்கி உள்ளார். ஆங்கிலத்தில் சொல்லக்கூடிய எதையும் தெளிவாக ஆற்றலுடன் உணர்த்தும் அழகுமொழி தமிழ் என்கிறார் அவர். "Tamil is a beautiful language with the capacity of expressing with clarity. Whatever could be said in English could be said in Tamil".

—இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் மூன்றாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, 'தமிழில் முடியும்' என்ற கட்டுரையில், தாம்பரம், கிறித்தவக்கல்லூரி உயர்திரு பெ. கு. உலகநாதன் அவர்கள் 1971ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சார்பு வெளியீடு, பக்கம் 150.

Wishes for Platinum Jubilee Celebrations of :

Tamilnadu Engineering Association from

S. AYYARU P.W.D. AND P & T

CIVIL ENGINEERING AND PRIVATE BUILDING CONTRACTOR

பிறர்க்கு உதவி செய்யாதவர்கள் பிறர் உதவியை எதிர்பார்க்க முடியாது.

—ஈராப்.

பாரதி அன்று பாடவில்லை

(A. விஜய், இ. பொ. கன்யாகுமரி)

சங்கம் ஆரம்பித்த நாள் முதல் போராட்டம் நடத்துகிறோம் நாம்
சாகும் வரை உண்ணாவிரதம் இருந்திட்டோம் நாம்
வைத்த தாடியை எடுக்கமாட்டோம் என சபதமிட்டோம் நாம்
கோரிக்கைகள் கைவிடப்பட்டபோது கொதித்தெழுந்தோம் நாம்
அடுக்கடுக்காய் விளக்கவுரைகள் அரசுமுன் வைத்திட்டோம் நாம்
ஆனாலும் பலனில்லை ஆண்டவனே அல்லல் படுகிறோம் நாம்
ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் காண துடிக்கிறோம் நாம்
அனைத்து திறமையிலும் அபார சாதனை காட்டி வருகிறோம் நாம்
இருந்தும் பலனில்லை இடிந்துபோய் நிற்கிறோம் நாம்
நான்காவது சம்பள கமிஷன் தீர்ப்பு காண ஆவலாய் நிற்கிறோம் நாம்
அல்லது நீதிமன்ற தீர்ப்பை நினைத்து பொறுமையாய் இருக்கிறோம் நாம்
எங்கள் நிலை பாரதிக்கு அன்று தெரியவில்லை என அறிவோம் நாம்
தெரிந்திருந்தால் தனி மனிதனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம் என பாடிட்ட பாரதி
ஆயிரமாயிரம் பொறியாளருக்கு அநீதி இழைக்கப்படும்
இந்நாளில் இல்லாமல் போய்விட்ட பாரதியை நினைத்து
நமக்காக பாடுவோம் நாம்
''ஊதியமும், உரைக்கும் பெயரும் ஒன்றாக
கிடைக்காவிடில் அழித்திடுவோம் நம்மை நாமே
பட்டினி கிடந்து''
பூச்சாண்டி அல்ல, புண்பட்ட மனது புரையோடி போய்
பூதாகாரமாய் உருவெடுத்து புறக்கணிக்கும்
வர்க்கத்திற்கு புத்தி புகட்டும் வெற்றி முழக்கம்
சரித்திர ஏடுகளை புரட்டி பார்த்தால் தெரியும்
சபதங்கள் ஓங்காரமாய் ஒலித்த குரல்களை
ஒதுக்கிவிட்ட எத்தனையோ அகங்கார வர்க்கங்கள்
அடியோடு வீழ்ந்த கதை எனவே
ஒருமித்து உரக்க சொல்வோம் திக்கெட்டும் கேட்க
''ஒன்றே பெயர், ஒன்றே உழைப்பு, ஒன்றே ஊதியம்''

With the best compliments from :

INDO STEEL

A-9, SIDCO INDUSTRIAL ESTATE,
COIMBATORE - 641 021.

இயற்கையின் அற்புதத்தைப் பாருங்கள். பல வருடங்களுக்குப் பின்பு, முகத்துக்குக் கண்ணாடி போடப் போவதை உணர்ந்து, காதுகளை முன்பே படைத்திருக்கிறதே!

—வில்லியம் காஸினேல்.

பஞ்ச பூதங்கள் ஒரு விளக்கம்

சு. சம்பந்த மூர்த்தி, கோவை.

இவ்வுலகு பஞ்ச பூதங்களால் ஆனவை என்று முன்னோர்களும், ஆராய்ச்சியாளர்களும், விஞ்ஞானிகளும் பகர்கின்றனர். அவை—நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பது அறிந்த ஒன்றாகும். இதில் எது முதலில் தோன்றியது பின்னர் எது தோன்றியது என்பதுபற்றி ஒரு சிறு விளக்கத்தைக் காண்போம்.

நாம் ஐந்து புலன்களால் இந்த உலகத்தை உணர்கிறோம். அவை யாவை? கண், காது, மூக்கு, நாக்கு, மெய் முதலியன ஆகும். இவைகளால் அறியப்படுபவை முறையே பார்த்தல், கேட்டல், நுகர்தல், ருசியுணர்தல், தீண்டுதலையுணர்தல் என்று அறிக.

நிலம் : பார்வைக்கு அடங்கியது; பொருள்கள் மோதும்போது அதன் சப்தம் கேட்கப்படுகிறது. மண்ணிற்கு வாசனை உண்டு, ருசியுண்டு. மெய்யால் உணரப்படுவது — அதாவது ஐந்து புலன்களாலும் அறியத்தக்கது.

நீர் : பார்வைக்கு அடங்கியது; ஓடும்போது ஒலி உண்டாகிறது; மேனியில் பட்டால் உணரப்படுவது — ஆனால் நீருக்கு மணம் கிடையாது. எனவே நுகர்தல் இயலாது. — அதாவது நான்கு புலன்களாலும் அறியத்தக்கது.

நெருப்பு : கண்ணுக்கு புலனாகும்; எரியும்போது ஒருவித சப்தம் வெளிப்படுகிறது. எனவே கேட்க இயலும். மெய்யால் நெருப்பை உணர முடியும். ஆனால் ருசி பார்க்க இயலாதது. வாசனையற்றது. எனவே இது மூன்று புலன்களால் அறியத்தக்கது.

காற்று : இதன் சப்தத்தை கேட்டிருக்கிறோம். [உதாரணம் : புயல்] மேனியை காற்று தீண்டினால் உணர்கிறோம். ஆனால் இதை கண்ணால் பார்க்கவோ, ருசிக்கவோ இயலாதது; வாசனையற்றது. எனவே இது இரண்டு புலன்களால் மட்டுமே அறியக் கூடியது.

ஆகாயம் : இது இருப்பதை நாம் தூலமாக (Physically) அறிவதில்லை. ஆகாயம் ஒலி மயமாக உள்ளது என்று சொல்லப்படுகிறது. நமது புறச்செவி அதை உணர இயலாது. ஆனால் ஆகாயத்தில்தான் உலகம் உட்பட அனைத்தும் மிதப்பதாக அறிவால் அறிகிறோம். ஆக, இயற்கைப் படைப்பின்போது, மிகவும் நுண்ணிய பொருளிலிருந்து சிறிதுசிறிதாக புலன்கள் அனைத்தும் அறியக் கூடியதாக இந்த பஞ்ச பூதங்கள் அமையப் பெற்றுள்ளன. இவ்வரிசையின்படி பார்த்தால் முதலாவதாக, விண்ணும், பிறகு காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற விதியில் வைக்கப்பட தகும்.

விஞ்ஞான வரலாற்றினை சார்பாக எடுத்துக் கொண்டாலும் இக்கருத்து நிருபண மாகின்றது. அண்ட ஆகாயத்தில் வாயுக் கோளமான சூரியனிலிருந்து பிரிந்து வந்த பூமி ஆகாயத்தில் மிதந்து கொண்டு, வாயுக் கோட்டைக்குள்ளே (Atmosphere) தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, இந்த பூமியிலே, நெருப்பு, நீர், நிலம் முதலியவற்றை தன்னிடத்தே கொண்டு விளங்குகின்றது.

இந்த ஒரு வரி நினைவிற் கொள்ளத்தக்கது :-

நிலத்தில் உள்ள நீர் நெருப்பினால் ஆவியாகி ஆகாயத்திலே மறை கின்றது.

இந்த ஒரு வரியிலேயே வரிசைகிரமம் தெற்றென புலப்படுகிறது.

இதே கருத்தினைக் கொண்ட மாணிக்கவாசகரின் திருவாசக வரிகள் இதோ :-

பாரிடை யைந்தாய் பரந்தாய் போற்றி !
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி !
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி !
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி !
வெளியிடை யொன்றாய் வளைந்தாய் போற்றி !

(திருவாசகம் — போற்றித்திருவகவல்)

A WORD OF ADVICE:

Said the University of Toronto's President Sidney Smith to his students: "If you choose to work, you will succeed; If you don't, you will fail. If you neglect your work, you will dislike it., If you do it well, you enjoy it. If you join little cliques, you will be selfsatisfied; If you make friends widely, you will be interesting. If you gossip, you will be standared; If you mind your own business, you will be liked. If you act like a boor, you will be de-pised. If you act like a human being, you will be respected. If you spurn wisdom, wise people will spurn you; If you seek, wisdom, they will seek you. If you adopt a pose of boredom. you will be a bore; If you show vitality, you will be alive. If you spend your free time playing bridge, you will be a good bridge player. If you spend it in reading, discussing and thinking of thigs that matter, you will be an educated person.

A.md. Ghouse,
A.E., P.W.D./C.M. Div., Trichy.

பலமுள்ளவன் துணையை, பணமில்லாதவன் நாடுவது இயற்கை. அதன் விளைவு அடிமைத் தொழில். —புதுமைப்பித்தன்

தமிழ்ச் சொற் சிறப்பு

(ஞா. தாமசு, உ. செ. பொறியாளர், ஸ்ரீவைகுண்டம்)

எங்கும் எதற்கும் சங்கம் என்பதே இன்றைய நிலை. பிடித்தால் கற்றை விட்டால் கூளம் என்றார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. மக்கள் ஆற்றலை ஒருமுகப்படுத்தி, தேவைகளை நிறைவு செய்திட மென்முறைகளில் போராடுவதே சங்கங்களின் நோக்கமாகும். இற்றை நாளில் பவள விழாக் காணும் தமிழ் நாடு பொறியியல் சங்கம், இந்நாட்டுச் சங்கங்களுள் பழமையானது. பழம் பெருமை பேசி என்ன பயன் என வினவுவர். பழம் பெருமை பீடு தருவதாகும். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தனர் நம் முன்னோர் என்றால் நமக்கு பீடன்றோ ?

தொன்மைச் சிறப்பு :

தமிழ் மொழிக்கே உரிய சிறப்புக்கள் பல. அவை தொன்மைச் சிறப்பு, தனிமைச் சிறப்பு, இனிமைச் சிறப்பு இளமைச் சிறப்பு, எளிமைச் சிறப்பு, ஒலிச் சிறப்பு, உருபுச் சிறப்பு, பண்புச் சிறப்பு, எழுத்துச் சிறப்பு, சொற்சிறப்பு, பொருட் சிறப்பு, கவிதைச் சிறப்பு உவமைச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சிறப்பு என்பன. ஞால மொழிகள் அனைத்திற்கும் மூல மொழி தமிழ் என்று கூறினால், நகைப்பாரும் உண்டு. உண்மை வரலாறு உணராது கட்டுக் கதைகளை வரலாறு என மயங்கும் ஒரு சார் மக்களே அத்தகையோர். கடலுள் மூழ்கிய குமரிக் கண்டமே தமிழ் மொழியின், தமிழ் இனத்தின் பிறந்தகம் என்னும் தமிழ் கூறும் கோட்பாட்டினை மறுத்தோரும் இன்று மறுக்கத் துணியார். ஏனெனில், நில இயல் விஞ்ஞானிகள் ஆய்ந்து உண்மையை நிலை நாட்டியுள்ளனர்.

அமெரிக்காவின் செய்தி நிறுவனமாகிய ''நாசர்'' கூறும் சில கோட்பாடுகள் பின் வருமாறு. ஏறத்தாழ 180 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உலகம் ஒரே கண்டமாகத் தான் இருந்தது. அது பங்கீயா என அழைக்கப்பட்டது. 120 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுடன் இணைந்திருந்த கோந்த்வானா எனும் நிலப்பிரிவு பிரிந்து தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்ட்டிக்கா ஆகிய கண்டங்கள் பிறந்தன. 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவானது ஆப்பிரிக்காவிற்கு அப்பால் ஒரு தீவாக இருந்தது. பின்னர் மெதுவாக நகர்ந்து ஆசியாவுடன் இணைந்து விட்டதாம்.

அழிந்து பட்ட மரக்கலத்தின் ஒருசில துகள்கள் எனக் கிடைத்துள்ள பண்டைத் தமிழ் வரலாறு காட்டும் குமரிக் கண்டமே பங்கீயா என்பதற்கைய முளதோ. மொழிக்கு மட்டுமன்றி வாழ்க்கைக்கும் இலக்கணம் கண்டு வாழ்ந்தவன் தமிழன். தமிழன் வகுத்த நானிலப் பகுப்பு உலக முழுமைக்கும் பொதுவாகும். மொழியும் வாழ்க்கை நெறியும் உலகம் முழுமைக்கும் பொதுவானதே. உலகம் ஒன்றாய் இருந்த காலத்தே செப்பமுற்ற மொழிதான் தமிழ். அதுவே நம் தாய்மொழி என்றால் நமக்கு பீடன்றோ ?

மனிதனுக்காகச் சட்டமேயன்றி, சட்டத்துக்காக மனிதன் இல்லை. —ரூஸ்ஸோ.

இன்றை நிலை :-

பண்டைத் தமிழன் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கினான் என்பதற் கையமில்லை. அறிவியலில் இன்று வெகுவாக முன்னேறியுள்ளோம் எனப் பெருமை கொள்கின்றோம். ஆனால் நம் முன்னோர்கள் கண்ட அறிவியல் வளர்ச்சியினையும் அமைத்துக் கொண்ட வாழ்வியலையும் எண்ணிப் பார்ப்போமாயின் இன்றைய நிலை மிக இரங்கத் தக்கதாகும்.

சொற்சிறப்பின் பயன் :-

கலைச் சொற்கள் அனைத்தையும் தமிழில் ஆக்கிக் கொள்ளத் தேவையான வேர்ச் சொற்கள் தமிழில் உண்டு. ஆனால் இன்றோ தடுமாற்றம் காணப்படுகிறது. இடம் பொருள் அறிந்து சொல்லாக்கம் செய்யப்படா நிலை பல. பிறமொழித் தாக்கம், பிற மொழிப் பற்று, தமிழ் ஒறுப்பு, தமிழ் அறியாமை ஆகிய காரணங்களே தடுமாற்றத்திற்கு ஏதுக்களாம். சொல் வளம் மிக்க தமிழ் மொழியில் கலைச் சொற்களுக்குப் பஞ்சமா, பஞ்சத்தைப் போக்க பாடாற்றுகின்றோம். தமிழ்ப் பஞ்சத்தைப் போக்க பதுங்கி நிற்கின்றோம். பவழ விழாக் காணும் இற்றை நாளில் தமிழ் காக்க உறுதி கொள்வோம். வாழ்க ! தமிழ்.

Phone : 2373 Tel : SARGUNA

ஒரிஜினல்

தென்ன மரக்குடி எண்ணை

கைகால் சுளுக்கு, எலும்பு குறிவு, மூச்சுப்பிடிப்பு, சொறிசிரங்கு, பித்த வெடிப்பு சேத்துப் புண் முதலியவைகளுக்கு சிறந்த நிவாரணி.

தயாரிப்பாளர் : **R. S. கிருஷ்ணு & கோ.** மாயுரம்.

குறிப்பு : "R. S. கிருஷ்ணு & கோ" என்ற விலாசம் இருக்கிறதா என்பதை பார்த்து வாங்கவும்.

BEST WISHES BY

Cordial Company

ENGINEERS & CONTRACTORS

Specialists in all types of Civil Construction Works.

Registered Office :
A-48, SIPCOT Housing Colony,
SIPCOT-Industrial Complex,
Hosur-635126.
Phone : 6773, 6732.

Madras :
No. 63, W-Block,
Anna Nagar,
Madras-40.
Phone : 617243

பணமா மனிதனை சம்பாதிக்கின்றது? மனிதனல்லவா பணத்தை சம்பாதிக்கிறான்.
—சுவாமி விவேகானந்தர்.

CONCRETE IDEA TO SAVE FOREST

N. JAYAGOPAL D.M.E.,
Junior Engineer, P.W.D.
Nagarcoil.

Precast-Prefabricated-Structures are very common in Advanced Countries like Russia, America, etc. Even multistoried buildings are constructed within a very short span of time based on the Advanced Technology on precasting methods in Civil Engineering. Civil Projects are fully mechanised in those countries and less labour force are used for constructing houses, factory sheds, etc.

Indian style of constructions are mostly based on the old principles, Wood and wooden structure dominate in house buildings in their making doors and windows, shelves etc,

Getting quality timber and timber structures are becoming scarce, now-a-days, Quality seasonal timber are practically vanished in the market. Even if some rare spices found, the cost of such timbers are becoming factors to a common man, that he is not in a position to purchase them because of their very high cost.

When this be the position for a common man, Government is deeply concerned with forest destructions. Ageologist report on forest denudation indicated the following that forest are going, thinner now-a-days, that it is a reason for draughts. It was also said that forests protects flood. Government of India is spending larger money on forest preservation.

Late Prime Minister's 20 Point Programme and present Prime minister's follow up steps fully clarify Government's concerns on forest preservation.

I came across with a door frame made up of concrete fitted with wooden shutters in the P. W. D. Display Centre, Chepauk, Madras 600 005.

It is a new novel idea for our thoughts in the present age. The frame made out of concrete is more elegant. It was very difficult to differentiate between wooden frames and the Concrete Frames. The manufacturers of this product are really to be appreiciated for the Introduction of concrete Door Frames to the society.

It is to be undersood that concrete door frames are much cheaper than wooden frames, hence saves money to a common man. Projects can also be time Scheduled, because the precast technology helps for the advanced planning.

உண்மைச் சிறப்புடைய எதுவும் பாராட்டப்படாமல் போகாது. —ஜாயிஸாமேரி

Just like concrete door frames window frame shall also be thought of to the society, because the major components of the wooden structure can be substituted by concrete frames. This will effect more saving in tree cutting and thereby saving the forest from denudation. Time is not faroff to introduce Polymer glazed shutters in place of wooden shutters. Such total replacement of wood from House buildings will not only help saving forest but also help the poor and middle class communities for planning economical housings.

Concrete Frames being effective substitute to wooden frames. Provides more advantages just like Fire Proof, Anti-termite, Weather Proof, anti-corrosive and protection is ensured against any weather. High credential must be awarded for such kind of manufacturers, not for the reason that they are introducing new items, but for the cause that they help us and the nation.

கிளராத சோறு வேகாது
சீவாத தலை படியாது
துவைக்காத துணி வெளுக்காது
இவற்றைப் போலதான்
விளக்காத உண்மை
வீணாகிப் போய்விடும் !

——அறிஞர் அண்ணா

அகில இந்திய டிப்ளமா பொறியாளர் மாதாந்திரி வாங்கி
இயக்கத்துக்கு வலுவூட்டுங்கள்.

Er. சுவாமிநாதன் LCE.,
அ. இ. டி. பொ. தென்மண்டல செயலர்.

பிறருக்காக உழையுங்கள். பிறர் உழைப்பை எதிர்பார்க்காதீர்கள்.

—ஓர் அறிஞர்.

பெருமூச்சு

(ஞான. தோம)

சங்கொலியும் காதில் ஏறா செவிடர்க்கு
எங்கள் குறையைக் கேட்டிட யாருளர்
எற்றம் இல்லை தாழ்ச்சி இல்லை
என்ற தருமம் எங்கே போயிற்றோ
வேலை ஒன்று ஈகை இரண்டோ
எங்கே உண்டு இத்தகு இழிநிலை
மணியைக் கட்டி அன்று ஆண்டனர்
தவறுக் காக உயிரும் விட்டனர்
ஏழ்மைப் பெற்றோர் பெற்று விட்டதால்
பட்ட யத்தைப் பெற்று விட்டோமே
பட்டம் பெற்ற பேர்கள் எல்லாம்
மேதை என்று கூற வல்லவரோ
பட்ட யத்தார் மந்த புத்தியரோ
இல்லை இல்லை நாட றியுமே
அதனால்
நீதி வேண்டி நேர்மை வேண்டி
கேட்டு நின்றோம் கொடுக்க வில்லையே
தட்டிப் பார்த்தோம் திறக்க வில்லையே
முட்டி முட்டி குருதி கொட்டுதே
நெஞ்சம் குமுறி நீயைக் கக்குதே
புறக்க ணிக்கப் பட்ட நாமெலாம்
ஒருங்கி ணைந்து வெற்றி ஈட்டுவோம்
போரைத் தொடுப்போம் அறத்தின் வழியிலே
வெற்றி கிட்டும் வரையில் சோரோமே
பவழ விழாவில் பட்டயத் தார்விடும்
மூச்சு, தியாய் எங்கும் பரவட்டும்
கொடுமை தன்னை சுட்டுப் பொசுக்கட்டும்
நீதி நிலைக்க பாதை காட்டுமே

ஏடுகளும், புத்தகங்களும் ஓரளவிற்கே உதவி செய்யக் கூடியவை. மிகுதி அனுபவ வாயிலாக அறியவேண்டுபவை. கைகாட்டி மரம் வழியைக் காட்டுமே தவிர, நாம்போக-வேண்டிய இடத்திற்கு நம்மைக் கொண்டு சேர்க்காது. —இராமகிருஷ்ண பரமஹம்சர்.

பூ! இவ்வளவுதானா?

சங்க இலக்கியத்தில் மலர்கள். **திரட்டியவர் : 'பாவை'**

அரும்பு, அதிரல், அந்தி, அலரி, அவரை அனிச்சம், ஆத்தி, ஆம்பல், ஆரம், ஆவிரை, இருப்பை, இருவாட்சி, இலவம், ஈங்கை, உந்தூழ், உழிஞை, உன்னம், ஊகு, எருக்கு, எருவை, ஏறும், கடம்பு, கணவீரம், கரந்தை, கரும்பு, கருவிளை, கழுநீர், காஞ்சி, காந்தள், காயாகாவி, காளாம்பி, காழ்வை, குடசம், குமிழ், குரவம், குருக்கத்தி, குருந்து, குல்லை, குவளை, குளவி, குறிஞ்சி, குறுநறுங்கண்ணி, கூதாளம், கூவிரம், கூவிளம், கொகுடி, கொன்றை, கோடல், கோங்கு, கைதை, சண்பகம், சிறுசெங்குரலி, சிந்துவாரம், சிறுமாரோடம், சுள்ளி, செருவிளை, செருந்தி, செச்சை; செம்மல், சேடல், சூரல், ஞாழல், தணக்கம், தளவம், தாழை, தாமரை, தில்லை, திலகம், தெறுழ், தேமாம்பூ, தேறு, தும்பை, துழாய், தோன்றி, நந்தி, நரந்தம், நறவம், நாகம், நீலம், நுணவம், நெருஞ்சி, நெய்தல், நொச்சி, பகன்றை, பயினி, பரேரம்புழுகு, பலாசம், பனை, பாங்கர், பாதரி, பாலை, பாளை, பிடவு, பிண்டி, பித்திகம், பீர்க்கு, புன்கம், புன்னை, பூளை, போங்கம், மணிச்சிகை, மருவம்' மருது, மல்லிகை, முகிழ், முண்டகம், முசுண்டை, முந்தூழ், முருக்கு, முருங்கை, முல்லை, மௌவல், வடுளம், வஞ்சி, வடவளம், வழை, வள்ளி, வாகை, வாழை, வானி, வெட்சி, வெள்ளோத்திரம், வேங்கை, வேம்பு, வேரல், வேரி, வேழம், வேளை 'என நூற்றி இருபத்தொன்பது மலரினங்கள் இருந்ததற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. மலர்களை நிலப்பூ, நீர்ப்பூ என்று இருபெரும் பிரிவுகளாகப் பிரித்திருந்தனர். நிலப்பூக்களைக் கொடிப்பூ, கோட்டுப்பூ, செடிப்பூ, புதற்பூ, புற்பூ என்று மேலும் பாகுபடுத்தியிருந்தனர். வீ, மலர், அலர், அலரி, பூ என்று மலரைப் பல்வகையாற் குறித்தனர்.

மலர் மலர்வதற்கு முன்புள்ள பருவநிலைகளை நனை, அரும்பு, முகை, போது என்று குறிப்பிட்டனர்.

தமிழர் நாகரீகம் மலர்களுடன் மிகுந்த தொடர்புடையன. நிலப்பாடுபாடே அப்பகுதியில் மிகுதியாக விளையும் மலர்களையடுத்தே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்பெயரிடப்பட்டது. இறைவழிபாடு முதல் இறுதிச்சடங்கு வரை மலர்கள் நாம் பயன்படுத்துவது போன்று உலகில் எவருமே பயனபடுத்துவதில்லை. அகவாழ்விலும், புறவாழ்விலும், மலர்கள் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது. அதனால்தான்

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

என்று இலக்கியங்கள் கூட எடுத்தியம்புகின்றன.

Wishes from : Phone : 162

alamattil traders

Convent Road,
KULASEKHARAM - 629 161
(Dealers in Hard-Wares, Paints, Sanitary Fitting)
Stockist For : GAR WARE PAINTS
SUNDARAM PAINTS & CHEMICALS (P) LTD.,

நான் வாழ்வில் இரண்டு முறைதான் அழிந்து போயிருக்கின்றேன். வழக்கில்வெற்றி பெற்றபோது ஒருமுறை; வழக்கில் தோல்வி அடைந்போது ஒரு முறை.. —வால்டேர்.

"கோணல் தர்மங்கள்!"

(D. D. சாமுவேல், உ. செ. பொ.)

பொத்தலாகிப் போன
பொதுப் பணித்துறையிலே
தீண்டப் படாதவனுக்கு
ஒரு
புதிய புனைப் பெயர்
ஜூனியர் எஞ்சினீயர்
நிலத்தின் நிர்வாணத்திற்கு
பயிரென்ற பச்சை பட்டு
நெய்கின்ற தொழிலுக்கு
நீர் பாய்ச்சும்
நிரந்தர நோயாளி
முறியாத முனைப்பான
முதுகுத் தண்டை
தள்ளாடும்
தனது துறைக்கு
தாங்கி நடக்க
தந்து விட்டவன்
அவன் கால் தடங்கள்
காட்டில் மேட்டில்
வேர் பதித்தால்
அணைகள் கட்டிடங்கள்
அத்துணையும் கனபரிமாணத்துடன்
நிமிர்கிறது நிலைக்கிறது
ஆனால்

நூற்றாண்டில் அவன்
கால் பங்கை பாங்குடனே
பதவிதன்னில் கழித்த பின்னும்
பதவி உயர்வுக்கோ
மறுதலிப்பு மறுதலிப்பு
மானுடத்தின்
'தாக' ராகங்கள்
அவனுக்கு மட்டும்தான்
அவன் கல்வியிலே குறையுண்டாம்
ஆகமங்கள் வேதங்கள்
அவனுக்குத் தெரியாது
அவன் செய்கின்ற தொழிலுக்கு
அடிப்படை ஞானங்கள்
அவனிடம் ஏராளம் ஏராளம்
புரிந்தும் புரியாத நாடகத்தை
நடத்துகின்ற ஞான சூனியங்கள்
அவன் துறையில் ஏராளம் ஏராளம்
ஒருதலைப் பட்ச
ஓரவஞ்சனை நியாயங்களை
அவனுக்களிக்க தாராளம் தாராளம்
அக்கினி வேள்வியில்
அழுது புலம்புது
அவன் தேகம்
அந்த பசியின் கேள்விக்கு
பதில் சொல்லத் தெரியாமல்
பாவமாய் விழிப்பது
பாவப்பட்ட சங்கமல்லவா?

கொதிப்பதினால்
கொட்டி விட்டேன்
அள்ள தான் போவதில்லை
மன்னிப்போர் மறக்கட்டும்
மற்றவர் கிடக்கும்!

உண்மையை எல்லாம் நீங்கள் சொல்ல வேண்டும் என்பதில்லை. சொல்பவைகள் எல்லாம் உண்மையாக இருக்கட்டும். —ஹோராஸ்மான்.

இக்காலத்தில், குடும்ப நலங்குறித்து, ஆரம்பக் கட்டத்தில் பெரியவர்கள் கூறிவந்த, புதுக்குறள்.

குடும்ப நலம் ஏற்பீர்
குழந்தை நலம் காப்பீர்

அளவோடு பெறுவீர்
வளமோடு வாழ்வீர்

இரண்டே பெறுவீர்
இனிதே வாழ்வீர்

மிகுந்த மதிப்பும், மரியாதையுடன் கூறியதை உணர்ந்தோமா?

இல்லை !

தொடர்ந்து,

இரண்டே பெறுக
இனிதே வாழ்க

ஆற்றுக்கு தேவை கரை இரண்டு
வீட்டுக்குத்தேவை பிள்ளை இரண்டு

அளவான குடும்பமே
வளமான வாழ்வு

சிறு குடும்பமே
சீரான வாழ்வு

பெரியவர்களின் அறிவுரைகளை இப்போதாவது ஏற்றுக் கொண்டார்களா நம்மில் சிலர்.

இல்லவே இல்லை !!

அதன் பலன்,

அச்சிலருக்கு கிடைத்துள்ள கடைசி, கீழ்காணும் மரியாதைக்குரிய புதுக்கு(ரல்)றள் இவைதானா? இல்லை.....

பிள்ளைப் பெருக்கம்
பிணியைப் பெருக்கும்

அதிகம் பெறாதே
அவதிப் படாதே

With best compliments from :

SARAVANA THEATRE,

MAILPATTI ROAD,
GUDIYATTAM (N.A.).

குற்றத்தை ஒப்புக் கொள்வது நேர்மையின் முதற்படி. —ஓர் அறிஞர்.

கேள்விக் குறி ?

மீன் எட்டிப் பாயுமொரு பச்சைக் கழனி
மீதேறி மறுகழனி பாயும் வண்ணம்
தேன்விட்ட நறும்பூக்கள் நீந்தும் ஆற்றின்
திசையறிந்து மடைகட்டித் திருப்பும் பொறிஞன்
வான்விட்ட வழியென்று மனம் தளர்ந்து
வளர்கின்ற திறனனைத்தும் ஒதுக்கி விட்டு
ஏன்விட்டோம் அறிவதனை இந்த நாட்டில்
என்றுஅழும் அவன்வாழ்க்கைக் கேள்விக் குறியோ ?

பெத்தவொரு தாய்தனக்குப் பேதம் இன்றி
பேணுகின்ற பிள்ளைகளின் தன்மை யற்று
ஒத்ததொரு தொழிலைத்தாம் செய்தபோதும் மனம்
உறுத்துகின்ற பேதமதை உரித்துக் கூட்டி
கொத்தடிமைத் தனமுறையும் நீரை வார்த்து
கொத்துகிற பிரித்தாளும் பயிரை வளர்த்தார்.
மத்தவொரு துறையினிலும் மலராத இப்பிழைகள்
மறையுமென நம்புவதும் கேள்விக் குறியோ ?

மலையெங்கும் நிறையுமெழில் மேலை நாட்டின்
மேன்மைமிகு விஞ்ஞானம் மேலும் சேர்த்து
கலையெங்கும் தழுவுமதன் தத்துவம் தான்
களிப்புடனே காலமெலாம் கற்றுத் தேர்ந்து
தலையெங்கும் அறிவாற்றல் தெறிக்கும் வண்ணம்
தருகின்ற பொறியாளர் வாழ்க்கை யெல்லாம்
அலைபொங்கும் கடலதனை நம்பி வாழும்
வலைஞரவர் வாழ்வதுபோல் கேள்விக் குறியோ ?

பழுத்தமரக் கிளையமரும் வண்ணப் புட்கள்
பழம்தீர்ந்து போனவுடன் பறத்தல் போல
எழுத்தரிடம் அழுத்தமதாய் உழைப்பைக் கண்டு
ஏழையெனும் ''என்ஜீவோ'' இனத்தைக் கண்டார்
பழுத்துவளர் அரசியலில் நீதி யில்லை
பழமையற வாழ்வினிலும் நேர்மை யில்லை.
அழுத்தமுற அலுக்கும் அவன்வாழ்க்கை யெல்லாம்
அழகுடனே மலர்வதும்தான் கேள்விக் குறியோ ?

நீரோடும் ஓடையிலே தேக்கம் கட்டி
நிலவாடும் மேற்பரப்பில் கூடம்விட்டு
பேரோடும் பாசினிலே ஆக்கம் கண்டோம்
பேர்கொண்ட நமக்குத்தான் தூக்கம் இல்லை
ஆறோடும் கனிமலைகள் நிறைந்து தென்றல்
சீராடும் தமிழகத்தில் உரிமை கேட்டு
தேரோடும் வீதியெலாம் முழக்கஞ் செய்து
போராடிக் குறியதனை மாற்றி வைப்போம்.

காஞ்சி முத்துக்கிருஷ்ணன் L.C.E.
இளம் பொறியாளர் பொ. ப. து
ஏ. சீ. தி. உபகோட்டம்
போளூர்.

உயிரை இழக்கத்துணியாத கோழையிடம். அஹிம்சையைப் பற்றிப் பேசுவதில் பயன் இல்லை. அஹிம்சை ஆண்மையின் அணிகலன். —காந்தியடிகள்

நான் பிறகு ஒரு நாள் சென்று அப்பாவைப் பார்த்தேன். எல். டி. சி யில் பையன் வந்ததை சொன்னார். நீயும் போய் வாயேன் என்றார் போகும் போது தன்னையும் அழைத்துச் செல் என்றார். எனக்கு அதெல்லாம் கிடையாது என்றேன்:

''சோமு வந்தானே. அவன் உன் டிபார்ட்மெண்டில், உனக்கு கீழ் நிலை பணி தானே'' என்றார். ''அதுவேறு இதுவேறு'' என்றேன்.

அவர் அப்பாவி. அதனால் என்னை இன்னும் நம்புகின்றார்.

அதென்னவோ எனது துறையில் நான் எமர்ஜன்ஸியாகவே பத்து பதினைந்து ஆண்டுகள் சர்வீஸ்போட முடிகிறது. ஒரு தடவை வீட்டுக்கு அனுப்பிப்பார்த்தார்கள். அப்போது.

தமிழ் நாடு பொறியியல் சங்கம் என்று ஒன்று இருப்பதை மறந்து போய் உத்தரவு போட்டு விட்டார்கள்.

ஒன்றும் செய்யவில்லை சங்கம் நாங்கள் ''இருக்கிறோம்'' என்றார்கள் சில தலைவர்கள் ''இறக்கிறோம்'' என்றார்கள்.

உத்தரவு வாபஸ் ஆனது.

இன்றைக்கு ஸ்பெஷல் செலக்ஷன் ஆகிவிட்டது.

இடையில் எனக்கு கல்யாணம் ஆயிற்று பாவம் அவள்!!

அவளுக்கும் எனக்கும் சண்டையே ஏற்பட்டதில்லை. அதற்கெல்லாம் நேரமேது? எங்களுக்கு காதலுக்குக்கூட நேரம் கிடைத்ததில்லை. இந்தத் துறையின் சட்ட திட்டங்களுக்கு, தாறுமாறான நேரக்கட்டுப்பாடுகளுக்கும் மீறி (நான் தான் 24 மணிநேர ஊழியனாயிற்றே) சில வேளைகளில் காதல் பிறப்பதுண்டு!

எப்போதுமே காதல் உணர்வுகள் எல்லாரையும் போல எனக்கும் உண்டு. அவளுக்கும் இருக்காதா? உணர்வுகளின் வெளிப்பாடு தானே உண்மையான தாம்பத்யம்? அங்கே தான் எனக்குக் கட்டுப்பாடு. கடமை முதலில் காதல் பிறகு என்று எனக்கு ஒரு கொள்கை வைத்திருக்றேன்-தப்போ?

ஆனால் என்னவோ தெரியவில்லை; எது என் கடமை எது எனதில்லை, எது நான் செய்யவேண்டும் யாவை நான் செய்யத்தேவையற்றவை என்ற வரை முறையே எனக்கு இல்லை. எனக்குமட்டும் அல்ல என்னை வழிநடத்தும் 'மேலா'வுக்கும் இல்லை. சில வேளைகளில் ஊதற்காற்றினால் உடம்பும் மனசும் மனைவிக்கு ஏங்க, வீட்டில் குளிரினால் எரியும்' மனைவியும் காத்திருக்க - நான் சாலை யோரத்து டிராவலர்ஸ் பங்களாவின் வாசலில் வெறுமனே வேலை வெட்டியில்லாமல் காத்துக் கிடந்ததுண்டு. அதுவும் எனது கடமைதான்!! நடுஇரவில் ஒரு வழியாய் வீட்டுக்கு வந்தால் உடம்பு குளிரினால் விரைத்துப்போய் இருக்கும். மனைவி மறத்துப் போயிருப்பாள். ஆனால் எப்படியோ அவளிடம் ஒரு மாறாத சிரிப்பு தோன்றும்!

ஆகவே—

எங்கள் காதலே கூட ஒரு கடமையாகி விட்டது தவிர்க்க இயலாததினால்.

[ஒரு ஞாபகம் வருகின்றது தாலிகட்டி முடித்த உடன் எனது அலுவல் நண்பர்கள் ஒரு கடிகாரம் பரிசளித்தார்கள், அதை வழங்கி வாழ்த்திய ஒரு சீனியர் பொறியாளர் கூடவே ஒரு பார்சலையும் கொடுத்தார்.

பெண்களுக்கு மூன்று கடமைகள்: அழகாக இருப்பது, கவர்ச்சியாக உடைஅணிவது, எதிர்வாதம் பேசாதிருப்பது.
—ஸாமர்ஸெட் மாகம்

அதுவும் ஏதோ பரிசாக்கும் என்று வாங்கினேன் சீனியர் பொறியாளர் சொன்னார் : "என்னங்க' இன்று தானே கல்யாணம் மூன்று நாட்களுக்கு முன்பே லீவு போட்டுவிட்டு வந்து விட்டீர்களாமே. இன்னும் நாளையும் மறுநாளும் வேறு வரமாட்டீர்களாமே! இந்தபார்சலில் ஒரு ரிவைஸ்ட் எஸ்ட்டிமேட் உள்ளது. ஒரு மூன்று மணி நேரம் இப்போது ஒன்றும் அவசரமில்லை மெதுவாக சாப்பாடெல்லாம் ஆனபிறகு மத்யாணமாக உட்கார்ந்து பார்த்துக் கொடுத்துவிடுங்கள்மேலே இருந்து தந்தி வந்து விட்டது. உங்கள் உதவி செயற் பொறியாளரையும் விட்டுச்செல்கிறேன்."

என் புதிய மனைவி அன்றுதான் முதல் முதலாக விளக்கெண்ணை சாப்பிட்டாள்!! அன்று இரவு அறைக்குள் வந்ததுமே முதல் முதலாக கலீரென்று சிரித்து விட்டாள்.

எப்படியோ ! எங்களுக்கும் மூன்று வாரிசுகள்.

நல்லவேளை இரண்டு ஆண் ! ஒரே பெண் ! இந்த ஒரே பெண்ணுக்கே நான் ரிட்டையர் ஆகி சொந்த ஊரில் செட்டில் ஆகி பிறகுதான் மாப்பிள்ளை-இன்ஜினியர் அல்லாத மாப்பிள்ளை தேடவேண்டும்.

என் மனைவிக்கு இரண்டு சக்களத்திகள் வேறு உண்டு. ஒன்று பொதுப்பணித்துறை மற்றொன்று தமிழ்நாடு பொறியியல் சங்கம் நான் எப்போதும் சக்களத்திகளுடனே இருந்து கழித்து விடுகிறேன் என்ற குறையும் அவளுக்கு உண்டு !

பள்ளிக்கூட அட்மிஷனில் இருந்து பக்கத்து வீட்டுக் கல்யாணம் வரையில் என் குடும்பத்தில் எல்லாமே அவள் தான் !

அரிசி பருப்பு விலையெல்லாம் எனக்குத் தெரியாது ஆனால் ஷெட்யூல் ஆப்ரேட் பூராவும் அத்து படிதான்.

என் மகனின் படிப்புத்தரம் பற்றி நான் கவலைப்பட்டதே இல்லை-ஆனால் NBE தரம் ISI தரமெல்லாம் தலைகீழ்ப்பாடம் !

திடீரென்று ஒரு நாள் பசங்களை எல்லாம் நடு இரவில் எழுப்பிவைப்பாள் அப்பா வந்திருக்கிறார் பாருங்கள் என்பாள். அசதியாக இருந்தாலும் பசங்களுடன் கொஞ்ச நேரம் பேசுவேன் பசங்கள் மீண்டும் மலர்ச்சியுடன் உறங்கிப்போகும்.

"என்னடி, திடீரென்று பசங்களை எழுப்பி கூத்து ?" என்பேன்.

"மறந்து விடக்கூடாதே-அதனால் தான்" என்பாள்,

எனக்கு எப்போதுமே சில விஷயங்கள் புரிவதில்லை, அந்த நடு இரவில் இவளது பூடகம் எப்படிப்புரியும். அதனால் எதை மறந்துவிடுவார்கள் என்று விளக்கம் கேட்பேன்

"உங்களைத்தான்..." என்பாள்,

முறைத்துப்பார்த்தால் —

சிரித்துக் கொள்வாள். வேறு என்ன செய்ய?

ஒரு நாள் ஒரு புதுச்சேலை நானே தேர்வு செய்து வாங்கிவந்தேன்! - அது என் பத்தாவது திருமண நாள். அவளுக்கு ஏக மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியின் பின்னே - நானும் இரவுக்கான கற்பனைகளில் மயங்கிப்போனேன்.

பொய்யும், சூதும் இல்லாத நாடு இல்லை; அவற்றிற்கு எந்த தட்பவெட்ப நிலையும் பொருந்தும்.

—ஜோசப் அடிகள்

நாட்டிற்கு சுதந்திரம் வந்து நம்மாட்சி–குடியாட்சி அமைந்தபிறகு, டிப்ளமோ பொறியாளரின் வீழ்ச்சி துவங்கியது.

அன்னிய ஆட்சியிடமிருந்து நாட்டு மக்களுக்கு அடிமைத்தளை விடுபட்டது. ஆனால் அதே நேரம் டிப்ளமோ படித்த ஏழை, எளிய மக்களின் வாரிசுக்கு அடிமைத் தளை பூட்டப்பட்டுவிட்டது. இதுதான் சரித்திரம் காட்டும் உண்மை !

விளக்கம் வேண்டுமா ! இதோ :-

1. பொதுப்பணித்துறை துவக்கக் காலத்திலிருந்து 1948 வரை, டிப்ளமோ டிகிரி ஆகிய இருவருக்கும் ஒரே பெயர் ''சூபர்வைசர்'' பதவிஉயர்வும் சமமாக வழங்கப் பட்டுவந்தது.

2. 1949ல் சுதந்திர இந்தியாவில், அரசியலில் ஆங்கிலேயன் கடைபிடித்த பிரித்தாளும் சூழ்ச்சி'' பொதுப்பணித்துறையில் அமுலாக்கப்பட்டது. துறையின் பெருமையும், மறுமலர்ச்சியும் குன்ற ஆரம்பித்த வருடமும் அதுவேதான் 1949ல் பதவிஉயர்வில் 1 : 1 என்ற விகிதாசாரம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. (டிப்ளமோ 1 : டிகிரி 1)

3. 1952ல் சூபர்வைசர் என்ற பெயர் பட்டம்படித்தவர்களுக்கு மட்டும்மாற்றப்பட்டு ''இளம் பொறியாளர்'' எனபெயர் சூட்டுவிழா நடைபெற்று பதவிஉயர்வில் விகிதா சாரமும் 1 : 2 என்று மாற்றப்பட்டது.

4. 1956ல் மீண்டும் பதவி உயர்வில் விகிதாசாரம் 1:3 என்று மாற்றப்பட்டதோடு நில்லாமல், இருசாராருக்கும் பதவி உயர்விற்கு குறைந்த பட்ச அனுபவம் 5 வருடமாக இருந்ததைமாற்றி, டிப்ளமோவிற்கு 10 வருட அனுபவம் என்றும், டிகிரிதாரருக்கு 5 வருடம் எனவும் மாற்றப்பட்டது.

1948லிருந்து 1956 வரை தொடர்ந்து இதுபோன்று மாற்றம் செய்வதற்கு ஏதாவது அடிப்படை காரணம் விஞ்ஞான ரீதியாக உண்டா ? என்றால் இல்லவே இல்லை வஞ்சகாண்ணம் கொண்டோர் கை ஓங்கியிருந்தது. நாமும் சற்று நிதானப்போக்கை கடைபிடித்துவிட்டோம்.

அதுதான் காரணம்.

நம்மிடருந்து பிரித்து சென்ற பட்டங்கள் துறையின் வளர்ச்சிக்காகப் போராடி தன்னையும் வளர்த்துக் கொண்டு துறையையும் வளர்த்திருந்தால் பாராட்டலாம்.

அதைவிட்டு.

அதிகாரவர்க்கத்தின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு பலியாகி தற்காளிகமாகச் சில எலும்பு துண்டுகளை பதவிஉயர்வு என்ற பெயரால் பெற்றுக் கொண்டார்கள் 5 வருடகாலத்திற்குள் ளாகவே பதவிஉயர்வை அவர்களால் காணமுடிந்தது அதற்கு எதிரிடையாக டிப்ளமோ பொறியாளர்கள் இன்று 25 வருட அனுபவம் பெற்றும் பதவி உயர்வை நினைத்துக் கூடபார்க்க முடியவில்லை. நமக்குத்தான் இந்தநிலை என்றால் அவர்களுக்காவது நிரந்தர மகிழ்ச்சிஉண்டா என்றால் இல்லை !!

ஏன் !

வாழ்ந்துகொண்டு இறப்பவரும் இறந்துகொண்டு வாழ்பவரும் உலகத்தில் உண்டு.
—சி. கே. எஸ்.

தொலைநோக்கோடு சிந்தித்து, செயல்படாத காரணத்தால் ஒரு சிலவருடங்களுக்கு விரைவில் கிடைத்த பதவிஉயர்வு, துறை விரிவாக்கப்படாததால் மீண்டும் தாமதமாகத் தொடங்கியது. இன்று பட்டயப்பொறியாளர்கள் 25 வருடமாக பதவிஉயர்வு இல்லாமல் இருக்கிறோம் என்றால், நம்சகோதரபட்டப்பொறியாளர்களும் 15 வருடம் பதவிஉயர்வு இல்லாமல் இருக்கிறார்கள், கூடிய விரைவில் அவர்களுக்கு 25 வருடம் என்றும் தமக்கு பதவி உயர்வே இல்லை என்ற நிலைமை ஏற்படுவதற்கும் வாய்ப்புகள் உண்டு.

சுதந்திரம் அடைந்தபிறகுதானே பல்வேறு முன்னேற்றதிட்டங்கள் செயலாக்கப் பட்டது! இன்னும் தொடர்ந்து ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றனவே! இந்ததிட்டங்கள் அனைத்தும் பொறியாளர்கள் மூலமாகத்தானே நிறைவேற்றப்பட வேண்டும், பின்ஏன் பொதுப்பணித்துறையில் இந்தத்தேக்கநிலை? என்றால்-அதற்கான அடிப்படையை ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் ஒன்று நன்றாக விளங்கும்.

அதுதான்

அதிகாரவர்க்கம் 1949ல் விதைத்த ''பிரித்தாளும் சூழ்ச்சி'' என்ற விதை நாளொரு மேனியாக வளர்ந்து அதில் நாம் வகையாக சிக்கிக் கொண்டுவிட்டோம்.

சங்கத்தின் பவழவிழா-நம்முடைய குடும்பத்தின் பெருவிழா-பொறியாளர்களாகிய தாம் இந்த நல்லதருணத்தில் பட்டயமாக இருந்தாலும் சரி பட்டமாக இருந்தாலும் சரி ஆழந்து சிந்திக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

துறையில் கிடைத்துவந்த மிககுறைந்த வாய்ப்புகளை அதிகமாகக் முயற்சிக்காமல் இருக்கின்ற வாய்ப்பை பங்குபோடுவதில் விகிதாசாரம் பார்த்த நண்பர்கள்,

துறை விரிவாகக்கூடிய பல்வேறு திட்டங்கள் வளிய வந்தபொழுது சிலதற்குறி தலைமைபொறியாளர்களால் வேண்டாம் என மறுத்து, துறை வளர்ச்சியை இரும்புச்சுவர் போட்டுதடுத்தபொழுது வாளா இருந்ததேன்!

விளக்குவார்களா?

பொதுப்பணித்துறையிலிருந்து பல்வேறு துறைகளை தனியாக பிரித்தபொழுது, பொறியாளர்களின் நிலை குறித்து விவாதித்து, எந்த அரசுத்துறையானாலும், அல்லது அரசு சார்புள்ள நிறுவனங்கள், வாரியங்களானாலும், பொறியாளர்களின் நிலை, பதவி உயர்வு வாய்ப்பு போன்றவைகள் ஒரே நிலையில் இருக்கவேண்டிய அவசியம் குறித்து— ஏன் சிந்திக்கப்படவில்லை.

இன்று 45 வயதானவர்கள் இங்கு உதவி பொறியாளராகவோ/உதவி நிர்வாக பொறியாளராகவோ இருந்தால், மற்ற வாரியங்களில் ஒத்த வயதுடையவர்கள் மேற் பார்வை பொறியாளர்கள்மட்டத்தில் அல்லவா பணிபுரிகின்றனர்.

இது குறித்து சிந்திக்க வேண்டாமா? உரிய நேரத்தில் நாம் உரிய குரலை எழுப்பாததால்தானே! இந்த நிலை?

நாம் பிளவு பட்டுநின்று, தனித்தனியாக குரல் கொடுத்ததால் நம்குரல் உரியவர் களிடத்தில் ஏறவில்லை என்பதை நாம் உணர வேண்டாமா? தமிழ்நாடு பொறியியல் சங்கம், தாய்ச்சங்கத்திற்கான பொறுப்புணர்வோடு எத்துணையோ பொறுமையாக இருந்து

பிறரை நம்பி வாழ்பவருக்கு வறுமை என்றுமே இருந்து கொண்டுதானிருக்கும்.
—வில்லியம் டேம்பிள்

With the Best Compliments from :

The Madurai Modern Engineers' Construction Co-op. Society Ltd., Madurai

Specialists in Modern & Structural Design and Construction

EX-OFFICIO PRESIDENT :

Thiru N. Vedalingam B.E., F.I.E.
Superintending Engineer, PWD,
Madurai Circle, MADURAI

EX-OFFICIO VICE-PRESIDENT :

Thiru V. Duraiswamy ME (Struct)
Executive Engineer, PWD.
Madurai Division, MADURAI

Secretary :
Thiru SELVAM, D.C.E.

ஒருவனிடம் இல்லாத குணங்களை இருப்பதாகப் புகழ்வது, அவனைக் கேலி செய்வதாகும். —முகம்மது நபி.

With the best Wishes from :

R. SUBRAMANIAM

32, KRISHNASWAMY KOIL STREET,
VYASARPADI, MADRAS-600 039.

With the best compliment from :

VELAYUDHAM

SUPPLIER & CONTRACTOR,

MANALI, MADRAS - 600 068.

With the best compliments from :

EGA & ANU EGA

Super Deluxe Air - Conditioned Theatres
810, Poonamallee High Road,
MADRAS - 600 010.

Phone : 663666

பவழ விழா காணும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு
எங்களது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

நா. இராமச்சந்திரன்,

பொதுப்பணித்துறை ஒப்பந்தக்காரர்
நாராயணபவனம், ஆஸ்ரமம் - 629 704
தொலைபேசி : 3144
கொடுக்கப்பட்ட வேலைகளை குறிப்பிட்ட காலத்திற்குள்
முடித்துத் தருவது எமது தனிச்சிறப்பு.

தெரிந்ததைத் தெரியுமென்றும், தெரியாததைத் தெரியாதென்றும் கூறுவதுதான் அறிவு.
—கான்பூஷியஸ்.

Wishing All Success to

Platinum Jubilee Celebrations of

Tamilnadu Engineering Association-P.W.D.

Abirami Theatre Private Ltd.,

152, Purasawakkam High Road,

MADRAS - 600 010.

ஆண் இனம் தங்களை அடிமையாக்கி விட்டதாகப் பெண்கள் அலறுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே அவர்களுக்கு அடங்கி வாழ்பவர்கள் ஆண்கள்தான். —லெனின்.

BE JOYOUS !

CHEW WITH AUTHOOR BETAL

AVAILABLE IN CITIES LIKE,
COIMBATORE, THIRUCHI, BANGALORE,
BOPAL, JAIPUR AND DELHI
"WISH ALL SUCCESS TO PLATINUM JUBILEE
OF TNEA / PWD."

With Regards,

Betal Agriculturalists Association

AUTHOOR - 628153
TIRUNELVELI DISTRICT

"தமிழ்நாடு பொறியியல் சங்கம் காணும் பவழவிழா
நனிசிறக்க நல்வாழ்த்துக்கள் கூறும்"

ஆத்தூர் வட்டார வெற்றிலை விவசாயிகள் சங்கம்

ஆத்தூர், நெல்லை மாவட்டம்

சுவை மிகுந்தது ! மக்கள் விரும்புவது !!

ஆத்தூர் வெற்றிலை

கோவை, திருச்சி, பெங்களூர், போபால், ஜெய்பூர், டில்லி
முதலிய பெருநகரங்களில் கிடைக்கும்.

ஆத்தூர் வெற்றிலை

எழுத்தாளன் ஆவதற்கு சாமர்த்தியம் மட்டும் போதாது, சரக்கும் வேண்டும்.
—எமர்சன்.

Best compliments from :

RADHA KRISHNA LUNCH HOME

Perriakuppam
TIRUVALLUR, R. S. 602 001

With Best Compliments From :

Rani Engineering Works

5, Kuthalamman Koil Street
MADRAS-600 081
Phone : 554025 555245

8, South Prehesem Street
MADRAS-600 019

With the best wishes to :

Phone : 417713

T. BALASUNDARAM A.M.I.W.W.A.
CIVIL & SANITARY ENGINEERING CONTRACTOR
No. 26, II Street,
Karpagam Avenue, Raja Annamalaipuram,
Madras-600 028.

---

with best wishes from :

Thiru D. Bharathan

PWD CONTRACTOR
28, Valluvan Street
Arumbakkam, Madras-600 029.

